188

உ

புலிப்பாணி ஜாலத்திரட்டு

(சிதம்பரபூஜை, விநோதஜாலம்)



10 OCT 1940
MADRAS

பு. இரங்கசாமிமுதலியார் ஸன்ஸ்
பூமகள்விலாச அச்சுக்கூடம்
சென்னை

விலை] 1940 [அணா 8

நெ-24, தாண்டவராயப்பிள்ளை வீதி.

உ

கடவுள் துணை

புலிப்பாணி

ஜாலத்திரட்டு

இதனுள்

சிதம்பரபூஜை, விநோதஜாலத்திரட்டு

அடங்கியுள்ளன



அ. இரங்கசாமிமுதலியார் ஸன்ஸ்

பூமகள்விலாச அச்சுக்கூடம்

சென்னை

விலை] 1940 [அணா 8

நெ-24, தாண்டவராயப்பிள்ளை வீதி.

உ

சிவமயம்

முத்துவீராமமுனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

ஜாலத்திரட்டு

காப்பு-கலிவிருத்தம்

கங்கைவேய்ந்தெழிற் கயிலைமால்வரைச்
சிங்கவாகனத் தெழுந்தருள்தேவனார்
பங்கயமலரடி பணிந்துஜாலமொன்
றங்கண்மாநிலமிசை யறைகுவாமரோ. 1

வசியம்

யாவருங்கைவல்ய மாகவேயொரு
தாவருமந்திரந் தையல்பாகனார்
காவனந்திருக்குமுன் களித்துச்சொன்னது
நீவிரும்பியது நிகழ்த்தக்கேட்டியால். 2

அளவொடுமாறுகோ டரிதிலறியவாங்
கெளிதினிலாறுகோ டெதிரிற்கிறிநன்
குளநமசிவயவென் றுரைக்குமக்காத்
தெளிவுறமற்றதிற் றீட்டியம்மவோ. 3

ஐம்புலச்சேட்டையை யகற்றிவானமு
மும்பரும்பரவிய வெம்பிரானடி
யம்புயங்கடைபிடித் தத்தியாதனத்
தும்பரினிருந்துவோ நமசிவாயவே. 4

என்றுவண்மலரிணை லிதயநெக்குற
வொன்றுநூறுயிர முருச்செபிக்கினே
கன்றுபின்றொடர்பசுக் கடுப்பயாவரும்
பின்றொடவரிது பேசல்வேண்டுமோ. 5

பேயோட்டல்

புத்தியைவிலக்கியிப் புவியின்மேலுமுன்
மத்தநோய்புரிதரும் வலியபேயெலாஞ்
சித்தநைந்தோடிடச் செய்யுமந்திர
மித்தலவரப்பிலொன் றியம்பக்கேட்டியால். 6

வருவயநமசியென் றுரைக்குமந்திரங்
குருமுகமுணர்ந்தெழிற் குமரவேடனைத்
தருமுதலவனடித் தாளதாமரை
யிருதயமலரினி லிருத்தியாங்கரோ. 7

ப்ழுதில்வெட் பாலையம் பலகைமீமிசை
யெழுதுசித்திரமென விருந்துசக்கரம்
வழுவறப்பொறித்துமுன் வைத்துநூறுபத்
தெழுபதினாயிர மியம்பினம்மரோ. 8

அலகைவெம்பூதங்க ளாகியாம்பல
பில்லிசூனியங்கள் பறக்குமன்றியும்
நிலமிசைவருந்திய கெடியநோயெலாம்
உலவியவளிச்சரு கொக்குமென்பவே. 9

கைகால்கள் முடக்கல்

பாவையொன்று பருமுருக்கத்தினால்
ஆவலோடுசெய் தப்பதுமைவயிற்
றூ[illegible]வின்மாப்பது மையொன்றியற்றிவைத்
தேவின்முள்ளூட னெச்சலுரோமமும். 10

பேரும்வைத்துப் பிரபலமாகவே
பாருளோருண ராதுபயிரவ
னாருந்திரு மந்திரமாயிரம்
ஈரிரண்டங் கிருந்துசெபித்தரோ. 11

ஆணியொன்றெடுத் தங்கையிலாவது
காணருங்கழற் காலினிலாவது
பூணின்வாத பிடிப்பதுபோலவே
காணுமற்றிது வண்டுகொள்வாயரோ. 12

வேடிக்கை வித்தை

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்

வேடிக்கை விளையாட்டொன்று விளம்புவேன் கேணிவைப்பில்.
மூடிக்கை யிருந்தால்பாரு மோகிப்பர் விரிப்பின்வாளாக்
கோடிக்கை விடுவாரும்மை குலவிய தேங்காயொன்று
நாடிக்கை யாலேவாங்கி நானில மறியமாதோ. 13

மற்றதைத் தொளைத்துப்பச்சை வாளர வென்றுபோட்டுக்
குற்றமில் லாமல்வாயைக் கோதற மூடிதூபம்
முற்றவே கொடுத்துச்செவ்வாய் முதற்குழி கல்லில்வைத்துச்
செற்றமீ லன்பினோடு தினமதே மூனபின்னே. 14

எடுத்தொரு கல்வத்திட்டே யெரித்துநீ தைலம்வாங்கிக்
கடுத்தும் பியவெம்மானைக் கருத்தினி லிருத்திப்போற்றி
விடுத்தொரு விளக்கிற்றீபம் விளங்கவே யேற்றிநோக்கின்
அடுத்தவப் பசியபாம்பே யகமெலாந் தெரியுமென்றே. 15

ஜாலத்திரட்டு முற்றிற்று.

சிவமயம்

பலதிரட்டுச் சூஸ்திரம்

காப்பு

வேதாந்தநாயகியே விமலவேணி
வீரமாகாளியம்பாள் ருத்திரரூபி
நாதாந்தப்பேருளே யகோரிவீரி
நாரணியேகாரணியே தேவிசத்தி
மூதாந்தமூர்த்திபரா பரையேதுர்க்கை
மூவருக்குமுதற்பொருளே யான்த்தாய்
மாதாநந்தமையீன்ற ஏகவல்லி
மாமுகத்தோன்பலதிரட்டு காப்புத்தானே. 1

நூல்

முப்பூமுறை

தானென்றமுப்பூவைச் சொல்லக்கேளு
தருவானவண்டமடா வாதியாதி
கானென்றவண்டத்தைக் கொண்டுவந்து
கடிதாகநொறுக்கியதை ரூபாய்போலே
மானென்றபூநீற்றைக் கரைத்திறுத்து
மைந்தனேயதிற்போட்டுக் குறுகக்காய்ச்சி
பானென்றஜலம்விட்டுக் கழுவிப்போடு
பண்பானரவிதனிலே யுலரப்போட்டே. 2

போட்டே நீசுன்னக்கல் நாலுநாழி
போட்டதிலே நீருற்றி விட்டுநீற்றி
நாட்டே நீகலக்கியதைத் தெளியவைத்து
நாயகனேமறுசட்டி தனிலிறுத்துக்
கூட்டே நீயண்டஜல மதிலேபோட்டுக்
குறுக்கியேகாய்ச்சியதை யெடுத்துக்கொண்டு
ஆட்டே நீகுழிக்கல்லி லிந்நீர்விட்டு
அப்பனேமைபோல வரைத்துத்தீரே. 3

தீரே நீயுலரவைத்து வில்லைபோலே
திறமாகக்காய்ந்தபின் யெடுத்துமைந்தா
சீரே நீயுலையில்வைத் தூதுவூது
சின்மயத்தின்சுன்னமதை யென்னசொல்வேன்

பாரே நீசுன்னமது ஆகுமட்டும்
பாங்காகயிந்நீரி லரைத்தேயூது
வீரே நீகரைத்தேற்றி மைந்தா நீயும்
விதமானசுன்னமதைக் கலக்கிப்போடே. 4

போடே நீகாரையினற் பாத்திகட்டிப்
பொங்கமுடன்வெந்நீரை பதிலேவாரு
நாடே நீயதையவிழ்த்துக் கரைத்துநன்ராய்
நாயகனேதெளிவிறுத்து நவநாள்வாரு
ஆடே நீரவிதனிலே யுலரவைத்து
அப்பனேயன்பாகச் சத்திபூசை
தேடே நீகணபதியின் பூசைசெய்து
திறமாகக்குப்பியினி லடைத்துவையே. 5

வையே நீமலைச்சாம்ப லமுரிநீரில்
வகையாகச்சமன்கொண்டு கலக்கித்தேற்றிச்
செய்யே நீதெளிவிறுத்துப் பாத்திதன்னில்
செயலாகவொன்பதுநாள் மட்டும்வாரு
மையே நீயுப்பாகு மெடுத்துக்கொண்டு
மைந்தனேகுப்பியிலே பதனம்பண்ணு
கையே நீயுடம்பெல்லா மிந்தப்பாகம்
கருவாகவெடுத்தக்கா லுப்பேயாமே. 6

உப்பான முப்பூவைச் சமனாய்சேர்த்து
உத்தமனேமாதர்விடாய் நீராலாட்டி
ஒப்பாகவில்லைசெய் துலரவைத்து
ஒளிவானமுழப்புடத்தி லுகந்துபோடு
வெப்பானபுடமாறி யெடுத்துக்கொண்டு
விதமானகுப்பியிலே வைத்துப்பூசி
செப்பானமுப்பூவின் சுன்னத்தாலே
செயமாகுந்தொழில்களெல்லாஞ் சித்திதானே. 7

ரசக்கட்டு

சித்தியாய்ரசக்கட்டு சொல்லக்கேளு
சிறப்பானபன்றியின் பாலாற்கட்டு
புத்தியாய்க்குட்டியெல்லா மடைத்துவைத்துப்
பொங்கமுடனுதயாதி துடங்கும்போது
வெற்றியாய்குட்டியொன்று குடிக்காவிட்டால்
விதமாகப்பால்நிரம்பி மூக்கிற்சிந்தும்

பத்தியாய்ப்பவனமுடன் பிசைந்தழுத்திப்
பாங்காகச்சத்தியாய் ரசத்தைவாரே. 8

வாரே நீவராகனிடை யைம்பத்தொன்று
வளமாகமுன்சொன்ன முப்பூச்சுன்னம்
பாரே நீவராகனிடை யொன்றுதூக்கிப்
பதமாகச்சத்தியுட பூசைசெய்து
சீரே நீவாயிலிட்டுச் செலுத்திப்போடு
செம்மையாய்வாய்மூக்குங் காதுந்தைத்துத்
தேரே நீபுதுப்பாண்ட மதிலேயிட்டுத்
திறமாகவெடுக்கரச மணியுமாமே. 9

ஆமே நீநாகமொன்று தங்கமொன்று
அடைவாகரசக்கட்டு ஒன்றுங்கூட்டி
வாமே நீதங்கமதை யுருக்கிக்கொண்டு
வளமாகரசக்கட்டு நாகஞ்சேரு
தாமே நீசெம்பதிலே பத்துக்கொன்று
தான்கொடுக்கவொன்பதரை மாற்றுமாகும்
நாமே நீகெந்தியிட்டுச் செந்திரித்தால்
நாயகனே நவலோக வேதையாமே. 10

திலகமுறை

ஆமே நீவசியமொன்று மையைக்கேளு
அமைவானகஸ்தூரி மஞ்சளப்பா
வாமே நீயூசியென்ற காந்தந்தானும்
வளமானகோரோசனை கிராம்புகூட்டித்
தாமே நீபச்சையென்ற பூரத்தோடு
தயவானசாதிக்காய் வராகன்கால்தான்
நாமே நீயிதுவெல்லாம் பொடியாய்ச்செய்து
நாயகனேவெண்டுகிலில் நீபரத்தே. 11

பாத்தியேதலைமஞ்சங் கொடியுங்கூடப்
பண்பாகக்குருபாதந் தனைநினைந்து
அரத்தியேதிரியாக்கிக் கருச்சீலைசுற்றி
யப்பனேதாமரை நூல் மேலேசுற்றி
வாத்தியேகாராவி னெய்யைத்தானும்
வளமானசிரசோடு தன்னிலிட்டு
சிரத்தியேசிரசோட்டில் நெய்யைவார்த்து
சிவசிவாவிளக்கேற்றி மையைவாங்கே. 12

வாங்கியேபுழுகுடன் சவ்வாதுங்கூட்டி
வளமாகமத்தித்துச் சிமிழில்வைத்துப்
பாங்கியேமோகினிக்குப் பூசைசெய்நீ
பண்பானமந்திரந்தான் சொல்லக்கேளு
தாங்கியேபூசையது வாலைபூசை
தயவாகப்பூசித்துத் தியானமோது
ஆங்கியேஸ்ரீம்இரீம் கிலீமென்ரேுதி
ஆக்ருஷணிமோகினி யென்றங்கெண்ணே. 13

எண்ணவேதியானமொரு லட்சமோது
என்னசொல்வேனுலகமெல்லாம் வசியமாகும்
நண்ணவேதங்கத்தால் வெள்ளியாலும்
நல்லசிமிழ்குச்சுசெய்து திலகம்போடு
பண்ணவேதேவராட் சதர்கள்தானும்
பண்பானபுருஷரொடு மாதர்யாரும்
அண்ணவேகேட்டதெல்லா மீவார்பாரு
அப்பனேபகையெல்லா மற்றுப்போமே. 14

போமேதான்மாற்றமொன்று சொல்லக்கேளு
பொலிவானஜங்கோலப் பிண்டம்வாங்கி
நாமேதான்சூரணித் தெடுத்துக்கொண்டு
நாயகியாள்சீலையிலே வைத்துருட்டி
ஆமேதான்சிரசோட்டில் காராநெய்யில்
அப்பனேமையெரித் தெடுத்துக்கொண்டு
வாமேதான்திலகமிட மறையும்பாரே
வளமானமாற்றமீ ததிகசித்தே. 15

அஞ்சனம்

சித்தான அஞ்சனந்தான் சொல்லக்கேளு
சிறப்பானமூலிகையொன் றுரைப்பேன்மைந்தா
முத்தான ஆடாதோடை மூலியப்பா
முதன்மையாமதினுடைய கிழங்கைக்கண்டு
பத்தானஎண்பேத மெட்டுஞ்செய்து
பண்பானவதினுடைய கிழங்குவாங்கி
வித்தானகுழியம்மி தன்னிலப்பா
விதமானகிழங்கதிலே வராகன்போடே. 16

போடப்பாவதினுடைய பழந்தானையா
பொங்கமுடன்கோரோசனை யுப்புங்கூட்டி

ஆடப்பாவிளக்கிட்டுச் சாரைநெய்யா
லன்பாகவெட்டுண்ட சிரசினேட்டில்
கூடப்பாமையெரித் தெடுத்துக்கொண்டு
கூர்மையாம்சற்குருவின் பாதம்போற்றி
நீடப்பாமுக்காலும் பூசைசெய்து
நினைவாகப்புற்றினிட தேனிலாட்டே. 17

ஆட்டையிலேகுழியம்மி வெடித்துக்காணு
மப்பனேபாதாளங் கெசமாய்த்தோணும்
கூட்டையிலேவழித்தெடுத்துச் சிமிழில்வைத்துக்
குருவானகணபதிக்குப் பூசைசெய்து
நீட்டையிலேயஞ்சனுதேவி யனுமார்க்கும்
நிச்சயமாய்ப்பூசைசெய்து கண்ணிற்போடு
காட்டையிலே நதிகளெலாங் கண்ணிற்ருேன்றுங்
கனிவாகக்கிண்டியதை யெடுத்துக்கொள்ளே. 18

மாரணம்

கொள்ளவேமாரணத்தைச் சொல்லக்கேளு
கொடிதானபாவமடா சொல்லொணுது
அள்ளவேமாரணசக் கரத்தைக்கீறி
அடைவாக நீர்மலமுங் காற்கீழ்மண்ணும்
விள்ளவேகருவதிலே யரைத்துப்பூசி
விதமானவவன்பேரு மழுந்தநாட்டித்
தள்ளவேநாகத்தின் வாயினுள்ளே
தான்செலுத்தித்தலைகீழாய்த் தூக்கிக்கட்டே. 19

கட்டியேசமர்த்தென்ன வெட்டியப்பா
கருவான நிம்பநெய்யி லோமம்பண்ணு
தெட்டியேதென்முகமா யிருந்துக்கொண்டு
திறமாகச்செபிக்குமந் திரத்தைக்கேளு
கிட்டியேமசிநசி யென்றேயோது
கிருபையுடனெட்டுநாள் செபித்தாயானல்
நெட்டியேவாங்குமடா ஆரானுலும்
நிமிஷத்திற்கொல்லுமடா கண்டுபாரே. 20

பேதனம்

பாரப்பாபேதனத்தைச் சொல்லக்கேளு
பண்பானவூமத்தங் காய்தான்ரெட்டை

சேரப்பாவெதிரியிட காற்கிழ்மண் ணும்
சிறப்பாகவதிற்செலுத்தி யவன்பேர் நாட்டி
வீரப்பாபேதனத்தை நன்றுயோதி
விதமாகவவனிருக்கு மூரைச்சுற்றி
கூரப்பாமயானத்திற் புதைக்கும்போது
குருவானகருக்கூட்டிப் புதைத்துப்போடே. 21

புதைத்தவுடன்பக்கமதிற் பிரமைகொள்ளும்
பொல்லாதகோஷ்டியெல்லா மனேகஞ்செய்யும்
வதைத்தமட்டுந்தேசமெங்குஞ் சுற்றிமாள்வான்
வையகத்தோர்தான்பழித்துச் சிரிப்பார்பாரு
பதைத்துபதைத்தலைந்தலைந் தழுவானப்பா
பழிகாரன்பாவிபவ னென்னசொல்வேன்
கதித்தமனத்துடன்வந்து காலில்வீழ்ந்தால்
கருவாகவதையெடுத் தாற்றில்போடே. 22

வித்துவேஷணம்

போடவேவித்துவே ஷணத்தைக்கேளு
பொலிவானவேம்பின்மேற் காக்கைகூடு
நாடவேகழுதையுட சடையுங்கூட்டி
நாயகியாளறுத்தகயி றதுவுஞ்சேர்த்து
கூடவேபஞ்சுவெட்டி யறுந்துபோன
குணமானநரம்பதுவும் பன்றிரோமம்
சாடவேபித்தனிகம் பித்தக்கூடை
சலாயனச்சுளகுடனே சித்தியாமே. 23

ஆமேநீமுச்சந்தி மீதில்மண் ணு
மப்பனேயுட்கொளுத்தி யடுப்பில்வைத்து
தாமேநீதென்னமுகம் நிர்வாணரூபந்
தயவாகத்தான்சுட்டுச் சாம்பலாக்கி
வாமேநீயறுகோண மீதிற்கீறி
வளமாகதூமசி யென்றுநாட்டி
நாமேநீமந்திரந்தான் தூம்தூம்சீசீ
நண்ணியோம்நசிநசி யென்றேயோதே. 24

ஓதியேயெடுத்துவந் தெதிரிபேரை
ஒளிவாகத்தான்முடிந் திறப்பில்வைக்க
பாதியேபடிவாசல் தூக்கிப்போட்டால்
பதிகெட்டுயிருவருமே பிரிந்துபோவார்

வாதியேவடமொழியில் முன்னோர்சொன்ன
வளமானவழியெல்லாந் தமிழிலப்பா
நீதியேதப்பாம லெடுத்துநன்றாய்
நீணிலத்தோர்தான்பிழைக்கப் பாடினேனே. 25

பாடியேநரம்பெலும்பு மயிருங்கூட்டிப்
பண்பில்லாச்சுடலையுட சாம்பல்சேரு
ஆடியேயுடும்பினது தலையுங்கூட்டி
யப்பனேநாய்ப்பல்லு மதனிற்சேர்த்து
சூடியேயெட்டியிலே மாடன்செய்து
சுகமானபுதுக்கலசந் தன்னில்வைத்து
நாடியேயிதுவெல்லா மதனிற்போட்டு
நலமானமாடனைவிட் டோதுவாயே. 26

ஓதவேவண்ணா வுதிரமாடன்
ஒளிவானவக்கினி சண்டிவிஞ்சைபாரு
வாதாகக்கறுத்தநாய் போலுமிக்க
வளமானகுரங்குபோல் பூனைபோலும்
ஆதரவாய்ப்புலிபோலுங் கரடிபோலும்
அடைவானபெரும்பன்றி போலுநிற்கும்
பேதையேபேய்போலும் பூதம்போலும்
பிடித்திழுத்துக்கடிப்பதுபோற் செய்யுமாடன். 27

மாடனைத்தானுருவேற்றி வைத்துநீயும்
மைந்தனேபூசைசெய் தெதிரியில்லில்
தாடனமாய்க்கலசமதை யுடைத்தபோது
தட்டழிந்தேயவன்குலமு நாசமாகும்
வீடவேவியாதியிலே யழுந்துவார்கள்
விதம்விதமாய்மாடுகண்க ளுயிருஞ்சேதம்
ஈடலையத்திரவியமு மழிந்துபோகு
மினியவேளாண்மைமுதல் நாசமாமே. 28

ஆமேதானெதிரி நின்ற பேரையெல்லாம்
அடைவானகாரீயத் தகட்டிற்கீறி
வாமேதானங்காய மரைத்துப்பூசி
வளமானகலசமதில் தாக்கிப்போடு
தீமேதான்சத்துருக்கள் வணங்கிவந்தால்
திறமாகத்தானெடுத்துப் பாலிற்போடு

நாமேதானேடுகிற சலத்திற்போடு
நலமாகநிவர்த்தியாய்ப் போகும்பாரே. 29

கள்ளனைப்பிடிக்க

பாரப்பா நிலவாகை மலைகள்தோறும்
பண்பாகத்தானிருக்கு மறிந்துபாரு
வாரப்பாவதினுடைய விரையைத்தானும்
வளமாகப்பத்துபல மெடுத்துவந்து
சீரப்பாதலைமஞ்சங் கொடியுமாவும்
சிறப்பாகமுப்பூவும் வராகன்கூட்டிச்
சேரப்பாவில்லைதட்டி யுலரப்போடு
திறமாகவுலர்த்தியதைத் தயிலம்வாங்கே. 30

வாங்கியேயாள்காட்டிமுட்டைதன்னை
வளமானசிற்றண்டத் தயிலம்போலே
தாங்கியேவாங்கியதைத் தயிலநேரே
தயவாகத்தானெடுத்துச் சிமிழில்வைத்து
ஓங்கியேகளவுமுதற் சூன்யம்யாவு
முற்றுப்பார்தோற்றுமடா கள்ளமெல்லாம்
நீங்கியேயதுகண்டு பிடித்துக்கொண்டு
நினைவாகக்குருபாதம் பணிவாய்தானே. 31

குறிசொல்ல

தானேதான்குறிசொல்லும் விவரங்கேளு
தயவாகப்பச்சையென்ற புழுகுகோஷ்டம்
மானேதான்பச்சையென்ற பூரத்தோடு
மைந்தனேசந்தனமுஞ் சமனுய்சேர்த்து
பானேதான்சலம்போட்டு மைபோலாட்டிப்
பண்பாகக்கைதனிலே பூசிப்பின்னே
வீணேதான்போகாமல் திரிகோணமிட்டு
விதமானஸ்ரீங்கார முள்ளேநாட்டே. 32

நாட்டியேமந்திரத்தைச் சொல்லக்கேளு
நலமாகத்தான்செபிக்க மூன்றுகாலம்
ஓட்டியேஓம்நமோ பகவதேஓம்
உக்ரமாகாளிசா முண்டியாயி
நீட்டியேவயிரவிசாம் பவியோங்காரி
நிமலிமகாசத்திநமா நமகாவென்றே

ஆட்டியேலட்சமுட னுயிரத்தெட்
டன்பாகத்தான்செபிக்கச் சித்தியாமே. 33

சித்தியாய்வருமளவு மூன்றுகாலஞ்
சிறப்பாகத்தலைமுழுகித் தியானமோது
பத்தியாயொருபொழுது அமுதுகொள்ளு
பாங்காகமுன்னெடுக்குங் கவளந்தன்னை
நத்தியேமுன்னிறப்பின் மேலேவைத்து
நலமாகவேஷ்டியிலே படுக்கவேணும்
வெற்றியாய்வஸ்துடனே சுத்திவைத்து
விதமானமுதற்பூசை செய்குவாயே. 34

செய்யவேமண்டலத்தில் சித்தியாச்சு
செய்தொழில்களின்னதென்று சொல்லலாச்சு
பையவேமுன்னடந்த சேதியெல்லாம்
பண்பாகநினைத்ததெல்லாஞ் சொல்லும்பாரு
அய்யனேபுகையதுவுங் குடிக்கலாகா
தடைக்காயும்வெள்ளிலையு மிகுந்துபோடு
நையவேகன்னத்திற் கையைவைத்து
நடந்தவொருசேதியெல்லாஞ் சொல்லுவாயே.

சொல்லவேநின்றதொரு வேங்கைக்கட்டை
சோபிதமாய்செய்தபின்பு சொல்லக்கேளு
வெல்லவேயோனுன்தோ லுரித்துக்கட்டி
விதமானபேதனச்சக் கரத்தைக்கீறி
நல்லுவேசலாகையிற் சக்கரத்தைச்சுற்றி
நாயகனேயுட்பதித்துக் கட்டித்தீரு
மல்லவேயடித்திடவே யெதிரியெல்லாம்
மதிமயங்கிவாய்புலம்பப் பகருவேனே. 36

சொக்குத்தூள்

பகருவேன்பொடியொன்று சொல்லக்கேளு
பாங்கானசொக்குடைய பாக்கைவாங்கி
திகழவேயப்பையுட மூலத்தோடு
சிறப்பானநிலப்பனையுந் தாளிவேரும்
புகழவேபேயத்திப் பேயால்வேரும்
பொலிவானகுப்பையுட மேனிவேரும்
அகழவேவேளைவேர் கழற்சிவேரும்
அப்பனேயூமத்தம் வித்துஞ்சேரே. 37

சேரப்பாதலைமஞ்சங் கொடியுங்கூடச்
செயலானமாதர்விடாய்ச் சீலைகூட்டி
பாரப்பாபித்தனுட சாம்பல்மண்டை
பாங்கானவூமைமண்டைப் பொடியுஞ்சேர்த்து
தீரப்பாவிதுவெல்லாஞ் சமனுப்க்கூட்டித்
திறமாகப்பொடிசெய்து வைத்துக்கொண்டு
கூரப்பாபேயத்திப் பேயால்பாலும்
கூடவேதான்சேர்த்துப் பொடித்திடாயே. 38

பொடியெடுத்துத்தூவிவிட்டாற் சகலபேரும்
பொறிகலங்கிமதிமயங்கிக் கிடப்பார்பாரு
மடிபிடித்துத்தான்புரட்டிப் பொருள்கொண்டாலும்
மங்கையரைப்புணர்ந்தாலு மறிவிராது
தடியெடுத்தேயடித்தாலு நினைவிராது
தயவாகச்சலமங்கே தெளிக்குமட்டும்
வடிவெடுத்தபோகருட கடாட்சத்தாலே
வழுத்தினேன்புலிப்பாணி சொக்குத்தூளே. 39

விந்து ஸ்தம்பனம்

தூளைவிட்டுஇன்னமொன்று சொல்லக்கேளு
துலக்கமுள்ளபாளைவித் தெடுத்துவந்து
பாளையென்றவிந்துதா னிறுக்கிவைக்கும்
பண்பான பூமிசக்கரையின்மூலம்
காளையென்றபூனையுட காலிவித்து
கனிவாகவகைவகைக்கு வராகன்ரெண்டு
ஆளவேயாவின்பால் தன்னுலாட்டி
யடைவாகப்பன்னிரண்டு நாள்தான்கொள்ளே.

கொள்ளவேயந்திசந்தி கொண்டபோது
கோடிபெண்ணையணைந்தாலுங் கழிந்திடாது
தள்ளவேமாற்றதுவுஞ் சொல்லக்கேளு
தயவாகத்தண்ணீரிற் கழுத்துமட்டும்
விள்ளவே நின்றக்கால் கெலிக்குந்தேகம்
விதமாகவெலுமிச்சம் பழத்தையுண்ணு
அள்ளவேபோகருட கடாக்ஷத்தாலே
அடைவாகப்புலிப்பாணி விளம்பினேனே. 41

வசியம்

விளம்பியேயின்னமொன்று சொல்லக்கேளு
விதமானசூரியனார் காந்திப்பூவும்

தளும்பவேசெங்கழு நீர்ப் பூவினேடு
தயவானமுல்லைப்பூ மாம்பூகூட்டி
குளம்பவேகோழி யாவாரைப்பூவுங்
கொடிதானவெள்ளைக்கா வளையின்பூவும்
கிளம்பவேசெவ்வலரிப் பூவுங்கூட்டிக்
கெணிதமுடன்கரிப்பாஞ்சார் கூடச்சேர்த்தே. 42

சேர்த்தப்பாபூவையெல்லாஞ் சார்பிழிந்து
சிறப்பாகவோரெடையா யொன்றில்வாரு
பார்த்தப்பாகொம்புத்தேன் கூடச்சேர்த்து
பண்பானகலவத்தி லரைக்கும்போது
கூர்த்தப்பாபெண் ணுடைய மதுவுங்கூட்டிக்
குணமானகொடுஞ்சினையுங் கூட்டியாட்டு
கோர்த்தப்பாபுழுகுடனே பச்சைப்பூரங்
கொடிதாகவகைவகைக்கு வாரகன்காலே. 43

காலானவிதுவெல்லா மரைத்துமைபோல்
கட்டாகச்சிமிழதனி லடைத்துக்கொண்டு
பாலானமயானமதில் தான்புதைத்து
பண்பாகமூன்றுநாள் மோகினியையோது
சேலாகமுன்சொன்ன மந்திரந்தான்
செப்புவாய்தினமொன்றுக் காயிரந்தான்
வாலாயமோகினியைப் பூசைசெய்து
வளமாகத்திலகமிட வசியம்பாரே. 44

பாரடாவையகத்து மாதரெல்லாம்
பார்த்தவுடன்மதிமயங்கி மூறையுங்கெட்டுச்
சேரடாவென்பாருங் காலில்வந்து
சிறப்பாகவிழுவாரும் வணங்குவாரும்
கூரடாகுலமழிந்து வலதுகெட்டுக்
குடிகெடுத்தகாமவெறி கொண்டுபின்னே
தீரடாபொருள்கொடுப்பார் வேணமட்டும்
திறமானவுசியமிது திண்ணந்தானே. 45

கற்பம்

திண்ணந்தான்கற்பமொன்று சொல்லக்கேளு
திறமானவிழுதியிலை கிழங்குமுண்டு
வண்ணந்தானதையறிந் தெடுத்துக்கொண்டு
வளமாகக்கொண்டுவர மண்டலந்தான்

நண்ணந்தான்காயசித்தி யாகும்பாரு
நலமானவெள்ளறு கிந்தவிதம்பாரு
வண்ணந்தான்வேறில்லாக் கொத்தானுக்கு
வன்பாகவதினேரே கிழங்குண்டாமே. 46

ஆகுமேகாயசித்தி மண்டலத்தில்
அப்பனேயாகுமடா.கண்டுபார்நு
போகுமேநோய்களெலா மகன்றுபோகும்
பொன்னுலகிற்றேவரெலாம் வசியமாவார்
வாகுமேஜெகவசிய மாகும்பாரு
வளமானசித்தரெலாம் கண்ணில்தோற்றும்
நாகுமேபோகருட கடாட்சத்தாலே
ந்ல்மாகப்புலிப்பாணி பாடினேனே. 47

பர்டினேனின்னமொன்று சொல்லக்கேளு
பண்பானகாயசித்தி சுறுக்குமெத்த
ஆடினேன்மலைதோறு மூண்டுவுண்டு
அடைவானபொற்சீந்திற் கிழங்குமைந்தா
தேடியேயுண்ணநரை திரையுமாறும்
தெளிவானவயசதுவும் வாலையாவாய்
நாடியேபோகருட கடாட்சத்தாலே
நலமாகப்புலிப்பாணி சொன்னேன்பாரே. 48

இரசபற்பம்

பாரப்பாரசபற்பஞ் சொல்லக்கேளு
பண்பானசுத்திசெய்து ரசத்தையப்பா
சேரப்பாகுழியம்மி தன்னிற்போட்டுச்
சிறப்பானவிடத்தலையி னிலைதான்வாங்கிக்
கூரப்பாவாயிலிட்டு மென்றுமென்று
கூசாமலுமிநீரை விட்டுஆட்டு
தீரப்பாநால்சாம மரைத்தெடுத்துத்
திரமாகவில்லைசெய்து ரவியில்போடே. 49

போடப்பாவிடத்தலையைக் கவசங்கட்டிப்
பொங்கமுடனோட்டில்வைத்துச் சீலைசெய்து
சாடப்பாகுக்குடத்தில் வெளுத்துப்போகும்
சார்வாகவதையெடுத்து வைத்துக்கொண்டு
ஈடப்பாவியாதியென்ற குணத்துக்கெல்லா
மிதமாகப்பணவிடைதா னென்றேயாகும்

நாடப்பாபனையினுட கருப்புக்கட்டி
நலமானபசுவின்வெண்ணெய் தேனுமாமே. 50
ஆமென்றேயாறுநா ளிரண்டுவேளை
அப்பனேகொண்டவுட னெரிவுகாணும்
வாமென்றவாவின்பால் நெய்புமாகும்
வளமானசீனியுட னிளநீராகும்
தாமென்றகுளிர்ந்தநீர்வாருவாரு
த்யவாகவீரைஞ்சு மூவாறுக்கும்
போயென்றபத்தியந்தா னீராறப்பா
பொங்கமுடன்கொண்டபின்பு வியாதிபோமே. 51

வசிய மூலிகை

போமடாமூலியொன்று சொல்லக்கேளு
பொங்கமுடன்மிளகுசா ரணையின்மூலம்
ஆமடாவெள்ளியிலே காப்புக்கட்டி
அடைவாகப்பொங்கலிட்டுப் பலிகொடுத்து
தாமடாசத்தியில்தா னடைத்துக்கொண்டு
தயவாகவணிந்திடவே பலனைப்பாரு
வாமடாபெண்களெல்லாம் வசியமாவார்
வந்தபெண்கள்தான் தியங்கி மயங்குவாரே. 52

புருஷ வசியம்

மயங்குவார்புருஷரெலாம் வசியமாவார்
மைந்தனேயூமத்தைப் பொன்னாங்காணி
தியங்குவார்செம்முள்ளி சிவந்தகஞ்சா
திரமானசெங்குவளைப் பொன்னுவாக்ர
கயங்குவார்புழுகுகா ரமையோடு
கரியகோரோசனை புல்லாமணக்கு.
வயங்குமிம்மூலியெல்லாஞ் சாறுவாங்கி
விளமாகச்சாக்கெல்லாம் வராகனென்றே. 53
ஒன்றானமூலிசெந்நா யுருவிமூலம்
உத்தமனேவகைவகைக்கு வராகன்சாறு
பன்றானகுழியம்மி தன்னிலிட்டுப்
பண்பாகமைபோலே யரைக்கும்போது
கன்றாதகொம்புத்தேன் காராவெண்ணெய்
கருவென்னசிற்றண்ட முடைத்துவிட்டு
நன்றாகச்சிமிழதனி லெடுத்துவைத்து
நாயகியாள்திலகமிட வசியமாமே. 54

வசியமப்பாபுருஷரெல்லாம் வணங்குவார்கள்
வளமாகக்கேட்டதெல்லா மீவார்பாரு
உசிதமாய்ச்சேர்ந்தோர்கள் பிரியார்பாரு
உத்தமனேயவள்வாசல் காத்துநிற்பாள்
அதிகமாய்க்காணுவிட்டால் மயங்குவாளே
அழுதுநிற்பாள்சிணுங்குவா ளையோவென்பாள்
நிசிதமாயிருந்தபெண் ணும் ரதியேயாகும்
நிமைகண்டால்மோகிப்பாள் கண்டுபாரே. 55

பல்லு விழுதல்

பாரடாவுக்காணைப் பிடித்துவந்து
பாவியென்றசத்துரு தம்பலத்தைவாங்கி
சேரடாவதன்வாயிற் செலுத்திப்போடு
செம்மையாய்க்கருக்கூட்டிப் பேரும்நாட்டி
வீரடாபாதையிலே தலைமைலோக
விதமானதலைவாசல் தன்னில்தாக்குச்
சீரடாமண்டலத்திற் பற்களெல்லாஞ்
சிதறியேவிழுந்துவிடுந் திண்ணந்தானே. 56

கண் கெடுதல்

திண்ணமாயின்னமொன்று சொல்லக்கேளு
திரமான நீரட்டை யாசன்பாலும்
வண்ணமாய்ச்சீலையிலே திரியதாக்கி
வஞ்சகமாய்சத்துருவின் விளக்கிற்போடு
நண்ணயமாய்த்திரியெரிய வெதிரிகண் ணும்
நலமானதிஷ்டியது மறைந்துபோகும்
திண்ணயமாய்நாளெட்டு அந்திக்காலம்
நினைவாகத்தானெரிக்கக் குருடுமாமே. 57

வியாதியுண்டாக்குதல்

ஆமடாமுஞ்சூரைப் பையாய்வாங்கி
யப்பனேயெதிரிநீர் மலமிரண்டும்
வீமடா அதிற்செலுத்திப் பஞ்சுவெட்டும்
விதமானநாற்பதினு லிறுக்கிக்கட்டி
தாமடாஓம்நமோ பகவதிகாளி
தயவாகயேகிநீ சுவாகாவென்று
வாமடாலட்சமுரு வோதச்சித்தி
வளமாகப்புத்திகெட்டு வோதமாமே. 58

ஓதவேயின்னமொன்று சொல்லக்கேளு.
ஒளிவானகருநாபி பச்சைநாபி
வாதடாவூர்தனிலே காற்றுவாட்ட
வளமாகவெருவடுக்கிப் புடத்தைப்போடு
நாதடாபுகைபட்ட மனிதரெல்லாம்
நடுநடுங்கிக்காச்சலால் வியாதிகொள்வார்
ஆதடா அவ்வூரில் நீதான்சென்றே [ணே.
யவிழ்தத்தைத்தான்கொடுத்துத் தீர்ப்பேனெண்
தீர்ப்பதற்குநீலிவேர் சிறுகீரைவேரும்
திறமாகமிளகிட்டுக் கியாழம்வைத்து
காப்பதுதான்பஸ்பமென்று விபூதிபேர்ட்டுக்
கருவாகத்தான்கொடுக்க மூன்றுவேளை
சேர்ப்பதடாமூலி ரண்டுமொருவர்காணச்
செய்யாதேபாஷாண மாற்றென்பார்கள்
ஆர்ப்பாகச்சொன்னபணங் கையில்வாங்கு
அன்பாகவின்னமொன்று சொல்லக்கேளே. 60
கேளடாகள்ளிச்சார் கார்த்திகையின்மூலங்
கெணிதமுடன்பாஷாணத் துரிசுசேர்த்து
பாளடாநேர்வாளங் கறுத்தநாபி
பண்பாகவிதுவெல்லா மிடித்துத்தோண்டி
வீளடாகக்கலத்த சீலையிலேகட்டி
விதமானகழுத்தளவு தண்ணீருக்குள்
ஆளடாதெரியாமல் கல்லேக்கட்டி
அடைவாகவுரைக்கிணற்றில் வைத்திடாயே. 61
வைத்தவுடனீர்குடித்த பேர்களெல்லாம்
வாந்தியும்பேதியுமாய் மயங்குவார்கள்
செத்தவுடனவ்வூரில் நீயேசென்று
செயலானதேவதைக ணிறுத்தவேண்டும்
ஒத்தவுடனிறுத்திவைப்போ மூருள்ளோரே
வுத்தமனேபொன்கொடுப்ப தின்னதென்று
நத்தவுடனதையெடுத் தெறிந்துபோடு
நலமானகிணற்றுநீ ரிறைக்கச்சொல்லே. 62
சொன்னபின்புகணபதிக்கு வீடுதோறுஞ்
சொகுசாகநூறுகுடஞ் சலத்தைவாரு
நன்னயமாய் நீலிவே ரிடித்துத்தோண்டி
நலமாகக்கிணற்றிலறி யாமற்போடு

இன்னபடிவிபூதியினைத் தியானித்தேதா
னெல்லார்க்குநீகொடுக்கத் தெளிந்துபோகும்
அன்னபடியூரெல்லாம் பொங்கலிட்டு
அடைவாகக்கிடாய்வெட்டத் தீருமென்னே. 63

துரிசு சுன்னம்

தீருமேதுரிசுக்கு வேணமட்டும்
திரமாகவொருகட்டி வாங்கிவந்து
வீருமேகலசமதிற் சுன்னக்கல்லை
விதமாகக்காற்கலச முள்ளேபோட்டு
நீருமேகட்டிதன்னை மேலேவைத்து
நிச்சயமாய்காற்கலசங் கல்லைப்போட்டு
சீருமேபாஷாண மிடிச்சத்தண்ணீர்
சிறப்பாகத்தான்றெளிப்பாய் சிறுகத்தானே. 64

தானென்றகலசமதி லோடுமூடித்
தயவாகமண்சீலை வலுவாய்ச்செய்து
தேனென்றரெண்டுமுழக் குழியைவெட்டிச்
சிறப்பானயானைலத்தி கழுதைலத்தி
பானென்றகொடிக்கள்ளி பயிறுபோலே
பண்பாகக்கொண்டுவந்து மூன்றுநேரே
கானென்றகுழியாதி கலந்துகொட்டி
கனிவாகயிருலத்திக் கலந்துவையே. 65

வையப்பாகலசத்தை யதின்மேலே நீ
வகையாகயிருலத்திக் கலந்துகொட்டி
செய்யப்பாகள்ளியுடன் வந்தலத்தி
சிறப்பாகக்குழி நிறையக் கொட்டிப்போடு
பையப்பாமண்போட்டு மூடிப்போடு
பண்பானமண்டலந்தான் கழிந்தபின்பு
கையப்பாயெடுத்ததனைத் திறந்து நீதான்
கருவாகக்காற்றில்லா விடத்தில்வைத்தே. 66

வைத்தகட்டிதனையெடுத்துப் புதுசுன்னக்கல்
வளமாகப்பாஷாணச் சார்விட்டாட்டிச்
செத்தபின்பதையெடுத்துத் திறமாய்மூடிச்
செம்மையாய்மண்சீலை வலுவாய்ச்செய்து
பைத்தபின்புகுக்கிடத்திற் சுன்னமாகும்
பண்பானவதையெடுத்துக் கவசம்வாங்கி

நைத்தபின்புபீங்கானில் வைத்துமைந்தா
நாயகனேகாற்ருடா விடத்தில்வையே. 67

வைத்தபின்பெடுத்துப்பார் துரிசுசுன்னம்
வகையாகப்பொருமியது சுண்ணும்பாகும்
செத்தபின்புசரக்கெல்லா மிதனல்நீறும்
செயமாகுமிச்சுன்னம் ரசத்திற்போடு
நைத்தபின்புயுமிநீரால் மத்தித்தேதான்
நலமாகரவியில்வைக்க யிறுகும்பாரு
உய்த்துநீயுருக்கிடவே வெள்ளியாகும்
உற்றமுறைதப்பாது கண்டுபாரே.. 68

வீரச்சுன்னம்

பாரப்பாசாரமிட்டு வீரமோடு
பண்பாகக்காரமிட்டுப் பூரங்கூட்டிச்
சேரப்பாதுருசுசுன்னஞ் செயநீர்தானுஞ்
சிறப்பாகச்சரக்குகளை யரைத்துப்போடு
வீரப்பாசரக்குகளுஞ் சுன்னமாகும்
விதமானசரக்குகளுஞ் செந்திரிக்கும்
தீரப்பாதனித்தனியே வேதையாகும்
திரமானசெயநீரின் செய்கைதானே. 69

தானென்றவீரத்தைக் கலவத்திட்டுத்
தயவாகயிலைக்கள்ளி யிலைச்சார்விட்டு
கானென்றேயரைத்தவுடன் முசுறுமுட்டை
கனிவாகத்தான்பிழிந் தரைத்துப்போடு
கோனென்றவில்லைதட்டி யுலரும்போது
கொடிதானசிற்றண்டங் கருத்தான்மஞ்சள்
தேனென்றகருத்தடவிக் காயவைத்துத்
திற்மானகள்ளியுட சாம்பல்வாரே. 70

வாரடாவைத்தெரிக்கும் வகையைக்கேளு
வளமானநாழிகைதா னிரண்டாம்பாரு
சீரடாகமலம்போ லெரிக்கச்சுன்லம்
செயமாகவாறவிட் டெடுத்துக்கொண்டு
பாரடாரசஞ்சேர்த்தே யுருக்கவெள்ளிப்
பண்பானசரக்கெல்லாம் பற்பமாகும்
சீரடாமுப்பூவைச் சேர்த்துக்கொள்ளத்
திறமானநவலோகம் வேதையாமே. 71

வங்கவெட்டை

ஆமடாஉருவியுப்பு மேனியுப்பு
அடைவானவுமிநீர் தன்னுலாட்டி
தாமடாகருவங்கக் கட்டிக்கப்பா
தயவாகக்கவசமிட்டு மண்சீலைசெய்து
வாமடாகுக்கிடத்தில் வங்கவெட்டை
வளமாகத்தங்கமொன்று லிங்கமொன்று
காமடாவுருக்கியத்தைப் பின்னும்பாரு
கருவாகச்செம்பொன்று வெள்ளிமூன்றே. 72

மூன்றுடனேதங்கமொன்று தகடுதட்டி
மூன்குருவில்வாகனிடை யிதிலேசேர்த்து
ஏன்றநீகொடுத்திடவே மாற்றேழாகு
மிதமாகச்செந்தூரஞ் செய்தாற்கேளு
நான்றதோர்நவலோக வேதையாகும்
நாலாறுமாற்றுகுங் கண்டுபாரு
வான்றெழுஞ்சீர்ப்போகருட கடாட்சத்தாலே
வழுத்தினேன்புலிப்பாணி விளங்கத்தானே. 73

விளங்கவேசிப்பியுட சுன்னந்தன்னில்
விதமானவெண்காரம் வைத்தெரித்து
துளங்கவேயதையெடுத் துமிநீராலே
சுகமாகத்தானரைத்துக் காரியத்தில்
புளங்கவேகவசமிட்டுச் சிப்பிச்சுன்னம்
புகழுவேன்கீழ்மேலும் வைத்துமூடி
அளங்கவேயோட்டில்வைத்துச் சீலைசெய்து
அடைவாகப்புடமிரண்டில் வெட்டையாமே. 74

ஆமப்பாநாழிகைதா னிரண்டாம்பாரு
அடைவாகமுன்வெட்டைப் படியேசெய்நீ
வாமப்பாவங்கவெட்டை தங்கவெட்டை
வளமானலிங்கத்தின் கட்டுசேர்த்து
தாமப்பாசங்கெந்தி கூட்டியேதான்
தயவாகச்செந்தூரஞ் செய்துபாரு
நாமப்பாயென்னசொல்வோம் வேதைமார்க்கம்
நவலோகமெல்லாமுந் தங்கமாமே. 75

சாரக்கட்டு

தங்கவேதிருகுகள்ளிச் சாம்பல்வாங்கித்
தயவாகவீரேழு பலந்தானப்பா

பங்கமிலாச்சிப்பிசுன்ன மீரேழாகும்
பாங்கானவெடியுப்பு மீரேழாகும்
அங்கமாய்ச்சாம்பலது கீழேழாகும்
அடைவானசிப்பியது கீழேயாகும்
சங்காமாயுப்பதுவுங் கீழேழாகுஞ்
சார்வாகவடுக்கடுக்கா யதனைவையே. 76

வையப்பாசாரமது பலந்தான்ரெண்டு
வளமாகவுப்பிட்டு முன்போல்வைத்து
பையவேமண்சீலை யேழுசெய்து
பாங்கானதீபமொரு சாமமப்பா
கையவேகமலமது சாமமொன்று
கருதரியகாடாக்கினி சாமம்ரெண்டு
உய்யவேயாறவிட் டெடுத்துப்பாரு
உத்தமனேதந்தம்போற் கட்டுந்தானே. 77

தானடாநாகமது வராகன்பத்து
தயவாகவுருக்கையிலே சாமம்ரண்டு
வேனடாகொடுத்திடவே நாகங்கட்டும்
விதமாகச்செம்பிலே பத்துக்கொன்று
கோனடாவயசதுவு மெட்டதாகுங்
குணமாகாசங்கெந்தி சேர்த்துமைந்தா
மானடாசெந்தூரஞ் செய்தாயானால்
மைந்தனேநவலோகம் வேதையாமே. 78

சிறுகண்ணுகச் செந்தூரம்.

வேதையிலேயின்னமொரு போக்கைக்கேளு
வீருனசிறியகண் ணுகமப்பா
போதையிலேகருவங்கம் ரசமுங்கூடப்
பொங்கமுடன்கவுரியப்பா விந்தநாலும்
ஆதையிலேசமனிடையாய்க் கூட்டி நீயு
மன்பாகப்பனங்கள்ளிற் சாமம்நாலு
தீதையிலேபொற்கையான் சாமம்நாலு
திறமையுடன்தானரைத்து வில்லைதட்டே. 79

தட்டியேயுலர்ந்தபின்பு ஓடுமூடித்
தயவாகச்சீலைசெய்து குக்கிடத்திற்போடு
கட்டியேயாறவிட் டெடுத்துப்பாரு
களங்கமிலாச்செந்தூர மென்னசொல்வேன்

தொட்டி நீசெம்பதுவு மேழுங்கூட்டித்
 தொழுதுவெள்ளியதுவுந்தான் மூன்றதாகும்
சட்டமாய்க்குருவொன்று தங்கமொன்று
 சார்வாகக்கொடுத்தவுடன் வேதையாமே. 80

தாளக பற்பம்

ஆகுமேதாளகத்தைச் சுன்னக்கல்லில்
 அப்பனேயமூரிவிட்டுச் சுத்தியேழு
வாகுமேதும்பையிலைச் சாறுபடியொன்று
 வளமானசுறுக்கிட்டுக் கட்டியொன்றாய்
தாகுமேசாவல்ரத்த மிதக்கவிட்டுத்
 தயவாகாவிதனிலே காயக்காய
நாகுமேரத்தமெலாங் கட்டியில்துவட்டி
 நலமாகக்காயவைத் தோடுமூடே. 81

மூடியேமண்சீலை வலுவாய்ச்செய்து
 முழப்புடத்திற்பஸ்பமா யிருக்கும்பாரு
வாடியேக்ஷயமெட்டும் விஷபாகங்கள்
 வளமானசோகையொடு பித்தப்பாண்டு
ஆடியேகாச்சலென்ற வகைகளெல்லாம்
 அப்பனேயெலிகடியும் பிரமைதீரும்
நாடியேபோகருட கடாட்சத்தாலே
 நலமாகப்புலிப்பாணி பாடினேனே. 82

சலாசத்து பற்பம்

பாடினேனுயுருவி யிலையையாட்டிப்
 பண்பானசலாசத்துக் கவசங்கட்டி
நாடியேசீலைசெய்து புடத்தைப்போடு
 நாயகனேபற்பமா யிருக்கும்பாரு
ஆடியே நிச்சயமா யிந்தபற்பம்
 அடைவாகப்பாலையுட கிழங்குநீரில்
சாடியேவெடியுப்பு வாரகனென்று
 சார்வாகப்பற்பமொன்று கொடுக்கப்போமே. 83

போமப்பாசேம்பாலை யரைத்துமைந்தா
 பொங்கமுடன்கோளியப்பா வதனில்விட்டு
ஆமப்பாவெள்வங்கம் வேணமட்டும்
 அன்பாகஉருக்கியொரு சட்டிவைநீ
தாமப்பாநாட்டில்வைத் தெருவடுக்கித்
 தயவாகக்கெஜம்புடக்திற் பற்பமாகும்

வேமப்பாமேகமது யிருபத்தொன்றும்
விதமாகப்பணவிடைதான் வெண்ணெய்யாமே. 84

லோக வசியம்

ஆமய்யா றீம்ஐயுங் கிலியுமென்றே
அடைவாகஸ்ரீம்ஊடனே சவ்வுங்கூட்டித்
தாமய்யா இறீம்கிலீம் ஓமென்றுசொல்லித்
தான்செபிக்கலக்ஷத்திற் சித்தியாகும்
வாமய்யாவறுமையெலா மகன்றுபோகும்
வளமானதேவதையு மன்னர்தாமும்
நாமய்யாலோகமெல்லாம் வசியமாகும்
நலமாகத்தொழில்களெலாஞ் சித்திதானே. 85

அஷ்டகர்மம்

தானென்றதலைமஞ்சங் கொடியுமாவுந்
தயவாகத்தான்பூசி யுலரப்போடு
ஊனென்றமூப்பூவும் ரவிமதியின்பீசம்
உத்தமனேயுடன்கூட்டித் தயிலம்வாங்கி
ஆனென்றஅஷ்டகர்ம மெட்டெட்டுக்கும்
அடைவானதொழில்முறைக்கு மெல்லாமாகும்
நானென்றபோகருட கடாட்சத்தாலே
நலமானபுலிப்பாணி பாடினேனே. 86

பாடினேன்சிவகிரியில் தண்டாயுதபாணி
பாருலகில்பூசித்தோர் சொல்லக்கேளு
ஆடினேன்பிரமாவு மீசனப்பா
அடைவானபோகருட கிருபையப்பா
நாடினேன்கலியுகத்தி லிருநூற்றைந்தில்
தூய்கனேபுலிப்பாணி பூசித்தேன்பார்
நீடினேன்பூசைமடந் தன்னில்வாழ்ந்து
நிலைபெற்றேன்போகருட வருள்பெற்றேனே. 87

அருளாலேபிரமனுட லபியைத்தள்ளி
அடைவாகநாமிருந்தோங் கிரியில்வாழ்ந்து
நெருளாலேஷட்கோணத் தாலயமுங்கட்டி
நெறிவிளங்கஆண்டவனை நேசித்தேன்பால்
பொருளாலேவெகுகோடி சித்துசெய்து
பூசைமடந்தனில்வந்து போகநாதர்

மருளாலேயாவரையு மயக்கியாட்டி
மதிமயக்கஞ்செய்யுமென்ருர் வேலென்ருரே. 88

மூடமாக்குதல்

வேல்ராலேயின்னமொரு தொழிலைக்கேளு
விதமானகிராணமது தீண்டும்போது
காலானஎட்டிமரம் காப்புகட்டிக்
கருவாகத்தூபமிட்டு வேரைவாங்கி
ஆலானநாகமது விடும்போதப்பா
அடைவாகவேரொன்று வாங்கிவைநீ
சேலானமற்றவே ருருப்போற்செய்து
செவ்வையாயுருத்தோறுந் துவாரம்போடே. 89

போட்டப்பாவிடுவேரை முளைபோற்சீவிப்
பொங்கமுடன்பாவையுட முளையுங்கொண்டு
ஆட்டப்பாசாவலது வெள்ளையாக
அடைவானநீருகே சென்று நின்று
சாட்டப்பாசாவலது மேட்டிற்கட்டிச்
சார்வாகத்தண்ணீரிற் கழுத்துமட்டும்
நாட்டப்பா அகாரமது செபிப்பாய்லக்ஷம்
நலமாகமுடிந்தவுடன் சாவல்சாமே. 90

சாகுமேசெபிக்குமட்டும் பாவைதன்னைச்
சார்பாகக்கைவைத்து செபத்தைச்செய்நீ
சேகுமேசெதுக்குமுளை கூறதாகத்
திரமானவெதிரியுட கருவைக்கூட்டி
ஆகுமேதுவாரமெல்லா முளையேதுட்ட
அடைவாகக்குத்தலாய் மூடமாய்ப்போவான்
நாகுமேசத்துருவும் வணங்கிவந்தால்
நாயகனேமுளைபிடுங்கி நீராலாட்டே. 91

சூடன் சுன்னம்

ஆட்டடாசிப்பியுட சுன்னந்தன்னி
லடைவாகச்சூடனொரு கட்டிவைத்து
நாட்டடாமேலுமிந்தச் சுன்னம்போட்டு
நலமாகச்சட்டிவாய் சீலைசெய்து
கூட்டடாகமலமது நாலுசாமம்
குணமாகவெரித்தவுடன் சுன்னமாகும்

வாட்டடாஇந்தசுன்னஞ் சேற்றிற்போட
வளமானசுத்தசுல மதின்மேலாமே. 92

கெந்தகநீர்

ஆகுமேகெந்தகந்தான் பலந்தானைந்து
அடைவானகுழியம்மி தன்னிற்போட்டு
தாருமேயெருக்கிலையின் பழுப்பின்சாறு
தயவாகத்தான்பிழிந்து ஜாமம்நாலு
வாகுமேவைத்தமட்டு மரைத்துமைந்தா
வளமானவம்மியினில் தானேவைத்து
நாகுமேயுதையத்திற் பார்க்கும்போது
நலமாகச்சலமதனு லிழுக்கும்பாரே. 93

பாரப்பாசலந்தன்னைப் பதனம்பண்ணு
பக்குவமாயிம்முறையா யரைக்கும்போது
வீரப்பாராக்காலம் வைத்துப்பார்க்க
விதமானசலமதிலே யிருக்கும்பாரு
தீரப்பாவரைத்தரைத்துச் சலத்தைவாங்கிச்
சிவசிவாகுப்பியிலே யடைத்துக்கொண்டு
சாரப்பாலிங்கத்திற் சுறுக்குபோடத்
தயவாகக்கட்டுவது வலுத்துப்போமே. 94

போமேநீயரைத்தகெந்தி தனைவழித்துப்
பொங்கமுடன்பீங்கானில் ரவியில்வைக்கத்
தீமேநீவெயிற்பட்டுத் தயிலமூண்டாந்
திறமர்கச்சுருக்கிடவே சரக்கெல்லாங்கட்டும்
தாமேநீரசத்துக்குத் தாக்கில்மைந்தா
தயவுடனேசமமாக வங்கங்கட்டும்
நாமேநீபோகருட கடாட்சத்தாலே
நலமாகப்புலிப்பாணி பாடினேனே. 95

பாடினேன்ஞானமது தொண்ணூற்ருறு
பண்பாகவைத்தியந்தா னைந்நூருகும்
ஆடினேன்சோதிடந்தான் மூந்நூருகும்
அடைவாகவாடையதின் கூடச்சொன்னேன்
கூடினேன்சண்முகத்தின் பூசைமார்க்கம்
குணமாகமுப்பதிலே கூறினேன்பார்
நாடினேன்மதனநூல் கிருபையாலே
நலமானநூற்ருேடைம் பதுவுமாச்சே. 96

ஆச்சப்பாபலதிரட்டு நூறுமாக
அடைவானசிமிழ்வித்தை யிருபத்தஞ்சு
வீச்சப்பாஜாலவித்தை யிருநூற்றுள்ளே
விரும்பினுற்கண்ணுடி முகமுமாகும்
பேச்சப்பாசாஸ்திரத்தைப் பேணிப்பாரு
பேதமில்லேபேதமில்லை நூல்கள்யாவும்
வாச்சப்பாபோகருட கடாட்சத்தாலே
வளமாகப்புலிப்பாணி விளம்பினேனே. 97

வாலைரசம்

விளம்பினேன்ரசம்வாங்கி குகையில்வாரு
விதமானகுகையதுவும் பறங்கிப்பூப்போல்
சளம்பினேன்சாணத்தை வைத்துமூடில்
தானுமேரசமேறுஞ் சாணிக்குள்ளே
குளம்பியேசாணத்தை சலத்திற்போட்டுக்
குணமாகக்கரைத்தெடுக்க ரசமுமாகும்
கிளம்பியேவாலைரசம் போலேயாகுங்
கிருபையுள்ளபற்பமுத லனைத்துமாமே. 98

ஆமப்பாசாஸ்திரத்தை வெளிவிடாதே
அவையடக்கம்வெகுபதனம் ஐயாவையா
வாமப்பாகாமிகட்குக் காட்டொணுது
வஞ்சகர்க்கும்பொல்லார்க்குஞ் சொல்லொணுது
தாமப்பாதந்தைதாய் குருக்களானேர்
தயவாகமாதரொடு சிசுக்களென்னும்
நாமப்பாயிவர்களேயே கொலைகள்செய்தோர்
நாசமாய்நரகத்தி லழுந்துவாரே. 99

அழுந்தியேசாஸ்திரத்தை நிஜமென்றெண்ணி
யடைவானபெரியோரை வணங்கிக்காரு
நழுந்தியேபொய்யொன்றுஞ் சொல்லொணுது
நரகினுக்கேயாளாகா திருப்பாயாகில்
கொழுந்துபோ லுள்ளொளியை நோக்கிப்பாரு
கோபமொன்றுமாகாது குணமேவேணும்
செழுந்தருவாம்போகருட கடாட்சத்தாலே
சிறந்தபுலிப்பாணிபல திரட்டுமுற்றே. 100

புலிப்பாணி பலதிரட்டு முற்றிற்று.

சிவமயம்

புலிப்பாணிமுனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

ஜாலத்திரட்டு - 200

காப்பு பாயிரம்

சத்தியேதயாபரியே ஞானநூலி
சாம்பவியேமனோன்மணியே கபாலிசூலி
முத்தியேவேதாந்த பரையேயம்பாள்
முக்குணமேமுச்சுடரே மாயாவீரி
வெற்றியேமூவருக்கு மருளாய்நின்ற
வேணியேசாமளையே பொன்னேமின்னே
சித்தியேஜாலமிரு நூறும்பாடச்
சின்மயமாங்கணபதிதாள் காப்பாம்பாரே. 1

பாரப்பாசாலமொடு சல்லியமொட்டியம்
பாங்கானவொட்டியந் தொட்டாவிசித்து
சாரப்பாநொடியானு மொடியான்வித்தை
சார்வானகிரிகருணை யொட்டாரந்தான்
காரப்பாசித்துலட்சங் கல்சடாவித்தை
கருவானகக்கிஷமும் பஞ்சபட்சி
வார்ப்பாசினிவித்தை மாந்தரீகம்
வளமானபடுபட்சி கைவல்யமாமே. 2

ஆமப்பாபேதர்வண்ணன் கேசரியதீதம்
அடைவானஅஷ்டகர்மம் வினோதகாருடம்
தாமப்பாதண்டகம் லேபனமுஞ்சிப்பி
தயவானயெட்சணியுத் தர்க்கசாஸ்திரம்
போமப்பாபட்சணி தட்சணியுங்கூடப்
புகழ்பாதஞ்சோதிடங்கா வியத்தினோடு
நாமப்பாவைத்தியத்தோ டிலக்கணந்தான்
நல்லசூடாமணியு மின்னங்கேளே. 3

கேளடாசித்தாரூடங்கன்னம்
கெணிதமாய்சிமிழ்வித்தை கம்பிசூஸ்திரம்

சூளடாசூனியமுந் திறவுகோலுஞ்
சுகமானமந்திரமும் நறுக்கிச்சல்லியம்
வாளடாமதன நூற் சாத்திரந்தான்
வளமானபெருநூற் சல்லியமதாகும்
தாளடாவிருப்பென்ற கடலையப்பா
தயவாகமலை நிகண்டு சொல்லக்காணே. 4

காணவேசித்தகத்தியஞ் சல்லியமந்திரம்
கருவானகூட்டுடைய கருத்தானப்பா
மாணவேசாலமா நிகண்டுபாவை
மலைவளப்பம்பூருவமாங் காண்டத்தோடு
ஊணவேகலைக்கியானம் ரேகைவித்தை
உத்தமனேயாகமங்கள் விஷ்வாமித்திரம்
தோணவேயின்னம்வெகு நூல்களுண்டு
தொழிலானபோகருட வருள்தான்காணே. 5

காணப்பாவிந்நூலி லொன்றுணுலுங்
கனிவாகச்சித்திசெய்வோ னவனேநாதன்
ஊணப்பாபரதவித்துப் பார்த்துப்பார்த்தே
வுத்தமனேசித்திசெய்ய விதியில்லாதார்
நாணப்பாசாஸ்திரத்தைப் பொய்யென்பார்கள்
நலமாகவிதியிருந்தாற் பலிக்கும்பாரு
ஆணப்பாஜகஜாலக் கூத்துக்கூத்து
ஆரறியப்போகிரு ரப்பாகேளே. 6

கேளப்பாஞானமொடு பலதிரட்டுவாடை
கெணிதமென்றசோதிடமும் வயித்தியமுங்கூட
வாளப்பாசிதம்பரத்தின் பூசையோடு
வளமானதேவியுட பூசையப்பா
பூளப்பாசண்முகத்தின் பூசைமார்க்கம்
சுகமானசிமிழ்வித்தை கொக்கோகந்தான்
வீளப்பாபோகாது சாலஞ்சாலம்
வெகுசுருக்கீதிருநூறுந் தெளிந்துபாரே. 7

பாரடாஎந்நூல்தான் கோர்வையாகப்
பார்த்தவர்க்குப்பலனுண்டு சித்தியாகும்
வீரடாபலதிரட்டி லேங்கோலந்தான்
விளம்பினேந்தயிலத்தை யெடுத்துக்கொண்டு

சேரடாதொழில்முறைக் கெல்லாஞ்சேரு
செயமாகும்வித்தையெலா மென்னசொல்வேன்
கூரடாகண்கட்டு வித்தையொன்று
கூறுகிறேன் நன்ருகக் கேளுகேளே. 8

பாயிரம் முற்றிற்று.

கண் கட்டு வித் தை

கேளேள் நீயூர்க்குருவி பிடித்துவந்து
கெணிதமாயபானத்தைத் தைத்துப்பின்னே
சூளே நீகால்கழஞ்சி சூதம்வாரு
சுகமாகக்கால்கழஞ்சி வெள்ளைபோடு
வாளே நீவாயைத்தான் தைத்துப்போடு
வளமானசிறுபானைக் குள்ளேபோடு
பாளே நீபோகாமற் படிதான்கள்ளு
பாங்காகத்தான்வார்த்திட் டெரித்திடாயே. 9

எரிப்பாயேயொருமரத்து விறகுகொண்டு
எட்டொன்ருய்க்கரிக்கியே பதத்தைப்பார்த்து
தெரிப்பாயே அஸ்திமுத லுரோமந்தள்ளித்
தெளிவாகத்தானெடுத்து கலவத்திட்டுச்
செரிப்பாயேபேய்க்கருப்பன் சாற்றைவிட்டுச்
சேர்த்தரைப்பாய்மைபோலே யாகுமட்டும்
விரிப்பாயே துணிமேலே பரப்பிமைந்தா
விதமாகக்காயவிட்டுத் திரியாய்ச்சுற்றே. 10

சுற்றப்பாஇலுங்கோலத் தயிலம்வாரு
சுருக்காகச்சிரசோட்டில் மையைவாங்கி
சிற்றப்பாதயிலத்தி லிழைத்துநன்ருய்
சிமிழில்வைத்துசாலக்காள் பூசைசெய்து
அற்றப்பாமையெடுத்து வித்தையாட
அடைவாகச்சொல்லுகிறே னன்ருய்க்கேளு
முற்றப்பாபச்சைவைக்கோல் தன்னில்தேய்த்து
முன்போடப்பாம்பாகுங் கண்டுபாரே. 11

பாரடாபுளியிலைக்குக் குளவியாகும்
பண்பானவேப்பிலைக்குத் தேன்தேளாகும்

சீரடா நட்டுவக் காலியாகும்
சிறப்பானபலகுருவி சிறகிற்பூசில்
கூரடா அந்தந்தப் புட்சியாகும்
குணமானவோட்டிலிட வாராகனுகும்
வீரடாமண்கிள்ளிப் பூசினுக்கால்
விதமானகெந்தபொடி வாசந்தானே. 12

தானென்றஅம்மியிலே பூசினுக்கால்
தயவாக அம்மியது நடக்கும்பாரு
ஊனென்றகழற்சிக்காய் வேணமட்டும்
உத்தமனேபூசியதைக் கீழேபோடு
கோனென்றகழற்சிக்காய் மோதிக்கொள்ளும்
கொற்றவனேசிறுசிலேக்கு மிந்தப்பாகம்
தேனென்றபோகருட கடாட்சத்தாலே
தெளிவாகப்புலிப்பாணி பாடினேனே. 13

ஜாலக்காள் பூசை

பாடினேன்ஜாலக்காள் பூசைமார்க்கம்
பண்பானமஞ்சளின் கிழங்குபாவை
சூடி நீபெண்போல ரூபஞ்செய்து
சுகமாகக்கொடிமூல மேலேசுற்றி
ஆடியேப்பூசையப்பா சத்திபூசை
அடைவாகச்செய்துபின் தியானமோது
தேடியேசாகினி டாகினிசாலக்காள்
தேவநீராராராராவென் றேதே. 14

ஓதவேமந்திரந்தான் லட்சமோது
உன்னிடத்தில்விளையாடி யிருப்பாள்பாரு
வாதவேயிவளுடைய ஜாலம்ஜாலம்
வையகத்தோர்மதிமயங்கி யிருப்பாரப்பா
சூதுதான்சொல்லவில்லை சாலவித்தை
சொன்னபடிதானுடுங் கண்டுபாரு
நாதனூர்போகருட கடாட்சத்தாலே
நலமாகப்புலிப்பாணி பாடினேனே. 15

பச்சைப்பாம்பு வித்தை

பாடினேனின்னமொன்று சொல்லக்கேளு
பண்பானபச்சையென்ற பாம்பைக்கொன்று

ஆடியேயதின்வாயிற் கொட்டைமுத்து
அப்பனேபூநூலின் பருத்திக்கொட்டை
கூடவேயடுக்கடுக்காய் செலுத்திப்போடு
குணமாகமண்ணிட்டு நீரைவாரு
மூடியேவித்தெடுத் திந்தப்பாகம்
மூன்றுதிரம்போட்டுநீ யெடுத்துக்கொள்ளே. 16

கொள்ளப்பாமூன்றுதிரங் காய்ச்சமுத்தின்
குணமானஎண்ணெயை வடித்துக்கொண்டு
தெள்ளப்பாமூன்றுதிரம் வெடித்தபஞ்சு
தெளிவாகத்தானெடுத்துத் திரியாய்ச்செய்து
கள்ளப்பாதிரியெடுத்து விளக்கிலேற்றிக்
கனிவாகவைங்கோலத் தயிலஞ்சற்றே
அள்ளப்பாவிளக்குதனி லிந்தவெண்ணெய்
அடைவாகத்தான்வார்த்துத் தீபமேற்றே. 17

ஏற்றப்பர்ராக்கால மனிதர்கூட்டம் [ம்
இருக்கையிலேபொருத்திவிடு பாம்பாய்த்தோணு
கூத்தப்பாவெகுபாம்பு பச்சைப்பாம்பு
கொற்றவனேவெகுபேர்கள் மிரளுவார்கள்
தாத்தப்பாதிரியணைக்க மறைந்துபோகும்
சமர்த்துதானென்னசொல்வே னிந்தவித்தை
ஆற்றப்பாபோகருட கடாட்சத்தாலே
அடைவாகப்புலிப்பாணி பாடினேனே. 18

மூலிகை ஜாலம்

பாடினேனின்னமொரு ஜாலவித்தை
பண்பாகச்சொல்லுகிறே னன்றாய்க்கேளு
ஆடியேயிருளனென்ற மூலிதன்னை
அப்பனேகாப்பிட்டுப் பிடுங்கிவேரை
நாடியேகாதிலே வைக்கும்போது
நலமாகவொருபொருளைச் சொல்லிவைத்தால்
கூடியேயவ்வண்ண ரூபமாகும்
குணமானவதன்பெருமை கூறக்கேளே. 19

கேளடாபுலியாவாய் கரடியாவாய்
கெடியானகுரங்காவாய் மந்தியாவாய்
நாளடாஎருமைமூத லெருதுமாவாய்
நலமான ஆனையொடு நாயுமாவாய்

ஆளடாபூனையோடு கோழியாவாய்
அடைவானகுதிரையொடு கழுதையாவாய்
வாளடாபன்றியாய்மானுமாவாய்
வளமான ஆடுமரங் கல்லாவாயே. 20

ஆவா நீயாணாவாய் பெண்ணுமாவாய்
அப்பனேராஜனொடு குருவுமாவாய்
தாவியேசித்தரென்ற மூத்தாராவாய்
தபோதனர்கள் வேதியர்கள் தாமுமாவாய்
வாவியேகுளமாவாய் கிணறுமாவாய்
வளமானபாம்பாவாய் பட்சியாவாய்
மேவி நீ நினைத்தபடி யெல்லாமாவாய்
மேதினியிலின்னமொரு புதுமையாமே. 21

ஆமப்பாயிச்சாலஞ் சுருக்குமெத்த
ஆறியப்போகிரு ரருமைமெத்த
காமப்பாபுண்ணியருக் கெய்தும்பாரு
கன்மிகளுக்கென்னாளுங் காணாதப்பா
தாமப்பாயிம்மூலி காய்ந்ததானால்
தயிலமிட்டுக்காற்றில்வைக்க வீரமாகும்
வாமப்பாபோகருட கடாட்சத்தாலே
வளமாகப்புலிப்பாணி பாடினேனே. 22

தெய்வ ஜாலம்

பாடினேனின்னமொன்று சொல்லக்கேளு
பாங்கானசிறுமுன்னே காப்புகட்டி
ஆடியேபொங்கலிட்டுத் தூபதீபம்
அப்பனேபலிகொடுத்து வேரைவாங்கி
கூடியேபொடியாக்கிக் கருச்சீலைதன்னில்
குணமாகத்திரியாக்கி யைங்கோலத்தால்
வாடியேவிளக்கிட்டுத் தீபந்தன்னை
வளமாக ஆவினெய்யி லேற்றிடாயே. 23

ஏற்றியேகோவிலுக்குள் மாளிகைக்குள்
இன்பமாய்த்தானிருக்கு மிடத்திலப்பா
பாத்தியேமனுக்களைத்தான் வரவழைத்து
பாரென்றுசொல்லிவாய் மூடுமுன்னே
வாத்தியேதேவரெலாங் கண்ணிற்காணும்
வையகத்தோர்தான்மயங்கிப் பார்ப்பார்பாரு

சாத்தியேதிரியணைக்க மறையும்பாரு
சார்வாகப்போகருட கடாட்சந்தானே. 24

சீலைக் குடைபிடிக்க

தானென்றகருவீழி காப்புக்கட்டி
தயவாகப்பொங்கலுடன் பலியுமிட்டு
தேனென்றதிக்குபந் தனமோரெட்டுஞ்
செய்தவுடனதைவெட்டிக் கிழங்குவாங்கி
கோனென்றசோமனிலே வராகனென்று
குணமாகத்தானறுக்கி மூடிந்துக்கொண்டு
வானென்றஆகாசந் தன்னிற்போட
வளமாகக்குடைபிடித்து வரும்நீபாரே. 25

எலுமிச்சம்பழ வித்தை

பாரே நீயின்னமொன்று சொல்லக்கேளு
பாங்காகக்கர்த்தபந்தான் புணரும்போது
சேரே நீவால்மயிரை வெவ்வேறேவாங்கித்
திகழுமோதிரம்போல்வெவ் வேறேசுற்றித்
தேரே நீயைங்காய மேலேபூசித்
திறமாகத்தங்கத்தை மேலேசுற்றித்
தீரே நீவலவிரலி லாண்தானப்பா
திடமாகயிடவிரலில் பெண்தான்காணே. 26

காணப்பாயெலுமிச்சம் பழத்தைவாங்கிக்
கனிவாகவாகாசந் தன்னிற்போடு
மாணப்பாயிடக்கையைக் கீழேமூடு
வானிலுள்ளகனியதுவும் வீழாதப்பா
தாணப்பாயிடக்கையை நிமிர்த்திக்காட்டத்
தான்வீழுங்கனியதுதான் கண்டுபாரு
வேணப்பாபோகருட கடாட்சத்தாலே
விதமாகப்புலிப்பாணி பாடினேனே. 27

நோக்கு வித்தை

பாடினேனின்னமொன்று சொல்லக்கேளு
பண்பானகுன்றுடைய தாங்கிமூலம்
நாடி நீகொழிஞ்சியது போலேயப்பா
நாட்டிலேமெத்தவுண் டறியார்பாரு
கூடியேயதைச்சுருட்டி மேலேயப்பா
குணமாகஆள்பாரங் கல்லைவைக்க

ஆடியேபார்த்திருக்க அந்தக்கல்தான்
அப்புறத்திற்போய்வீழுங் கண்டுபாரே. 28

பாரடாகிராணமது தீண்டும்போது
பண்பாகக்காப்பிட்டுப் பொங்கலிட்டு
சீரடாபலியிட்டுத் தூபதீபம்
ஜெயமாகக்கொடுத்துமிக வேரைவாங்கி
தீரடாகுளிசமா யாடிக்கொண்டு
திறமாகச்சிரசுதனில் வைத்துநீயும்
கூரடாபாரமதை யேற்றிப்பாரு
குணமாகத்தானெடுக்கக் கனக்காதன்றே. 29

கனக்காதுஉலக்கைமுதல் கட்டிலையா
கனிவானபல்லாக்கின் கொம்பினோடு
அனக்காதுஇதுகளெலாம் நோக்கும்போதி
லப்பனேவாயிலிட்டு நோக்கிப்பாரு
இனக்காதுஆனையைத்தான் வாலைப்பற்றி
இழுத்தாக்கால்பின்னகர்ந்து வரும்நீபாரு
நனக்காதுகல்லைத்தா னுதைத்தாயானால்
நகருமப்பாபெரும்பாரம் பின்னைத்தானே. 30

தானேதானின்னமொன்று சொல்லக்கேளு
தயவாகச்சவத்தினுட வாயினுள்ளே
மானேதானிருப்பாணி யுள்ளேவிட்டு
மைந்தனேமார்பினில்தான் வெள்ளியாணி
தேனேதானுந்தியிலே செப்பினாணி
தெளிவாகத்தானெடுத் தின்னங்கேளு
வானேதான்சவங்கிடந்து வெந்தபின்பு
வளமாகமறுநாளி லெடுத்துக்கொள்ளே. 31

கொள்ளவேகாடாற்று முன்னே நீயுங்
குணமாகத்தானெடுத்துப் பூசைசெய்து
தெள்ளவேபிரம்பில்வெள்ளி கட்டாய்போடு
தெளிவாகவிரும்பதனை முன்னேபோடு
கள்ளவேசெம்பதுதான் பின்னேபோடு
கடிதாகவிவ்வகைநீ செய்துபின்பு
அள்ளியேயைங்கோலக் கருவும்பூசி
அடைவாகஜாலக்காள் தியானமோதே. 32

ஓதியேலட்சமுரு முடிந்ததானால்
ஒளிவாகஜாலக்காள் பூசைசெய்து
வாதாகப்பிரம்பதனை யெடுத்துக்கொண்டு
வளமாகப்பாம்பிருக்கும் பெட்டிமேலே
காதியேயன்பாகத் தட்டும்போது
காணுதுபாம்பெல்லாங் கண்டுபாரு
தாதியேபிரம்பைத்தான் திரும்பித்தட்டத்
தானிருக்கும்பெட்டியுள்ளே பாம்புதானே. 33

வாத்திய ஜாலம்

தானேதானின்னமொன்று சொல்லக்கேளு
தயவானபள்ளியர்கள் மரணமானால்
கோனேதானவர்கள்கையி லிரும்பினாலே
கொற்றவனேவளையலது போட்டிருப்பார்
தேனேதானவர்களைத்தான் தகனம்பண்ணிச்
சேருகையில்வளையலுடன் வைப்பார்பாரு
மானேதான்காடாற்று முன்னேயப்பா
வகையாகத்தானெடுத்து வைத்துக்கொள்ளே. 34

கொள்ளப்பாபாக்குவெட்டி யதனாற்செய்து
கொற்றவனேகிராணமது தீண்டும்போது
தள்ளப்பாசங்கம்வேர் காப்புக்கட்டித்
தயவாகப்பலிபூசை நடத்தியப்பா
தெள்ளப்பாவடவேரை வாங்கிக்கொண்டு
தெளிவானவைங்கோலக் கருவும்பூசி
கள்ளப்பாபாக்குவெட்டி தன்னால்வெட்டிக்
கனிவாகவதின்பெருமை சொல்லப்பாரே. 35

பாரடாபேரிகையும் நகபத்தோடு
பண்பானநகாருமுத லடங்கத்தானும்
சேரடாதம்பட்டங் கனகதப்பு
செயலானதவிலோடு தவண்டையப்பா
கூரடாதுத்திமல் லாரிதாரை
குணமானபம்பையொடு பூரியப்பா
சீரடாசந்திரவாத்தியஞ் சூரியவாத்தியம்
தெளிவானவுடுக்கைமுதல் முழங்குந்தானே. 36

தானென்றகிடுகுமுட்டி தப்பினோடு
தயவாகயின்னம்வெகு வாத்தியங்கள்

கோனென்றவேயுரைத்தா னடுக்கடுக்காய்
கொற்றவனேவெட்டுகையில் முழங்கும்பாரு
தேனென்றவாத்தியுத்தின் சாலஞ்ஜாலம்
தெளிவாகக்குருமுறையால் தெளிந்துசெய்நீ
ஆனென்றபோகருட கடாட்சத்தாலே
யடைவாகப்புலிப்பாணி பாடினேனே. 37

எக்காள ஜாலம்

பாடியேயின்னமொரு வித்தைசொல்வேன்
பண்பாய்ஆம்-ஓம்-நமசி வாயமென்று
ஆடியேலட்சமுரு செபித்தாயானல்
அப்பனேஜாலக்காள் பூசைசெய்து
கூடியேநத்தமரம் சூரிவேரைக்
கொண்டுவந்தேயைங்கோலக் கருவும்பூசி
நாடியேமுந்தியிலே வைத்துநீயும்
நலமாகநீட்டியதை முருக்குவாயே. 38

முருக்கையிலேமந்திரத்தைத் தியானமோது
முளிவாகமண்ணெடுத் தெதிரேபோடு
இருக்கையிலேயெக்காளந் தாரைசின்னம்
எளிதானகர்ணவும் வாங்காதப்பா
திருக்கையிலேநாகசுரங் கொம்பினேடு
தெளிவானமகுடியொடு சங்கநாதம்
கருக்கையிலேயிதுகளெலாம் படைக்கும்பாரு
கனிவானபோகருட கடாட்சந்தானே. 39

அக்கினி ஜாலம்

தானெயாயின்னமொரு வித்தைசொல்வேன்
தயவாகப்பச்சையென்ற தவளைநெய்யில்
மானெயாகலசத்தில் வைத்துக்கொண்டு
மைந்தனே துணியதிலே வைத்துமைந்தா
வானெயாமண்வெட்டி பழுக்கக்காய்ச்சி
வளமானஉரலின்மேல் வைக்கச்சொல்லித்
தேனெயாஎண்ணெயிலே கையைத்தோய்த்துத்
திறமாகத்தானடிப்பா யின்னம்பாரே. 40

பாரடாயனைவோரும் பார்த்திருக்கப்
பண்பாகத்துணியதிலே துடைத்துப்போட்டு

தோடாஎண்ணெயிலே தோய்த்துத்தோய்த்துத்
தெளிவாகத்தானளிப்பா யனேவோர்பார்க்கச்
சீரடாகுண்டதனைக் காய்ச்சச்சொல்லி
சிறப்பாகவாய்தனிலே யிந்தவெண்ணெய்
தீரடா நிரம்பவிட் டுமிழ்ந்துவிட்டுத்
திறமானகுண்டத்தைக் கடித்துத்தூக்கே. 41

தூக்கப்பாவனேவோரும் பார்க்கும்போது
துணிவாகவைக்கோலில் வைத்துக்கட்டி
வாக்கப்பாவைக்கோலில் எண்ணெய்தோய்த்து
வகையாகத்தான்கட்டி மூன்னேபோடு
போக்கப்பாவைக்கோல்தான் வேகாதப்பா
பொலிவாகத்தானவிழ்த்துப் பின்னுங்கேளு
தாக்கப்பாவைக்கோல்மேல் போட்டாயானால்
தயவாகத்தான்பிடித்து வேகும்பாரே. 42

பாரடாசங்கிலியைக் காயப்போட்டுப்
பண்பாகநெய்யெடுத் துருக்குவாய்நீ
சீரடாபாதத்திற் றடவிக்கொண்டு
சிறப்பாகவக்கினிமேல் நடக்கவாகும்
கூரடாகைதனிலே தடவிக்கொண்டு
குணமானவக்கினிச் சட்டிதன்னை
வீரடாவெடுக்கலாம் கண்டுபாரு
விதமானபோகருட கடாட்சந்தானே. 43

ஜலஸ்தம்பனம்

தானுன இன்னமொரு வித்தைகேளு
தயவாகச்சலதிரட்டுங் கூட்டுமூலி
வானுகஉலர்த்தியதைத் தூளாய்ச்செய்து
வளமானஐங்கோலத் தயிலந்தன்னில்
மானுகமைபோலே யரைத்துமைந்தா
மருவுபாதக்குறடு தன்னிற்பூசிக்
கோனுகத்தண்ணீர்மேல் நடக்கலாகுங்
குளங்கிணறேயல்லாம லாறுகாதே. 44

ஆறுனவாசனங்கள் தன்னிற்பூசி
யப்பனேசலத்தின்மே லிருக்கலாகும்
கூறுனயிந்தவித்தை புதுமைமெத்த
கொற்றவனேயுலகத்தோர் நாதனென்பார்

தேருனஇந்தஜாலந் தான்ஜாலந்
　　தேறிநின்ருற்சகலசித்துங் கைக்குள்ளாகும்
வீரானபோகருட கடாட்சத்தாலே
　　விதமாகப்புலிப்பாணி பாடினேனே. 45

பச்சைத்தவளை வித்தை

பாடினேனின்னமொரு வித்தைகேளு
　　பண்பானதவளையைத்தா னரவங்கவ்விக்
கூடியேபிடித்திருக்கும் வேளைபார்த்துக்
　　கூசாமற்றலைவீழ வெட்டிப்போட்டு
ஆடியேயாவுடைய தலையுங்கூட
　　அடைவானதவளையுந்தா னெடுத்துக்கொண்டு
நாடியேமரங்கிரிச்சுப் பட்டைரெண்டு
　　நலமானவைங்கோலத் தயிலங்கூட்டே. 46

கூட்டியேசகலாத்தில் வைத்துத்தைத்துக்
　　குணமாகவுரலின்கீழ் வைத்துக்குத்து
நாட்டியேகுத்தையிலே வாய்வுபோகும்
　　நலமாகவதையெடுத்து வைத்துக்கொண்டு
ஆட்டியேயிப்பாகம் நினைத்தபோது
　　அடைவாகச்செய்துவிளை யாடிப்பாரு
வாட்டியேயவமானப் பட்டுப்போவார்
　　வையகத்தோர்தான்பார்த்து நகைப்பார்பாரே. 47

சிலைத்திரைய

பாரடாகர்த்தபந்தான் புணரும்போது
　　பரிவாகவாண்கழுதை வாலுரோமம்
சீரடாபிடுங்கியதை வைத்துக்கொண்டு
　　சிறப்பானகண்ணில்லாப் புற்றுமீதில்
திரடாகட்டுடைய கொடிதானப்பா
　　திறமாகக்கிராணத்தில் காப்புக்கட்டி
கூரடாபலிபொங்கல் தூபதீபம்
　　கொடுத்துநீகொடியதனைப் பிடுங்கிக்கொள்ளே.

கொள்ளவேவளையமாய்ச் சுருட்டிக்கொண்டு
　　குணமாகரோமமுங் கூடவைத்தே
தெள்ளவேதங்கத்தால் வெள்ளியாலும்
　　தெளிவாகத்தண்டினுட மேலேசுற்றி

கள்ளப்பாசுற்றுமுன்னே கருவும்பூசிக்
கனிவாகச்சாலக்காள் பூசைசெய்து
மெள்ளவேகையதனி லேற்றும்போது
மேன்மையாய்ச்சீலையது திரையும்பாரே. 49

திவட்டி ஜாலம்

பாரப்பாவெட்டுண்ட முண்டந்தன்னைப்
பதித்திருக்குமிடம்பார்த்து ஊனைவாங்கி
நேரப்பாதிகைப்பூடு பொடித்துப்போடு
நேரானவைங்கோலத் தயிலஞ்சேர்த்து
தீரப்பாதிவட்டி தனில்நனைத்துத்
திரமாகப்பொருத்திவிளக் கெண்ணெய்வாரு
வீரப்பாராக்கால மனிதர்கூடி
வீருகவிருக்கையிலே சொல்லக்கேளே. 50

கேளடாதிவட்டி தான்பிடிக்கக்
கேட்டுதடாவனைவோரு முண்டமாவார்
நாளடாகூட்டங்க ளோடிப்போகும்
நாமென்னசெய்வமென்று நகைப்பார்பாரு
சூளடாஎன்னவிதி யிந்தக்கூத்து
சொல்லலாமென்பார்க ளனைவோருந்தான்
ஆளடாஇந்தஜா லந்தான்ஜாலம்
அத்தனுர்போகருட கடாட்சந்தானே. 51

எட்சணி ஜாலம்

தானனபச்சோந்திப் பிச்சைவாங்கித்
தயவாகத்திசைமயக்கப் பொடியுங்கூட்டி
மானனமதிமயக்குத் தூளுங்கூட்டி
மத்தம்வேர்த்தோலதுவுங் கூடச்சேர்த்து
வானனஐங்கோலத் தயிலத்தாட்டி
வளமாகச்சிமிழதனில் வைத்துக்கொண்டு
கோனனமோகினியைத் தியானஞ்செய்து
குணமானஜாலக்காள் பூசைசெய்யே. 52

செய்யப்பாமாயமோகினி நமகாவென்று
செயலாகத்திலகமிடப் பெண்போல்தோன்றும்
வையப்பாவுலகத்தோர் வாய்வரண்டு
மதிமயங்கிமோகித்து நிற்பார்பாரு

ஐயப்பாரம்பையூர்வசிப் பெண்தானே
அடைவானதிலோத்தமையோ தெய்வப்பெண்ணே
கையப்பாபிடிப்பாருங் காலில்வைத்து
கனிவாகவீழ்வாருங் கண்டுபாரே. 53

பாரடாதிலகத்தை யழித்தபோது
பண்பானபெண்ணையல்லோ காணுமென்பார்
வீரடாயிந்தமங்கை யுலகிலுண்டோ
விதமானமேதினியிற் காணலாமோ
தீரடாமனம்பதறி யழுவார்பாரு
தெய்வமேயென்றுசொல்லி மயங்குவார்காண்
நீரடாயிப்பெண்ணை நினைத்தபோதே
நெஞ்சுருகிவேகுதென்று புலம்புவாரே. 54

வாரானஇன்னமொரு வித்தையப்பா
வளமானஎட்சணியின் மார்க்கங்கேளு
கூரானஸ்ரீம்இரீம் கிலியுமொன்று
குணமானஅவ்வுமுவ்வு மவ்வுஞ்சேரு
வீரானநமசிவய வென்றுநீயும்
விதமாகஓமென்று சொல்லிப்பின்னை
சீரானசுகந்தபரி மளஞ்சாதிக்காய்
திறமானகிராம்புவால் மிளகுந்தானே. 55

மிளகோடுஅடைக்காய்ச் சர்க்கரைகற்கண்டு
மிதமில்லாக்கனிவகைகள் பலகாரமன்னம்
அளகோடுஇவையெல்லாம் வேண்டுமென்றே
அடைவாகஎட்சணியின் தியானமோது
புளகோடுதொட்டக்கால் மூலிகைக்குப்
பொங்கமுடன்வெள்ளிநாள் காப்புகட்டி
நளகோடுஎட்டுநா ளந்திசந்தி
நலமாகஎட்சணியின் தியானமோதே. 56

ஓதியபின்பொங்கல்பலி தூபதீபம்
ஒளிவாகத்தான்கொடுத்து வேரைவாங்கி
ஆதியாமைங்கோலக் கருவும்பூசி
அடைவாகக்கருச்சீலை மேலேசுற்றி
நாதியேதங்கத்தா லடைத்துக்கொண்டு
நலமாகஎட்சணியை லட்சமோதி

தீதிலாப்பூசைபலி பலக்கச்செய்து
செயலானவினைபெல்லா மழைப்பாய்பாரே. 57

பாரப்பாசபைநடுவே யிருந்துக்கொண்டு
பண்பானமுக்காடு போட்டுநீயும்
சீரப்பா நீலகண்டித் தியானமோது
சீக்கிரத்திற்கொண்டுவரு மெட்சணிதான்
கூறப்பாயெல்லார்க்குங் கொடுக்கச்செய் நீ
குற்றம்வரும் நீயொன்றும் புசிக்கவேண்டாம்
நேரப்பாபோகருட கடாட்சத்தாலே
நிச்சயமாய்ப்புலிப்பாணி பாடினேனே. 58

மாம்பழ ஜாலம்

பாடினேனின்னமொரு வித்தைகேளு
பரிவானபோழிஞ்சி வித்தைவாங்கி
ஆடியேபூந்தயில மாகவாங்கி
அன்பாகமாங்கனிதான் சொம்பிலப்பா
கூடியேகனிந்தபழங் கொண்டுவந்து
சுகமாகப்பிழிந்ததனைத் தோலைநீக்கிக்
கூடியேஐங்கோலக் கருவுங்கூட்டிக்
குணமாகத்தயிலத்தி லூறப்போடே. 59

போடப்பாஒருநாள்தான் கடந்துவாங்கிப்
பொங்கமுடனிழலுலர்த்தி வைத்துக்கொண்டு
நாடப்பாசபைதனிலே யிந்தக்கொட்டை
நலமாகயாவருக்குங் கண்ணிற்காட்டிச்
சாடப்பாகுழிதோண்டி வித்தைநட்டுச்
சார்வாகச்சலம்வார்த்துக் கூடைமூடு
சூடப்பாநாலுதாரந் தண்ணீர்வாரு
சுகமாகநாலுதிரந் திறந்துமூடே. 60

மூடவேயிலையாகிக் கொழுந்துமாகி
முக்கியமாய்த்தழைபாகிப் பூவுமாகித்
தேடவேபிஞ்சாகிக் காயுமாகித்
தெளிவானகனியாகி யுதிரும்பாரு
ஆடவேயனைவருக்குங் கொடுக்கச்செய் நீ
அப்பனேநாழிகைதான் மூன்றேமுக்கால்
கூடவேயிதற்குள்ளே மாமுமாகிக்
குணமானகனியாகி யுதிருந்தானே. 61

இந்திர ஜாலம்

தானேதானின்னமொரு சாலவித்தை
தயவாகச்சொல்லுகிறே னன்ருய்க்கேளு
மானேதான்மாயமென்ற பூனையொன்று
மைந்தனேபாவையென்ற கீரியொன்று
தேனேதானிரட்டைவா லரணையொன்று
தெளிவானதிகைப்பூடு பூச்சிப்பத்து
கோனேதான்பேய்ப்பீர்க்கின் விதைதானப்பா
குணமாகரெண்டுபலம் நிறுத்துப்போடே. 62

போடேபுல்லாமணக்கு விரைதானப்பா
பொங்கமுடனிரண்டுபலம் நிறுத்துப்போடு
ஆடவேயிவையெல்லா நறுக்கியப்பா
அடைவானபேய்க்கருப்பஞ் சாற்றிற்போடு
நாடவேஜாமமது கடந்துவாங்கி
நலமாகநிலந்தனிலே யுலரப்போடு
கூடவேயாதளையின் பாலைவாங்கிக்
குணமாகஒருஜாம மூறப்போடே. 63

போட்டப்பாயிதுவெல்லாம் பாண்டத்திட்டுப்
பொங்கமுடன்பூத்தயில மாகவாங்கி
தேட்டமாயைங்கோலத் தயிலநேரே
தெளிவாகச்சேர்த்துநீ யரைப்பாயப்பா
தாட்டியாயரைக்கையிலே ரசமும்வெண்ணெய்
சார்வாகவகைவகைக்குக் கழஞ்சிபோடு
வாட்டமிலாமுப்பூவுங் கழஞ்சிப்போட்டு
வளமாகவரைத்தெடுத்துச் சிமிழில்வையே. 64

வையப்பாஜாலக்காள் பூசைசெய்து
வளமானநீலகண்டி தியானமோது
கையப்பாஸ்ரீம்இரீம் கிலியும்சவ்வும்
கனிந்தஐயும்அவ்வுமுவ்வு மவ்வுங்கூட்டி
ஐயமின்றிரவ்வுடனே கூகூவென்றே
படைவானநீலகண்டி யம்மாவென்று
பையவேலட்சமுரு செபித்தாயானுல்
பாங்கானமையதுவு மூயிரதாச்சே. 65

ஆச்சப்பா நீலகண்டி பூசைசெய்து
அடைவாகமையெடுத் தாடக்கேளு

பாச்சப்பா நூலேணி யொன்றுசெய்து
பாங்காகமேற்போடப் படியாய் நிற்கும்
வீச்சப்பாமையெடுத்துக் கையில்தேய்த்து
விதமானமண்ணையள்ளித் திசையிற்போடு
கூச்சப்பாவெகுபடைகள் வருகுதென்று
கூறுவாய்வெகுப்டைகள் வருகும்பாரே. 66

பாரடிநீலகண்டி யம்மாநீயும்
பாங்காகநூலேணி பிடித்துக்கொள்ளு
சேரடியென்று நூலேணிதன்னைச்
செயலாகச்சொல்லிநீ போடுபோடு
தீரடியந்திரத்திற் சண்டையாகத்
தெளிவாகச்செய்யென்று தியானமோது
கூரடிபகையெல்லாம் போகுதென்று
குணமாகத்தானுரைக்கப் போகும்பாரே. 67

பாரடா நூலேணி மேலேயப்பா
பாங்காகவெகுபடைகள் போகும்பாரு
சீரடாயெல்லார்க்குங் கண்ணிற்காணுஞ்
சிறப்பாகயாவருமே புதுமையென்பார்
கூரடாமையெடுத்துத் திலகமிட்டுக்
குணமான நீலகண்டி தியானமோது
ஆரடாஅந்தரத்திற் சண்டையாக
அடைவாகநீநினைத்துக் குலாவச்செய்யே. 68

செய்யுமேவானத்தில் முழக்கமெத்த
செயலாகவான்பரிகள் கனைக்கும்பாரு
கையிலேவாளுடனே தண்டைவாங்கிக்
கனிவாகமைபூசி வெட்டும்போது
ஐய்மின்றிப்பொடிப்பொடியாய் வெட்டிவீசு
ஆள்தலைகள்வருகுதென்பா ரறிந்துபாரு
மையிலேசூழ்ப்பாண்டந் தடவிவெட்ட
மகத்தான் ஆனையுட தலையென்பாரே. 69

பாரடாபூசினிக்காய் பூசிவெட்டப்
பாங்கானகுதிரையுட தலையென்பார்கள்
காரடாகெச்சக்காய் தன்னிற்பூசிக்
கடிதாகத்தான்வெட்டச் சொல்லக்கேளு

ஆரடாகோடிபடை யிறந்ததென்பார்
அப்பனேயிந்திரஜா லந்தான்ஜாலம்
நேரடாதலைகளெல்லா மெடுத்துமூடு
நிச்சயமாய்ப்படைகளெல்லாம் போவென்பாயே.

மயேந்திர ஜாலம்

என்பாயேயிதுகளெல்லா மறைந்துபோகு
மெழில் நீலகண்டி நூ லேணியிவாள்
தென்பாகத்திலகத்தை யழித்துப்போடு
தெளிவாகவின்னமொரு வித்தைகேளு
வன்பானஜாலக்காள் தியானமோதி
வளமானமையெடுத்துக் கையிற்பூசி
அன்பாகமண்ணள்ளித் திசையிற்போடு
அடைவாகமலைமலையாய்த் தோற்றும்பாரே. 71

பாரடா அஷ்டகுல பர்வதங்கள்
பாங்கானமகமேரு கயிலையப்பா
சீரடாபொதிகைமுதல் மலைகள்தோற்றுஞ்
சிறப்பாகவதிலிருக்குந் தேவர்சித்தர்
நேரடாமுத்தரொடு முனிவர்தாமும்
நெடியவிருட்சங்கள்குகை வாசல்தானும்
கூரடாவீதுகளெலாங் கண்ணிற்றோன்றுங்
குணமான போகருட கடாட்சந்தானே. 72

சமுத்திர ஜாலம்

தானென்றமயேந்திரத்தின் ஜாலமாச்சு
தயவாகச்சாகரத்தின் ஜாலங்கேளு
வானென்றமையெடுத்துக் கையிற்பூசி
வளமாகமண்ணள்ளித் திசையிற்போடு
கோனென்றசத்தசாகர மோரேழுங்
குணமாகமுன்காண வருகும்பாரு
தேனென்றதீவாந்தர மெல்லாந்தோற்றும்
திருமாலும்லட்சுமியுந் தோற்றும்பாரே. 73

பாரடாகப்பலொடு படகுதோணி
பலமச்சம்நீர்வாழுஞ் சாதியெல்லாம்
நேரடாசெகத்தோர்க ளெல்லாம்பார்த்து
நிச்சயமாயிவனல்லோ தேவனென்பார்

ஆரடாசாகரத்தின் ஜாலம்ஜாலம்
அன்பானசாலக்காள் வித்தையப்பா
திரடாபோகருட கடாட்சத்தாலே
திறமானபுலிப்பாணி பாடினேனே. 74

சங்கிலி ஜாலம்

பாடியேயின்னமொரு வித்தைசொல்வேன்
பாங்காகமையெடுத்துக் கையிற்பூசி
ஆடியேநூல்கயிறு சங்கிலிதானப்பா
அரியகெட்டிப்பாரை மந்திரவாளும்
கூடியேவாய்மேலே கையைவைத்துக்
குணமாகப்பின்னிழுத்துக் கீழேபோடு
நாடியேயனேவோரும் பார்த்துப்பார்த்து
நலமாகவிழுங்கிவிட்டா னென்பர்தானே. 75

பட்டண ஜாலம்

தாஞனயின்னமொரு வித்தைகேளு
தங்கிராக்காலமூர் வெளியிற்சென்று
மாஞனவோரிடத்தி லிருந்துக்கொண்டு
மைந்தனேமையெடுத்துக் கையிற்பூசி
வாஞனமண்ணள்ளித் திசையிற்போடு
வளமானபட்டணமாய் தோற்றும்பாரு
தேஞனதெருக்களொடு தெருவுந்தோன்றும்
திறமாகக்கடைவீதி தோன்றும்பாரே. 76

பாரடாமனுக்கூட்ட மனந்தந்தோற்றும்
பருத்தகோபுரங்கோவில் குளமுந்தோற்றும்
சீரடாவேதியர்கள் வீதிதோற்றுஞ்
சிறப்பானராஜமனு சகமுந்தோற்றும்
கூரடாசதுரங்க சேனைதோற்றுங்
குணமானசெந்நெல்முதல் தோப்புந்தோற்றும்
வீரடா போகருட கடாட்சத்தாலே
விதமாகப்புலிப்பாணி பாடினேனே. 77

பிசாச ஜாலம்

பாடினேனின்னமொரு தொழிலைக்கேளு
பண்பானகொடிதனி லைங்கோலஞ்சேர்த்து
நாடியேசாம்பிராணி தயிலங்கூட்டி
நமசிவயஓம்கிலீம் சவ்வும்ஐயும்

கூடியேசர்வபட்சா சரக்ருஷணியென்று
குணமாகலட்சமுரு செபித்துத்திரு
ஆடியேயிதைச்செபித்துத் தூபம்போட
ஆடுவார்புகைபட்ட ஜெனங்கள்தானே. 78

குறளி ஜாலம்

தானென்றகுறளியுட தியானங்கேளு
தயவாகவும் அவ்வும் உவ்வுமவ்வும்
தேனென்றஸ்ரீமுடனே இரீமுங்கூட்டித்
தெளிவானகிலீமுடனே வயநமசியென்று
கோனென்றகுறளிவா வாவா நீயும்
குணமாகச்சொன்னதெல்லாஞ் செய்வாயென்று
வானென்றஇந்திரஜால மையையப்பா
வகையாகத்தானெடுத்துச் சொல்லக்கேளே. 79

கோகர்ண ஜாலம்

கேளப்பாகுறளியைத்தான் லட்சமோதிக்
கெணிதமாய்ப்பலிபூசை நடத்தியப்பா
சூளப்பாமையெடுத்து விரலிற்றொட்டுச்
சுகமாகக்குறளியைத்தான் தியானமோதி
வாளப்பாமேலெங்குந் தொட்டாயானால்
வகையாகத்தொட்டிடங்கள் சுழிக்கவென்று
ஆளப்பாசெய்யென்று நினைத்துக்கொண்டு
அப்பனேதொட்டவிடஞ் சுழிக்கும்பாரே. 80

கஜகர்ண ஜாலம்

பாரென்றகோகர்ண மிதுதானப்பா
பண்பானகெஜகர்ணஞ் சொல்லக்கேளு
சேரென்றமையெடுத்து விரலிற்றொட்டு
செம்மையாய்க்குறளியுட தியானஞ்செய்து
வேரென்றயிருகாதுந் தொட்டபோது
விதமானவிருகாது மாடும்பாரு
தாரென்றகஜக்ரண மிதுதானப்பா
தயவானபோகருட கடாட்சந்தானே. 81

காளி வசியம்

தானய்யாகாளியுட தியானங்கேளு
தயவான அரிகாளி யாகாசகாளி

ஊனய்யாஓடிகாளி வீரகாளி
உற்பனமாஞ்சூல கபாலகாளி
மூனய்யாமோடிதேவி பூமிகாளி
முதன்மையாமோங்காளி யோம்பிடாரி
வானய்யாவாகாளி போடிகாளி
வளமானபத்திரமாகாளி யெண்ணே. 82

என்னவேஓம்-ஆம் கோதண்டரூபி
எளிதானயாளி வாகனத்திலேறி
வெண்ணவேயரசரொடு சபைகள்மெச்ச
விருதலகைகொடியுடன் வேதாளஞ்சூழ
அண்ணவேயாங்கார சத்திகொண்டு
அடைவாகவாவென்று லட்சமோதிப்
பண்ணவேபூசையது வெள்ளிதோறும்
பாங்காகச்செய்தாக்கால் சித்தியாமே. 83

செப்பிடு வித்தை

சித்தியாம்வித்தையொன்று சொல்லக்கேளு
செப்பஞ்சுபந்தஞ்சு கோல்தானென்று
வெற்றியாய்ச்சபைதனிலே யிருந்துக்கொண்டு
விளையாடுங்காளியுட தியானமோது
பத்தியாய்ச்சாலமையைக் கோலிற்றேய்த்துப்
பண்பானசெப்பஞ்சு மாடிப்பாரு
சத்தியாயஞ்சுபந்தும் லட்சம்பந்தாய்
சார்வாகஆடுமடா தாழ்வில்லாதே. 84

எட்டிமுளை வித்தை

இல்லப்பா அறுபத்து நாலுமோடி
இதிமாகவாடுமடா விந்தக்காளி
வல்லபமாயின்னமொரு வித்தைகேளு
வளமானமரக்கொடியுஞ் சீலைசேர்த்து
கொல்லவேசவுத்தினுட தயிலங்கூட்டிக்
குணமானஐங்கோலத் தயிலஞ்சேரு
செல்லவேமூன்றையுங் கருக்கிக்கொண்டு
செம்மையாயம்மியிலே யரைத்திடாயே. 85

அரைத்தெடுத்துச்சிமிழதனில் வைத்துக்கொண்டு
அடைவாகமந்திரத்தைச் சொல்லக்கேளு

திரையநமயங்வங்சிங் சுவாகாவென்று
திறமாகலட்சமுரு செபித்துப்போடு
கருத்தடவியெட்டிமூலி தன்னைச்சீவிக்
கனிவாகமந்திரமா யிரந்தானேதி
நிரைத்தமகாபூசைபலி பெலக்கச்செய்து
நினைவாகமூலியெடுத்துக் கடாவுவாயே. 86

கடாவுவாய்கடைமுன்னே கடை நில்லாது
கனிவாகச்செக்கடியி லெண்ணெய்யில்லை
அடாவுவாயாலையடி சாறுமில்லை
அப்பனேஇன்னமொரு மூன்னுதாகக்
கிடாவவேவஸ்துவது மிறங்காதப்பா
கிருபையுள்ளசூளையது வேகாதப்பா
நடாவியேகொல்லுலை சுண்ணாம்புச்சூளை
நலமானசெங்கல்லின் சூளைதானே. 87

தானேதான்மயானமுன்பு பிணம்வேகாது
தயவானமக்கமடி நிசைவுமில்லை
தேனேதான் தச்சனொடு கன்னான்தட்டான்
தெளிவாகப்பட்டடைமுன் தாக்கிப்போடு
மானேதான்பரிகாரி சிரைக்கும்பக்கல்
மைந்தனேயடுப்படியில் வேகாதொன்றும்
வானேதானிதுகளெல்லாந் தம்பஞ்செய்யும்
வளமான போகருட கடாட்சந்தானே. 88

தானென்றவெள்ளாவி முன்னேதாக்கத்
தயவாகவெள்ளாவி வேகாதப்பா
கோனென்றநெற்களத்தில் ராசிகுன்றும்
குணமானஉப்பதுவும் விளையும்பக்கம்
தேனென்றராசியது குறையும்பாரு
தெளிவானமீன்கரையில் மீன்கிட்டாது
ஆனென்றகொட்டணத்தில் நெற்களெல்லாம்
அப்பனேமசியாது கண்டுபாரே. 89

பாரடாநாவிதனைச் சுட்டகோலும்
பண்பானமூலிசெதுக்கி உகாரம்நாட்டி
சீரடாஐங்காயக் கருவும்பூசிச்
சிறப்பானவெதிரிமலந் தன்னில்தாக்க

வீரடாமுன்பின்னு மடைக்கும்பாரு
விதமாகமாரணமாய்ப் போவானேயா
கூரடாமூளைபிடிங்கி நீரிற்போடக்
குணமாகுமடிந்ததெல்லாம் நிவிர்த்திதானே. 90

சண்டை ஜாலம்

தானென்றாஞ்சடியில் காக்கையென்ற
தயவானமூலிகையொன் றென்னசொல்வேன்
ஊனென்றவிலங்கையிலே குரங்குமூலி
உத்தமனேமலைதோறும் உண்டுஉண்டு
வானென்றவிருமூலி வேணமட்டும்
வகையாகப்பிடுங்கிவந்து சொல்லக்கேளு
ஆனென்றாஞ்சடியில் காக்கைமூலி
அப்பனேயொருசாக்கில் கடைமேல்வையே. 91

வையடாஇலங்கையினிற் குரங்கையப்பா
வளமானஒருசாக்கில் வைத்துப்போடு
பைய்வேயாருக்குங் காணவிட்டால்
பண்பாகயிரும்பிலே பதித்துப்போடு
ஐயோதானிதன்கொடுமை சொல்லப்போமோ
அப்பனேயிருகடைபே ரடித்துக்கொள்வார்
கையவேதம்பியென்று கூப்பிட்டாலும்
கடுகிவைதானென்றே கண்டிப்பாரே. 92

மாடன்மந்திரம்

பாரடாநஞ்சுண்டு மரித்துப்போன
பரிவானமனிதரைத்தான் தகனம்பண்ணிச்
சீரடாகாடாற்று முன்னேதானுஞ்
சிறப்பாகக்கரியதிலே யெடுத்துக்கொண்டு
வீரானஐங்கோலக் கருவைத்தொட்டு
விதமாகவாண்போலே மாடன்கீறித்
தீராகமுகமதுதான் கதித்ததாகத்
திறமாகச்சுவாதனி லெழுதிப்போடே. 93

போடப்பாயெதிரிபே ரதின்கீழ்நாட்டிப்
பொங்கமுடனுகாச மாடனோது
கூடப்பாலட்சமுரு செபித்துப்போடு
குணமானமந்திரந்தான் சொல்லக்கேளு

நாடப்பாஓம்நமோ பகவதே
ஓம்நலமாகஓம்படுசு வாகாவென்று
ஆடப்பாபூசைபலி பலக்கச்செய்து
அடைவாகமந்திரந்தா னேதக்கேளே. 94

கேளடாகாரீயத் தகட்டிலப்பா
கெணிதமாய்மந்திரத்தை யெழுதிப்போடு
சூளடாவெதிரியுட பேரைநாட்டுச்
சுகமானஐங்காயமைங் கோலஞ்சேர்த்து
ஆளடாசுடலையுட கருவுங்கூட்டி
அப்பனேமத்தித்துத் தகட்டிற்பூசி
வாளடாபூசைபலி பலக்கச்செய்து
வளமானமாடனைத்தான் தியானமோதே. 95

ஓதியேமாடனைத்தான் தகட்டிற்கெல்லு
ஒளிவானவாகாச மாடா நீயும்
வாதியாய்க்கல்லிந்தா விந்தாவென்று
வகையாகச்சொல்லியபின் கல்லுதானும்
ஆதியாந்தகட்டின்மேல் வைத்தாயானால்
அப்பனேகல்லதுவு மளவிராது
பாதியேயொருகோடி பூதமெல்லாம்
பார்த்திருக்கத்தானெறியுங் கல்லுதானே. 96

தானேதான்மண்ணெடுத்துச் சாலைக்கற்கள்
தயவாகமாட்டெலும்பு செங்கல்முட்டை
மானேதானவபாண்ட மரிசியுப்பு
வளமானமிளகுபொடி தீட்டுச்சீலை
வானேதான்குப்பையொடு கண்டதெல்லாம்
வாரியேதானெறியு மில்லந்தன்னில்
கோனேதானெதிரிபோ மிடங்களெல்லாங்
கொற்றவனேயவனருகே போகும்பாரே. 97

பாரடாசத்துருவும் வணங்கிவந்தால்
பண்பானமாடா நீ யழித்துப்போட்டு
வீரடாமாடா நீ கல்லைத்தானும்
விதமாகத்தாவென்றே யெடுத்துப்போடு
சீரடாசாணமிட்டு மெழுகிப்போடு
திரமாகச்சக்கரத்தைக் கழுவி நீயும்

கூரடாசலந்தனிலே விட்டுப்போடு
குணமாகமாடனைத்தான் பூசைசெய்யே. 98

கொள்ளி ஜாலம்

செய்யவேயின்னமொரு வித்தைகேளு
செயலானகொள்ளி வாய்ச்சாலமப்பா
பையவேசிவயவசி யென்றுலட்சம்
பாங்காகத்தான்செபித்துப் பூசைசெய்து
உய்யவேயக்கினியைத் துணியிற்சுற்றி
யுத்தமனேதகட்டிலட் சரத்தைக்கீறிக்
கையவேயைங்காய மைங்கோலந்தான்
கனிவாகச்சுடலையுட கருவும்பூசே. 99
பூசியேயெதிரியுட பேரைநாட்டிப்
பொங்கமுடன்பூசித்துக் கொள்ளிவாய்க்கு
ஆசியேபந்தெடுத்துத் தகட்டில்வைத்தே
யப்பனேயிருதலைக் கொள்ளிதானும்
வாசியேசத்துருவின் மனைகள்தோறும்
வைத்துநீகொளுத்தென்று தியானமோது
காசியேகொளுத்துமடா திரியும்பந்து
கடிதாகக்கொளுத்திவிடுங் கண்டுபாரே. 100

மலக்குட்டி

பாரடாமலக்குட்டி தியானங்கேளு
பாங்கானஓம்இரீம் வாவாவென்று
கூரடாமலக்குட்டிச் சாத்தாவென்று
குணமாகநான்வைத்த பூசைகொண்டு
வீரடாநான்சொல்லும் வேலைகேட்டு
வீணுகமலமதனை வாரிநீயும்
சேரடாநானினைத்த விடத்திற்போடு
செப்புமிதுராஜபலி பலக்கச்செய்யே. 101

மலக்குட்டி ஜாலம்

செய்யவேமந்திரத்தைத் தகட்டிற்கீறிச்
செம்மைபாயைங்காய மைங்கோலஞ்சேர்த்து
வையகத்திற்சுடலையுட கருவுங்கூட்டி
வளமாகமத்தித்துத் தகட்டிற்பூசிப்
பையவேயெதிரிபேர் தகட்டில்நாட்டிப்
பாங்கானமந்திரத்தை லட்சமோது

ஐயமின்றிப்பூசைபலி பலக்கச்செய்து
அப்பனேமலமெடுத்துத் தகட்டில்வையே. 102

வைக்கையிலேமலயிந்தா மலகுட்டியென்று
வ்வைத்தல்லோமந்திரத்தைத் தியானஞ்செய் நீ
அலக்கையிலேமலமதனை வாரிக்கொண்டு
அடைவாக நீ நினைத்த விடங்கள்தோறும்
சொக்கையிலேதகடெடுத்துக் கழுவிப்போடு
சொகுசாகப்போகுமடா தீர்க்கமாக
உக்கையிலேயிதுவல்லோ வுலகபேதம்
உத்தமனேமலக்குட்டிச் செய்கைதானே. 103

கவசமந்திரம்

தானேதான்கவசமொன்று சொல்லக்கேளு
தயவாகரீங்காரம் வெளிமுகட்டில்
மானேதான் இம்-உம்-நம்-நமாங்-சிங்கென்று
மைந்தனேயாயிடாகினி மாங்காளி
ஊனேதான்விஷ்ணுசகோதரி சர்வாணி
யுமைதேவிபராசத்தி கவசியென்று
கோனேதான்லட்சமுரு செபித்துப்போடு
கொற்றவனேசத்திசிவ பூசைசெய்யே. 104

செய்யடாதியானமிட்டு விபூதிபூசிச்
செகதலத்திலேவல்முதல் பசாசுபூதம்
பையவேபுதைபில்லி வேர்பிடுங்கிப்
பகர்ந்தகருத்தடவிச்சக் காங்கள்வாட்டல்
நையவேபார்வையுடன் குறளிகுட்டி
நலமாகமற்றுள்ள சூனியங்கள்
கையவேகல்லெரிக்குந் தீக்குமப்பா
கனிவாகமந்திரத்தை எழுதிக்கட்டே. 105

ஒண்டி மூலிகை

கட்டப்பாமூலியொன்று சொல்லக்கேளு
கனிவாகவொண்டியுட மூலிக்கேதான்
கிட்டப்பா அமாவாசைக் கிராணகாலங்
கிருபையுள்ள அருக்கனு ளேதொன்றப்பா
நெட்டப்பாபொங்கல்பலி பூசைசெய்து
நேராகவேரெடுத்துக் கட்டிக்கொண்டால்

பட்டப்பாபார்வைமுத லெதுவானாலும்.
பக்கத்திலணுகாம லகன்றுபோமே. 106

பார்வை மை

போமப்பா ஆமையொன்று மணத்தவளையென்று
பொங்கமுடன்கோழியுட முட்டையொன்று
தாமப்பாபுதைத்தெலும்பு பலந்தான்ரெண்டு
தயவானஈசலது பலந்தான்ரெண்டு
நாமப்பா நிலாவாரை விதைதானப்பா.
நாயகனேபலமிரண்டு நிறுத்துப்போடு
ஆமப்பாமரக்கொடிதான் வராகன்மூன்று
அடைவாகப்பூத்தயில மாகவாங்கே. 107

வாங்கியேதயிலத்தை யெடுத்துக்கொண்டு
வளமானகுழியம்மி தன்னிற்போடு
தாங்கியேயஞ்சனக்கல் வராகனென்று
தான்போட்டு ஆள்காட்டி முட்டைநெய்யில்
பாங்கியேகொஞ்சமது கூடவிட்டுப்
பரிவாகவொருசாமந் தானரைத்துக்
காங்கியேசிமிழில்வைத் தனுமாருக்குங்
கனிவாக அஞ்சனிக்கும் பூசைசெய்யே. 108

செய்யப்பாமையெடுத்துப் பார்க்கும்போது
செயலானகளவுமுத லேவலப்பா
வையப்பாதொழில்முறையுந் தெய்வபூதம்
வளமானபசாசுராட் சதகணங்கள்
பையப்பாமோடிதா னொருவன்செய்தால்
பாங்காகவவன்செய்கை தோற்றலாகும்
கையப்பாயிதுபார்வை மைதானப்பா
கனிவாகச்சொல்லுமடா கருத்தாய்த்தானே. 109

வாணமடக்க

தானேதானின்னமொன்று சொல்லக்கேளு
தயவாக அரையடக்க அங்கமடக்க
மானேதானங்கமேற் பங்கமடக்க
மைந்தனேவழியடக்கச் சுவாகாவென்று
கோனேதான்தண்ணிமிட்டான் கிழங்குக்கப்பா
கொற்றவனேயருக்கனுள் காப்புக்கட்டி

வானேதான்பொங்கல்பலி பூசையிட்டு
வளமானமந்திரமா யிரந்தானேதே. 110

ஓதியேபிடிங்கிமுன் கருவைப்பூசி
ஓகோகோகாலடியில் மிதித்துக்கொள்ளு
சோதியேவாணமது எதிரோரூது.
சுருக்கானமந்திரத்தை யோதிநில்லு
ஆதியேவாணமது வெடிக்கும்பாரு
அந்தரத்திற்செல்லாது அதீதவித்தை
வாதியேபோகருட கடாட்சத்தாலே
வளமாகப்புலிப்பாணி பாடினேனே. 111

பாதாள அஞ்சனம்

பாடினேனூசியென்ற காந்தம்நீலம்
பண்பானவூமைகையில் மஞ்சளப்பா
ஆடியேவேசிகை வெற்றிலையுங்கூட
ஆடைவானசெங்க்முநீர் வேறுமையா
நாடியேதலைமஞ்சன் மாவுங்கூட்டி
நலமானகோரோசனை குங்குமப்பூ
கூடியேவகைவகைக்கு வாரகனென்று
குழியம்மிதனிலரைக்க வகையைக்கேளே. 112

கேளடாமாடமென்ற புருவின்ரத்தம்
கெணிதமாயொன்றறுத்துக் கூடவாரு
சூளடாசிவந்தபசு வெண்ணெயப்பா
சுகமாகவராகனது பனிரெண்டாகும்
நாளடாமூன்றுநா ளரைத்தெடுத்து
நாயகனேசிமிழில்வைத்துக் காளிமுன்பில்
வாளடாபுதைத்தெடுப்பாய் நாளெட்டாகும்
வளமானபுழுகுடன் சவ்வாதுசேரே. 113

சேரப்பாவகைவகைக்கு வராகனென்று
சீராகமத்தித்து மந்திரந்தான்
பாரப்பாசர்வலோக வசிகரிஓமென்று
பண்பாகஆயிரத்தெட் டுருஜெபித்து
நேரப்பாதிலகமிடு புருஷபெண்கள்
நிச்சயமாய்க்கேட்டதெலா மீவாரப்பா
கூரப்பாபகைகளெலா நசித்துப்போகும்
குற்றமொன்றுமில்லையடா ஜெகத்தில்தானே. 114

தானப்பாவேர்வெடித்த பலாவின்கொட்டை
தான்கருக்கிவாரகனிடை பத்ததாகும்
தேனப்பா அஞ்சனபா ஷாணமொன்று
தெளிவாகக்குழியம்மி தன்னிற்போட்டு
வானப்பாவிளக்கெண்ணெய் தன்னிலாட்டு
வளமாகவொருசாம யரைத்தபின்பு
கோனப்பாசிமிழில்வைத் தஞ்சனிக்குங்
குணமானவனுமார்க்கும் பூசைசெய்யே. 115

செய்தபின்புகையிலிட் டெவரும்பார்க்கச்
செகத்திலுள்ள நிதிகளெலாங் கண்ணிற்காணும்
எய்தபின்புவேண்டியதை யெடுத்துக்கொள்ளு
இதமாகஇகபரத்துக் குறுவியாகும்
உய்தபின்புநாழிகைதான் பாதாளத்தி
லுத்தமனே நிகளமூந் நூறுகாதம்
பைதபின்புயிம்மைதா னுருநிமெத்தப்
பார்த்தவர்க்குப்பலனுண்டு பலிக்கும்பாரே. 116

குறிசொல்லல்

பாரடா ஆடையொட்டி சமூலமப்பா
பண்பான நின்றிடந் தீஞ்சமூலி
சேரடாகருச்சீலை யிந்தமூன்றுஞ்
செம்மையாய்க்கருக்கியல்வோ மைபோலாட்டி
சீரடாசுடலையென்ற தயிலஞ்சேர்த்துச்
செவ்வியதாயரைத்து நீ சிமிழில்வைத்து
வீரடா அனுமாரைத் தியானஞ்செய்து
விதமாகத்திலகமிட்டுக் குறிதான்சொல்லே. 117

சொல்லப்பா அஞ்சன தேவிபுத்திரா
சொகுசானவாய்வுமைந்தா புருஷரூபா
வல்லவீரா அநுமந்தா ராமதூதா
வந்தகுறிசொல்லென்று வணங்கிக்கேளு
இல்லப்பா நினைத்ததெலாஞ் சொல்வான்பாரு
என்னசொல்வேனனுமனுட குறிதான்மைந்தா
நல்லப்பாபோகருட கடாட்சத்தாலே
நலமாகப்புலிப்பாணி பாடினேனே. 118

ஈடுமுறை

பாடியேயீடொன்று சொல்லக்கேளு
பண்பான அடைக்கலாங் குருவியாண்தான்

ஆடியேபிடித்துவந்த பானந்தைத்து
அதின்வாயிலூசியென்ற காந்தம்வெள்ளை
கூடியேவாயை நீ தைத்துப்போடு
குணமானசிறுபாண்ட மதிலேவிட்டு
நாடியேவஸ்துஒரு படிதான்வார்த்து
நலமாகவாய்மூடிச் சீலைசெய்யே. 119

செய்தபின்படுப்பேற்றித் தீயைமூட்டிச்
சிறப்பாகவொருசாதி விறகினாலே
வைதுநீர்வற்றியபின் பெடுத்துக்கொண்டு
வளமானகுழியம்மி தன்னிற்போட்டு
கொய்தபின்புரோமமுட னஸ்திதள்ளிக்
குலவுமரக்கொடியுமரு ளுமத்தைவித்தும்
பைதபின்புசுழல்வண்டு மின்னற்பூச்சிப்
பருத்தகுழியானையிந்திர கோபந்தானே. 120

தானென்றதொட்டாக்கால் வாடிவேரும்
தயவாகநாயுருவி கைபான்வேரும்
தேனென்றஇகைப்பூடு பூச்சியப்பா
திரமாகவகைவகைக்கு வாரகனென்று
கோனென்றஈப்புலியு மீயுங்கூடக்
கொற்றவனேயாடையொட்டியை விரலிக்கஞ்சர்
வானென்றபேய்க்கருட்பஞ் சாற்றினாலே
வகைவகைக்குச்சரியிடையாய் விட்டு ஆட்டே. 121

ஆட்டப்பாகுளிகையது துவரைபோலே
அப்பனேசெய்து நீழலிலுலர்த்தி
நாட்டப்பாமந்திரந்தான் சொல்லக்கேளு
நமோ இங்இங்சிங்சிங்சிங் சுவாகாவென்று
மாட்டப்பாவிந்துவிட்டுக் குழைத்துநீயும்
பங்கையருக்கறுசுவையில் தாம்பூலத்தில்
கூட்டப்பாமங்கையர்கள் விரகமீறிக்
கொம்பனையார்தாமணைய வருவார்பாரே. 122

பிறிவு

பாரடாபிறிவுக்குக் குளிகையொன்று
பாடுகிறேனன்றாகச் சொல்லக்கேளு
வாரடாசெத்தாடு உண்ணியப்பா
வளமானவிடத்தலாம் பட்டைகூட்டி

நீரடாதண்ணீர்விட் டரைத்துமைபோல்
நினைவாகத்துவரைபோற் குளிகைசெய்து
கூரடாகொடுத்தவுடன் முறிந்துபோகும்
கொற்றவனேயறுசுவையில் தாக்கிப்போடே. 123

வசியம்

போடவேயின்னமொன்று சொல்லக்கேளு
புகன்றபொன்னுவாரை சமூலம்வாங்கி
ஆடவேகருக்கியதை நிழலுலர்த்தி
யப்பனேகுழித்தயில மாகவாங்கி
கூடவேகுழியம்மி தன்னில்விட்டுக்
குக்கிடத்தின்வெண்கருவுங் கூட்விட்டுச்
சாடவேமரக்கொடியும் புழுகுபூரம்
தக்ககோரோசனையும் வகைக்குஒன்றே. 124

ஒன்றுனவுகைவகைக்கு வராகனென்று
ஒழுங்காகத்தானரைத்துச் சிமிழில்வைத்து
நன்றாகத்திலகமிடப் புருஷரெல்லாம்
நாயகியாள்கேட்டதெலா மீவார்பாரு
ஒன்றாகவவர்வந்து வாசல்காப்பார்
உனக்கடிமையாகியல்லோ வேலைசெய்வார்
பன்றாகவவனையே காணவிட்டால்
பதறுவாள்சிணுங்குவாள் கோவிப்பாளே. 125

கோவிதமாயின்னமொரு மார்க்கங்கேளு
குணமாம்புல்லாமணக்குச் சமூலம்வாங்கி
ஆவிதமாய்மாதவிடாய் மூன்றுநாளும்
அப்பனேகட்டிவைத்து நாலாநாளில்
தாவிதமாய்மரக்கொடியும் வராகனென்று
தனியாகமூன்சீலை வராகனென்று
பூவிதமாயவணீரா லரைத்துமைபோல்
பொங்கமுடன்துவரைபோற் குளிகைசெய்யே.

செய்யப்பாகுளிகையது தாம்பூலத்தில்
செயலானவறுசுவையி லன்னப்பாலில்
வையப்பாகொடுத்தவுடன் மயங்குவார்கள்
வாணுதலார்தான்பிறியார் மறுமுகமும்பாரார்
கையப்பாமகிழ்வாக மருவிவாழ்வார்
கடன்வாங்கித்தான்கொடுப்பா ரேவலாளாய்

ஐயனேயவர்பிரியச் சிந்தைசெய்வார்
அப்பனேயினிபிரியுங் குளிகைமாட்டே. 127

மாட்டடாபெண்பிரியும் பிறிவுக்கெல்லாம்
மைந்தனேகடுகோடு மயானச்சாம்பல்
கூட்டடாகுடிபோன வீட்டுமண்ணும்
குணமானவருக்கனு ளிரவுவேளை
நாட்டடாகர்த்தபந்தான் புரண்டமண்ணும்
நலமானதச்சனுளிச் சிராயுஞ்சுற்றி
ஆட்டடாமுப்பாதை பிறிந்தமண்ணும்
அப்பனேமந்திரத்தைச் சொல்லக்கேளே. 128

கேளேளும்ஸ்திரீயபிரியநசி நசியென்று
கெணிதமுடனிருவ்ருட பேருமாறிச்
சூளடாவைங்காய மரைத்துப்பூசிச்
சுறுக்காகமந்திர மாயிரந்தானுேதி
வாளடாசீலேயிலே வைத்துக்கட்டி
வளமாகப்பூசைசெய் திறப்பின்மூன்பில்
கோளடாவைத்துவிடு இருவர்தாமும்
கொற்றவனேபிறிபட்டுப் போவார்பாரே. 129

தாதுபுஷ்டி

பாரப்பாசந்தனமுந் தேற்றான்வித்தும்
பண்பானபூமி சக்கரையின்மூலம்
சேரப்பாபூனையென்ற காலிவித்துஞ்
செயலானமுருங்கைவேர்ப் பட்டைகூட்டி
கூரப்பாவகைவகைக்கு வராகன்ரெண்டு
கொற்றவனேதானரைத்துத் தேங்காய்ப்பாலில்
தீரப்பாசீனிசக்கரையும் போட்டுத்
திறமாகக்குடிப்பா யீராறுநாளாமே. 130

ஆமடாகுடித்துவரத் தாதுபுஷ்டி
யப்பனேவீரியந்தான் விளையும்பாரு
தாமடாசூடுகள்தான் தணியும்பாரு
தளதளப்பாய்தேகமது காந்தியுண்டாம்
வாமடாபெண்களைத்தான் புணர்ந்தாயானுல்
வளமானமன்மதனே விவனென்பார்கள்
நாமடாபோகருட கடாட்சத்காலே
நலமானபுலிப்பாணி பாடினேனே. 131

வஸ்துபாண்டமுடைய.

பாடியேயின்னமொரு வித்தைகேளு
பரிவானசாராய மூறும்பட்டை
நாடியேகொணர்ந்துகருச் சீலைசுற்றி
நாயகனேகாளிகோட்ட முன்பில்வைக்க
ஆடியேபானையெல்லா முடையும்பாரு
அடைவாகவிறங்காது கெட்டுப்போகும்
கூடியேயெடுத்தெறிந்து போட்டாயானல
குணமாகப்பானையது விளையும்பாரே. 132

விளைவுகெட

விளைவுகெடக்கொடிவேலி காப்புக்கட்டி
விதமாகரம்மென்று லட்சமோதி
களவாகக்கலசத்தில் வைத்துமூடிக்
கனிவாகக்கருக்கூட்டிக் காடுசெந்நெல்
விளைவுபெறுங்கொடிக்காலுங் கன்னல்வாழை
விதமானதென்னமரச் சோலைதோப்பும்
அளவுபெறவைக்கிலெல்லாப் பலனுங்குன்றும்
அப்பனேயெடுத்தெறிந்தாற் பலனுண்டாமே.

விளைவுபெருக

ஆமடா நாயுருவி காப்புக்கட்டி
அப்பனே ஸ்ரீமென்று லட்சமோதி
தாமடாகாடுசெநநெல் கரும்புவாழை
தயவானகொடிக்காலுந் தென்னந்தோப்பும்
வாமடாஐங்கோலக் கருவும்பூசி
வளமாகக்கலசத்திற் புதைத்தாயானல்
நாமடா இதுகளெலா மதிகமாகும்
நலமானபோகருட கடாட்சந்தானே. 134

பூதபிசாசு விநோதம்

தானனசொரிதவளை பிடித்துவந்து
தயவாகச்சாம்பிராணி வேணமட்டும்
மானனஅதின்வாயிற் செலுத்தித்தைத்து
மைந்தனேபுகையூறத் தலைகீழ்கட்டி
வானனமண்டலந்தான கடந்துவாங்கி
வளமானசாம்பிராணி யெடுத்துக்கொண்டு

ஆனதோர்தலைமஞ்சங் கொடியுங்கூட்டி
அடைவானசாம்பிராணி புகையும்போடே. 135

போடப்பாபுகைபிடிக்கப் பசாசுபூதம்
பொங்குமுள்ளதேவரொடு முனிகறுப்பன்
நாடப்பாபிரமராட் சதனுஞ்சாத்தான்
நலமானலாடன் சப்பாணிபின்னும்
கூடப்பாஓமென்று போட்டாயானால்
கொற்றவனேதலைவிரித் தாடும்பாரு
ஆடப்பாபேருருஞ் சொல்லுமையா
அப்பனேபுகையினுட பெருமைதானே. 136

பெருமையாயின்னமொரு மார்க்கங்கேளு
பேணியேமனிதாஸ்தி கழுதையஸ்தி
அருமையாய்க்கழுதையின் தண்டுச்சீலை
யப்பனேமனிதர்மலம் பண்ணிலத்தி
உரிமையாங்காக்கணம்வேர் சீந்தில்மேனி
புத்தமனேமுட்டைகொஞ்சஞ் சேர்த்திடித்துத்
தெரிவானபுகைபோடத் தேவர்யாருந்
திறமாகவாடுவர்காண் சீயென்றோதே. 137

விநோத ஜாலம்

ஓதவேயின்னமொரு வித்தைகேளு
ஒளிவானசிதம்பரத்தின் பூசைசொன்னோம்
கோதிலுச்சாடன சக்கரத்தைக்கீறிக்
கொற்றவனேபிராமணரிற் பிரமசாரி
ஆதரவாயவன்மரித்துத் தகனமாகி
யப்பனேகாடாற்று முன்னேதானும்
வாதாகஅஸ்தியொன் றெடுத்துவந்து
வளமானவஸ்துவொரு மேருவாங்கே. 138

வாங்கியேசக்கரத்தை லட்சமோதி
வளமாகத்தான்புதைப்பாய் தேவர்பின்பில்
பாங்கியேவஸ்துவுட னஸ்திதானும்
பாங்காகத்தேவர்முன்பு தைத்துப்போடு
தாங்கியேபலிபூசை செய்தாலப்பா
தயவாகத்திருநடன மாடும்பாரு
ஓங்கியேகேட்டவரங் கொடுக்கச்செய்யும்
உத்தமனேஜெனங்கூட்ட மாகும்பாரே. 139

தேள்கடியிறங்க

பாரடா இன்னமொரு வித்தைகேளு
பாங்கானசெம்போத்து நாக்குமைந்தா
சேரட்டாவுடும்புடைய நாக்குங்கூட்டிச்
செயலானகிழ்க்காயின் மூலம்வாங்கிக்
கூரடாரசமப்பா வாரகனென்று
கொற்றவனேயாண்கழற்சிக் காயினுள்ளே
தீரடாகிராணமது தீண்டும்போது
திறமாகவெடுத்துகொசு மெழுகில்மூடே. 140

மூடியேதேள்கடித்து வந்தபேர்க்கு
முன்னாகக்கழற்சியதைக் கையில்தந்து
ஆடியேபின்னொருவர்கையி லீந்தால்
அப்பனேயிவனைவிட் டவன்மேற்போகும்
நாடியேதேளின்விஷ மென்னசொல்வேன்
நடுநடுங்கியழுதிடுவா னெறியுங்கட்டும்
கூடியேகாயை நீ போடென்றக்கால்
குணமாகப்போட்டவுட னிறங்கிப்போமே. 141

சிலைமெழுகு பாவை

போமென்றகருநாயின் விலாவின்வில்லும்
பொங்கமுடனகத்தி னரம்புதானும்
ஆமென்றசுடலையின் கருவுங்கூட்டி
யப்பனேயைங்கோலத் தயிலஞ்சேர்த்து
நாமென்றநாணதிற் பூசியப்பா
நாயகனேகழிப்பினுட னியானங்கேளு
தாமென்றஓம் ரீங்ரங்மங்சங்ஐயும்
தய்வாக றீம்ரங்லாலி லூவென்னே. 142

என்னவேமங்சிங்சிவய நமவென்று
என்னசொல்வேன்மந்திரத்தை லட்சமோதிப்
பன்னவேபூசைபலி பெலக்கச்செய்து
பாங்கானவெதிரிபேர் தன்னைச்சொல்லி
நன்னவேநாணேற்ற வியாதிகொண்டு
நடுநடுங்கிமரணமாய்ப் போவான்பாரு
அன்னவேகழிவினுட வீரமெத்த
ஆரறியப்போகிறு ரருமைதானே. 143

தானென்றசிவன்காளி கணபதிகந்தன்
தயவானவயிரவனும் பெருமாளையன்
கோனென்றவநுமஞெடு கறுப்பனப்பா
கொற்றவனேயவர்கள் மெழுகெடுத்துக்கொண்டு
தேனென்றவகைவகைக்கு வாராகனென்று
தெளிவானமெழுகுபதி னெண்வராகன்
வானென்றஜங்கோல மைங்காயஞ்சேர்த்து
வளமானசுடலையுட கருவுங்கூட்டே. 144

கூட்டியேலேகித்து உருப்போற்செய்து
கொற்றவனேமயானருத்ரன் தியானமோது
நாட்டியேமம்யம் டம்டம்மென்று
நலமானமயானருத்ரா கட்டுகட்டு
சூட்டியேயெரியெரி யென்றுலட்சஞ்
சுகமாகத்தானேதிப் பூசைசெய்து
ஆட்டியேசத்துருப்பே ரெழுதிவைத்து
அப்பனேயுருவயிற்றிற் பதித்துப்போடே. 145

பதித்துநீயாயிரத்தெட் டுருஜெபித்துப்
பண்பானபூசையது பாங்காய்ச்செய்து
அதித்துநீமுப்பத்திரண் டுறுப்பில்
அப்பனேமுடக்கிவைக்க முடமதாவான்
கதித்தவுடனூசியிலே குத்தும்போது
கனிவானவிரல்நகங்கள் காதில்குத்தும்
நதித்தவுடனூசியது செருகிவைக்க
நாயகனேகுத்தலெடுத் தலறுவானே. 146

அலறியேயவன்வணங்கி வந்தானானல்
அப்பனேமுடந்திருப்பி யூசிவாங்கு
நலமாகவயிற்றில்வைத்த சீட்டும்போக்கு
நாயகனே நிவர்த்தியாய்ப் போகும்பாரு
குலமானபாவையை நீ பதனம்பண்ணு
கொற்றவனே நினைத்தபோ தெடுத்துச்செய்நீ
பலமாகஇப்பாவை கையில்வேணும்
பார்த்தவர்க்குப்பலனுண்டு பலிதமாமே. 147

ஆம்பாஜயும்கிலீம் சுவாகாவென்று
அடைவாகலட்சமுரு ஜெபித்துத்தீரு

நாமப்பாபூசையப்பா சத்திபூசை
நாள்தோறுமண்டலந்தான் தினமுஞ்செய் நீ
வாமப்பாமண்டலத்திற் சித்தியாகும்
வளமாகவேணுமென்ற தெதுவானாலும்
போமப்பா நீசொல்லித் தியானஞ்செய்யப்
போகுமேயவரிடத்திற் கனவில்தானே. 148

கனவிலேபேய்போற்பெண்போற் பேய்சொல்லும்
கனிவாக இன்னனே யழைத்து நீதான்
வினவியேயின்னதெலாங் கொடுத்து நீயு
மீருதேயவன்சொல்லை யெதுசொன்னாலும்
பனுவலாற்றேவியுட வருள்தான்பெற்றோன்
பண்புள்ளோனல்லகுண னென்றுகூறும்
அனுவியேசொப்பனந்தான் வராகியாலே
யப்பனேஜெகமுழுதும் வணங்கும்பாரே. 149

பாரடாபேய்நரிநாய் குடித்தபோது
பாவமில்லையதின்சோற்றை யொன்றில்வாங்கிச்
சேரடாவரிசியதி லுலரப்போட்டுச்
சேர்த்தப்பாசுடலையுட கருவுங்கூட்டிக்
கூரடா நிழலதனி லுலரவைத்துக்
கொடிதாகவரிசிகொஞ்ச மறுசுவையிலன்னம்
வீரடாசத்துருவுக் கிட்டபோது
விதமானபிரமைகொண் டலைவான்பாரே. 150

பாரப்பாமிளகு தக்காளிச்சாறு
பண்பாகமூன்று நா ளாறுவேளை
கூரப்பாகொடுத்திடவே தீரும்பாரு
குணமாக நிவிர்த்தியாய்ப் போகுங்கண்டாய்
சீரப்பாப்த்தியந்தா னுப்பாகாது
சிறப்பானவேழா நா ளெல்லாங்கூட்டு
வீரப்பாபோகருட கடாட்சத்தாலே
விதமானபுலிப்பாணி பாடினேனே. 151

மோடி வித்தை

பாடினேனின்னமொரு மோடிவித்தை
பண்பான நடன சிதம்பரத்தைக்கீறி
ஆடினேனட்சரமும் பீஜமெல்லாம்
அடைவாகத்தானடைத் தருளையோதிக்

கூடவேஓம்ஸ்ரீயும் ஐயுங்கிலியும்
குணமானஅவ்வுமுவ்வு மவ்வும்சிவ்வும்
நாடியேநமசிவய சுவாகாவென்று
நலமாகலட்சமுரு ஜெபந்தாளேதே. 152

ஓதியேசக்கரத்தை வைத்துக்கொண்டு
உத்தமனேசோடசமாம் பூசைசெய்து
சோதியேசக்கரத்தை வைத்துக்கொண்டு
சுகமானமோடிவைக்கச் சொல்லக்கேளு
ஆதியேகோயில்முன்பு குளத்தின்முன்பு
அப்பனேயம்பலங்கள் தெருவிலப்பா
தீதிலாப்போகருட கடாட்சத்தாலே
திடமாகக்கும்பம்வைக்கும் நீதிகேளே. 153

நீதியாய்க்குருபாதந் தனைவணங்கி
நினைவாகப்பெரியோர்கள் பதமும்போற்றி
மோதியேசித்தர்முத்தர் முனிகளுப்பு
முதலானராட்சதையு மேவல்வைப்பும்
தீதானசத்துருக்கள் மிருகசாதி
தீயகொடுவிஷமுதலா யெதிர்நில்லாது
மீதுநீநினைத்தபடி யெல்லாஞ்சித்தி
விதமானவாளுஞ் செக்குலக்கைநாட்டே. 154

நாட்டியேயுலக்கைமுன்பு தேங்காயொன்று
நலமானதேங்காய்முன் குறடாவொன்று
கூட்டியேயதின்பின்பு பாதரட்சை
குறியாகவதின்முன்பு தேய்ந்தமாறும்
தேட்டியேயதின்முன்பு வாயைநாட்டித்
தெளிவானபந்தலிற் பூமாலைகட்டி
ஆட்டியேமர்விலைத் தோரணமுங்கட்டி
யப்பனேபூசைபலி பெலக்கச்செய்யே. 155

பெலக்கவேயெட்டிமுளை கருவும்பூசிப்
பேதமில்லையஷ்டதிக்கி லடித்துப்போடு
அலக்கவேகோடேழு சீறிப்போடு
அப்பனேகாளியுட தியானமோது
சிலக்கவேயெதிரியை நீயெடுக்கச்சொல்லு
செயலாகவவன்வந்து சார்வானாகில்

கலக்நவேகக்குகக்கு காளி துர்க்கி
கருத்தாக அரீ அம் அம் ஓமென்றுதே. 156

ஓதியேகண்கட்டு மையைவாங்கி
யுத்தமனேகையதனிற் றடவிக்கொண்டு
வாதியேவேப்பிலையை யுருவிப்போடு
வளமானதேள்கொட்டி மயங்குவான்பார்
ஆதியோங்ராங்கு சூலியென்று
அப்பனேயுளுந்தோதி யெறியவீழ்வான்
சோதியேவறிவறி மறிசண்டாளி
சுகமானமாங்காளி அம் அம்எண்ணே. 157

எண்ணியேவிபூதியைத்தான் தியானமோதி
யெதிர்போடவன்விழுவான் கண்டுபாரு
நண்ணவேஓம்படு சுவாகாவென்று
நலமானவிபூதியள்ளி யோதிப்போடு
கண்ணவேயவன்விழுவான் கோபிப்பான்பார்
கனிவாக அம்மம் நிம் ஓமென்றேதான்
உண்ணவேவேப்பிலைமண் ணுளுந்துடனேயரிசி
யுத்தமனேவிபூதிமுத லோதிப்போடே. 158

போட்டவுடனவன்விழுவா னுதைத்துக்கொள்வான்
பொங்கமுடனவன்வாயி லுதிரங்கக்கும்
ஆட்டவுடன்மாறுகழல் குறடாவப்பா
அண்டவானதேங்காயு முலக்கைதானும்
கூட்டமாயிதுகளெலா மெழுந்தடிக்கும்
கொற்றவனேவாளெழும்பி வெட்டும்பாரு
நாட்டமுடன்காளியைத்தான் தியானஞ்செய்தால்
நாயகனேயிவையெல்லா மடிக்குந்தானே. 159

தானடாஓம்சிங்வங் யநமவென்று
தயவாக அம்உம் அம்மம்மென்றுரு து
வானடா நங்மங்சிங் வங்யங்கென்று
வளமான அங்ஷ அங்ஷ சுவாகாவென்று
கோனடாலட்சமுரு செபித்துப்போடு
கொற்றவனே நினைத்தவெலாந் தம்பமாகும்
நானடாபோகருட கடாட்சத்தாலே
நலமானபுலிப்பாணி பாடினேனே. 160

சோறு வேகாதிருக்க

பாடவேயின்னமொரு வித்தைகேளு
பண்பாகவெண்காந்தி வேரைவாங்கி
நாடவேகஞ்சாவித் தைங்கோலஞ்சேர்த்து
நாயகனேயுலையரிசி தன்னிற்போட்டால்
கூடவேசோறதுவும் வேகாதப்பா
கொற்றவனேமாற்றுமிதுக் கில்லைபாரு
ஆடியேபோகருட கடாட்சத்தாலே
அப்பனேபுலிப்பாணி பாடினேனே. 161

பேயாட்ட

பாடியேவங்சிங் சிவயநமவென்று
பண்பாகச்செபித்தவுடன் பசாசுபூதம்
கூடியேயோடுமடா கண்டுபாரு
குணமாகவங்மங்சிங் சிவயநமவென்று
நாடியேஜெபித்தவுட னழுகும்பாரு
நாயகனேசிவய நமசியென்று
சூடியேபசாசுமுதற் பூதமெல்லாஞ்
சுறுக்காகவோடுமடா கண்டுபாரே. 162

உடுக்கு கட்ட

பாரடாசிவனுணை சித்துடுக்கடைச்சான்
பண்பாகச்சிவனம்மை பகவதியாணை
கூரடாஐயுங்கிலியும் சவ்வும்கட்டு
குறிப்பாகமாதவ ராணைகட்டி
சோரடாவராகிஐயும் கிலியும்சுவாகா
சிறப்பாகஆதியந்தங் கட்டுகட்டு
வீரடாஜெபித்தவுட னுடுக்குகட்டும்
விதமான்போகருட கடாட்சந்தானே. 163

வியாதி போக்க

தானப்பாஓம்தூளி யந்ததூளி
தயவாகமுன்திருக்கண்ணிற் பின்தூளி
பானப்பாகாச்சல் தலைவலியும்பாரிற்
பறந்தோடச்சுவாமிகுரு வாணைபோவென்
றுனப்பாவிபூதியைநீ தியானமோதி
யளித்தவுடன்பலபிணியு மகன்றுபோகும்

வானப்பாபோகருட கடாட்சத்தாலே
வளமானபுலிப்பாணி பாடினேனே. 164

நீலகண்ட மந்திரம்

பாடினேநீலகண்டஞ் சொல்லக்கேளு
பண்பானஓம் நீலகண்டருத்ரா
ஆடியேமங்சிங்சர்வ மாரணேத்தண்ட
அடைவாகஉம்படு சுவாகாவென்று
கூடியேலட்சமுரு செபித்துத்தீரு
குற்றமறத்தற்பணமா யிரந்தான்பத்து
நாடியேயோமமா யிரந்தானப்பா
நலமான அன்னமிடு நூறுபேர்க்கே. 165

போனபிராமணருக் கன்னம்போடு
பேதமில்லைபூசையது பத்தேயாகும்
நேரானபூசையது வல்லதுசுத்தி
திறைத்துவிடு நீலகண்டஞ் சித்தியாச்சு
சீரானதம்பனம்நீ செய்யவேண்டில்
செயலாகச்சுவாமியைப் பொன்னிறமதாக
வீரானநீலகண்டத் தியானமப்பா [டே.
விதமானமுகத்தில்நெஞ்சி லெண்கோணமோட்
ஓட்டியேலம்புரோ மென்றுநாட்டி
ஒளிவானவுருவப்பா மூப்பத்தாறு
தீட்டியேசெபித்தவுடன் தம்பமாகும்
திரமாகச்சகலமுந் தம்பிக்கும்பார்
காட்டியேசுவாமிதனை வெள்ளையாகக்
கருத்தில்வைத்துவிபூதியிலே வட்டங்கீறி
ஆட்டியேயம்ரோ மாயிரத்தெட்டோதி
யுன்பாகக்கொடுத்தவுட னழைக்கும்பாரே. 167

பாரடாசுவாமியைச் செந்நிறமதாகப்
பண்பாகதியானித்து மூக்கோணங்கீறிச்
சேரடாகிலியும்ரோ மென்றுசொல்லிச்
செயலாகவாயிரத்தெட் டுருசெபித்து
வீரடாவிபூதிதனை யணிந்துக்கொண்டு
விதமாகச்சகலமும் வசியமாகும்
தீரடாபின்னொருவர் தனக்கேயீந்தால்
திறமாகவசியமாய் வணங்குவாரே. 168

வணங்கியேசுவாமியைப் பளிங்குநிறமாக
வளமாகத்தியானித்துப் பிறைபோற்கீறி
அணங்கியேயம்ரோ மெனச்செபித்து
அடைவாகவாயித்தெட் டுருத்தானேதி
நணங்கியேவிபூதியைப் பூசிக்கொண்டால்
நாயகனேசகலமு மோகமோகம்
இணங்கியேசுவாமியை மேகநிறமாக
இன்பமுறத்தியானித்து நாற்கோணங்கீறே. 169

கீறியேஓம்ரம் யம்ரோமென்று
கிருபைபாய்தென்னோலை தன்னிலப்பா
சீறியேயிருவர்பேர் தன்னைச்சூடிச்
சிறப்பாகவாயிரத்தெட் டுருசெபித்து
வீறியேயெதிரியில்முன் னிறப்பில்வைக்க
விதமாகவிருவருமே பிரிந்துபோவார்
தேறியேசுவாமியைப் புகைவர்ணமாகத்
தெளிவாகத்தியானித் தைங்கோணங்கீறே. 170

கீறியேயம்ரோ மென்றுநாட்டிக்
கிருபையுடனாயிரத்தெட் டுருசெபித்து
மாறியேவிபூதியை நீ போட்டபோது
வரிசையுடன்சகலமு மோடிப்போகும்
தேறியேசுவாமியைப் பிரளயகாலருத்திரனாய்த்
தியானித்துமுக்கோணத் திரமாய்க்கீறி
ஏறியோம்ரோ மென்றுநாட்டி
எளிதில்சத்துருவின் செத்தெழுத்தைநாட்டே.

நாட்டியேயாயிரத்தெட் டுருத்தானேதி
நாயகனேயழல்காட்ட நீறிப்போகும்
வாட்டியேசகலமு மாரணமாய்ப்போகும்
வளமான்சுவாமியைக் கறுப்பதாகக்
கூட்டியேதியானித்து முக்கோணங்கீறி
குணமாதடம்மென்று அதிலேநாட்டி
சூட்டியேயாயிரத்தெட் டுருத்தானேதிச்
சுறுக்கப்பா நீறிடவே பேதந்தானே. 172

சிவகிரி மகிமை

தானனசிவகிரியில் தண்டாயுதபாணி
தாதாவைப்பூசித்தோன் பிரமனிந்திரன்

தேனனபோகருட னிவர்கள்மூவர்
தெளிவாகமுன்யுகத்தில் மூவரப்பா
கோனனகலியுக மிருநூற்றைந்தில்
கொற்றவனேபுலிப்பாணி பூசித்தேன்பார்
மானன அஷ்டசத்தி கோடாசத்தி
மைந்தனேசித்தருட நடனந்தானே. 173

தானனராசரொடு குருக்கள்பெண்கள்
தயவானவேதியர்கள் சிறுவரேழை
வானனவிவர்களுக் கிடுக்கமான
வஞ்சகத்தொழில்முறைகள் செய்தால்தோஷம்
கோனகச்செய்தவர்க ணரகில்வீழ்வார்
குற்றம்வருநற்பதவி கிட்டாதப்பா
தேனனபோகருட கடாட்சத்தாலே
தெளிவாகப்புலிப்பாணி பாடினேனே. 174

பாடியேசாத்திரத்தைப் பழித்தபேர்கள்
பண்பிலாக்கூன்குருடு வூமையாகி
வாடியேசப்பாணி நொண்டியாகி
வளமிலாச்செவிடாகி ரூபங்கெட்டுச்
சாடியேயவர்களெலாம் நாசமாகிச்
சாவார்கள்பெண்டுபிள்ளை யெல்லாஞ்சேர்ந்து
கூடியேவியாதியிலே யழுந்திமாய்ந்து
கொடிதானநரகத்தி லழுந்துவாரே. 175

வாரானஐயும்நமோ பகவதேஓம்
மகாரூபிமகாமாயி மகத்வசத்தி
தேராகச்சர்வகாரணி சுவாகாவென்று
தெளிவாகலட்சமுரு செபித்துத்தீரு
சாரடாதர்ப்பணத்தோ டோமமன்னம்
தயவானபூசையது திறமாய்ச்செய்நீ
கூரடாமகாமாயை சித்தியாச்சு
குணமாகவதின்பெருமை கூறக்கேளே. 176

கேளடாசத்தியைத்தான் பூசைசெய்யக்
கேலிசெய்துசோதனைகள் பார்க்கவந்தால்
நாளடாமந்திரத்தைத் தியானஞ்செய்து
நலமானவஸ்துசுத்தி பால்பூவென்று

வாளடாதியானித்து நினைத்தபோது
வளமானபால்பூவா யிருக்கும்பாரு
ஆளடாபோகருட கடாட்சத்தாலே
அப்பனேபுலிப்பாணி யருளினேனே. 177

கார்த்திகை வீரியார்ச்சுன மந்திரம்

அருளாலேஓம் ஆம் ஸ்ரீயும்கிலியும்
அரியகார்த்திகை வீரியார்ச்சுனசுவாகாவென்று
பொருளாகலட்சமுரு செபித்துத்திரு
பொங்கமாய்த்தர்ப்பணமு மோமமன்னம்
வரமாகப்பூசையது பத்துஞ்செய்நீ
மைந்தனேசித்திச்சுக் கிரிகையாகும்
சுருளாகநினைத்தபடி யெல்லாஞ்செய்யும்
சுகமானபோகருட கடாட்சம்பாரே. 178

நரசிங்க மந்திரம்

பாரடாநரசிங்கஞ் சொல்லக்கேளு
பாங்காகஓம்சிங்க முகவாஓம்ஓம்
கூரடாபிடித்துகடித் தொடித்துசிந்திக்
குணமாகக்கண்டுபிடித் தருளாரைப்போல்
தீரடாபுசாசுபேய் பொடிபட்டோடத்
திறமாகநரசிங்க ராஜாவாணை
சீரடாஸ்ரீம்கிலீம் சுவாகாவென்று
சிறப்பாகலட்சமுரு செபித்துத்தீரே. 179

தீரப்பாதர்ப்பணமு மோமமன்னம்
திறமாகப்பூசையது தெளிவாகத்தான்
கூரப்பாயானைமுதல் மிருகஜாதி
கொற்றவனேகாடுசெந்நெ லெழுதிக்கட்டு
பாரப்பாமிருகத்தாற் கொடுமையில்லை
பலன்கிட்டுநினைத்தபடி யெல்லாஞ்செய்யும்
நேரப்பாபோகருட கடாட்சத்தாலே
நிச்சயமாய்ப்புலிப்பாணி சொன்னேன்காணே.

காணவேஓம்சர்வ சத்துருநாசா
கனிவாகஓம்படு சுவாகாவென்று
மாணவேலெட்சமுரு செபித்துத்திரு
வளமானதர்ப்பணமு மோமமன்னம்

கோணுமற்பூசையது பலத்துச்செய்நீ.
குணமாகச்சாமமது சித்தியாகும்
நாணுது நினைத்தபடி யெல்லாஞ்செய்யும்
நாயகனேபசாசுமுதற் பூதம்போமே. 181

கெண்டபேரண்ட மந்திரம்

போமப்பாஇன்னமொன்று சொல்லக்கேளு
பொலிவானகெண்டபேரண்டந்தன்னைத்
தாமப்பா ஆம்ஓம் அகோரப்பிரபல
தயவானகண்டபேரண்டசிங்கா
வாமப்பாவியாக்கிரசு வாகாசாகாமிருகா
வளமாக்காற்றுடுபல்லா அஷ்டவஜ்ரா
ஆமப்பாசூலமுத லாகவேதான்
அடைவாகச்சங்கு சக்ராதியெண்ணே. 182

எண்ணவேதா துப்பிரானு மாவிதாத்மா
இதமானகெசபட்சே பெந்தனரசிம்மா
அண்ணவேகற்பாந்த அக்னிலீலா
அடைவானஊதாப்பு யந்திரத்தில்
பண்ணவேகிலவஜ்ர சமான துண்டா
பண்பானதாஷ்டீக வுக்ரமூர்த்தி
உண்ணவேபட்ச மாருதமாச்சந்த
உத்தமனேதாரணியில் நம்பியென்னே. 183

என்னவேயுத்தண்ட வஸ்திரசர்ப்பா
என்னப்பாகெண்டபேரண்டஞ்சித்தி
மன்னவனேமூலமப்பா சொல்லக்கேளு
வளமானஓம்இறீம் ஸ்ரீயுமென்று
உன்னவேகிலீம்ஐயும் படுசுவாகா
ஊத்தமனேகெண்டபேரண்டநரசிங்கா
பன்னவேமகாசாவா னந்தகாயா
பதிவானசர்வசத்துரு நாசமாமே. 184

ஆமப்பாசிந்திசிந்தி யந்தியந்தி
அடைவாகலட்சமுருத் தானேயோது
தாமப்பாதர்ப்பண மாயிரந்தான்பத்து
தயவானஓமமப்பா ஆயிரந்தான்
வாமப்பாபிராமணபோ சனந்தானூறு
வளமானபூசையது நாள்பத்தப்பா

நாமப்பாகேண்டபே ரண்டஞ்சித்தி
நாயகனேசகலசித்து மாடும்பாரே. 185

பாரடாபிரமனொடு விஷ்ணுருத்ரன்
பண்பானகுலிசனொடு தேவர்யாரும்
சீரடாசித்தர்முத்தர் முனிகள்பூதம்
சிறப்பில்லாராட்சதையு மேவல்வைப்பும்
தீரடாசத்துருக்கள் மிருகஜாதி
தீதானவிஷமுதலா யெதிர்நில்லாது
வீரடா நினைத்தபடி யெல்லாஞ்சித்தி
விதமானபோகருட கடாட்சந்தானே. 186

பிரத்தியங்கிராதேவி மந்திரம்

தானேதானின்னமொன்று சொல்லக்கேளு
தயவாகப்பிரத்தியங்கிரா தேவிமந்திரம்
வானேதான்சகல சத்துருசம்மாரி
வளமானசகல சம்பத்துமீவாள்
தேனேதான்கிருபைவா ரிதியதாளுள்
தெளிவானகார்மேக வடிவமுள்ளாள்
கோனேதான்சிங்கமுகஞ் சிங்கப்பல்லும்
கொடியமுக்கணுமக்னி ஜ்வாலையெண்ணே. 187

எண்ணவேயஷ்ட திக்கு நிறைந்ததேகி
இலகுமாயுதத்தோ டாயிரங்கையுள்ளாள்
பண்ணவேகிண்கிணி மாலைகொண்டாள்
பத்தர்கள்தன்சத்துருவை நாசஞ்செய்வாள்
அண்ணவேபுதிரமது பானஞ்செய்வாள்
அடைவானசகல சாஸ்திரமும்வல்லாள்
நண்ணவேதியானித்துச் சரணம்பண்ணு
நாயகனேமூலமினி சொல்லக்கேளே. 188

கேளப்பாசுவாலாஜிம்மே பிரத்தியங்கிரே
கெணிதமுடன்உம்படு ஓம்ஆமென்று
நாளப்பாஇறீம்ஸ்ரீயும் கிலீயுமென்று
நலமானசிம்மமுகி யுக்ரகாளி
சூளப்பாவட்டமுக் கோணமிட்டுச்
சுகமாகவதின்மேலே யெண்கோணஞ்சதுரம்
ஆளப்பாவட்டமதி லிச்சமென்றிட்டு
அரியமுக்கோணமேல் மூனையிற்கேளே. 189

கேளடாறீங்கார மதிலேயிட்டுக்
கெணிதமாயிடக்கோணம் உம்மைநாட்டி
ஆளடாவலக்கோணம் படுவேயென்று
அடைவாகஎண்கோணம் றீயைக்கேளு
நாளடாநாற்கோணம் வலமேல்மூலே
நலமாகஆமென்று பதித்துப்போடு
சூளடா இடக்கோண மேலேயப்பா
சுகமாகக்கிரோமென்று சூட்டிப்போடே. 190

போடே நீயிடக்கோணங் கீழேயப்பா
பொங்கமுடன்புரோமென்று பதித்துவைப்பாய்
ஆடே நீவலக்கோணங் கீழேதானும்
அப்பனேஶ்ரீமென்று அடைவாய்ப்போடு
சூடே நீயட்சரங்கள் கிரந்தந்தன்னில்
சூட்டிநல்வலுமையடா தகடோதங்கம்
நாடே நீலட்சமுரு செபித்துத்தீரு
நாயகனேதர்ப்பணமு மோமஞ்செய்யே. 191

செய்யப்பாபிராமணருக் கன்னம்போடு
செயலாகநினைத்தபடி யெல்லாஞ்செய்யும்
கையப்பாபூசையது சத்திபூசை
கனிவாகச்செய்திடுவாய் வெள்ளிதோறும்
ஐயப்பா இதற்கெதிரி செகத்திலில்லை
அப்பனேவானுலகந் தன்னிலில்லை
உய்யப்பாபோகருட கடாட்சத்தாலே
யுத்தமனேபுலிப்பாணி பாடினேனே. 192

பாடினேன்பூச்சக்கிர வாளத்துள்ளே
பண்பானமகமேரு பர்வதங்களெட்டும்
நாடினேனவகண்டஞ் சத்ததீவு
நலமானசத்தசாகரங்க ளேழும்
கூடியேயஷ்டதிக்கு ளைம்பத்தாறு
குணமானதேசமெங்குஞ் சென்றுலுந்தான்
ஆடியேபிரத்தியங்கிரா கிருபையாலே
அப்பனேசெயங்கொண்டு மீளலாமே. 193

ஆமப்பாவிஷ்ணு நரசிங்கமாகி
அடைவாகவிரணியனைக் கொன்றதோஷம்

வாமப்பாபிரமைகொண்ட மயக்கந்தீர
வளமானஈஸ்வரனுஞ் சரபரூபம்
தாமப்பாவடிவுகொண்டு நரசிங்கத்தைத்
தான்கிழித்தேயுதிரமதைக் கொண்டதாலே
போமப்பாமருள்கொண்டு மயக்கமிஞ்சிப்
பொலிவானஈஸ்வரனு மிருந்தார்பாரே. 194

பாரப்பாஈஸ்வரனுர் மயக்கநீங்கப்
பரிவானவிஷ்ணுகெண்ட பேரண்டமாகிச்
சேரப்பாசரபத்தைப் பிளந்துபானஞ்
செய்தத்தாலீஸ்வரற்குப் பிரமைபோச்சு
தீரப்பாகெண்டபே ரண்டமப்பா
திறமழித்துமருள்கொண்டு மயக்கமாகிக்
கூரப்பாதேவர்களை யடித்ததாலே
குணமானஈஸ்வரனு மோடலாச்சே. 195

ஆச்சடாஇதனைப் பார்வதியார்பார்த்து
அடைவானபிரத்தியங் கிராரூபமாகி
வாச்சடாகெண்டபே ரண்டபட்சி
மதநீங்கத்தான்பிடித்துச் சிரசைக்கொய்யப்
போச்சப்பாபிரமையது தீர்ந்துபோச்சு
பொலிவானவிஷ்ணுவுந்தன் னுருவமானுர்
வீச்சப்பாபோகருட கடாட்சத்தாலே
விதமானபுலிப்பாணி பாடினேனே. 196

அயச்செம்பு

பாடியேயயச்செம்பு சொல்லக்கேளு
பண்பாங்கற்றுமரையின் கிழங்கையாட்டிக்
கூடியேயிரும்புகளின் மேலேபூசிக்
கூசாமற்புடம்போடச் செம்பதாகும்
ஆடியேயயச்செய்பு ஏழதாகும்
அப்பனேவெள்ளியிடை யொன்றுகூட்டி
நாடியேயுருக்கிடவே யேழுமாற்று
நாயகனேதப்பாது செய்துகேளே. 197

கேளயச்செம்பொன்று தங்கமொன்று
கெணிதமுடன்தானுருக்கித் தகடாய்த்தட்டிச்
சூளாகப்பொடியாக நறுக்கியப்பா
சுத்திசெய்தரசமிரண்டு கூடவிட்டு

நாளானகெந்தியிடை நாலுங்கூட்டி
நாயகனேதாரமிடை யரையுஞ்சேர்த்து
வாளானபொற்றலையின் சாற்ருலாட்டி
வளமாகவுலரவிட்டுக் குப்பிக்கேற்றே. 198

ஏற்றப்பாசட்டிக்குள் மணல்விரல்தானுலு
இதமாகநீகொட்டிக் குப்பிக்கேதான்
மாற்றமாமண்சீலை யேழுசெய்து
வாய்மூடமாக்கல்லை யுரைத்துமூடு
சாத்தவேகுப்பிவைத்து மணலைக்கொட்டிச்
சார்வாகக்குப்பிவாய்க் கழுத்துமட்டும்
ஊற்றமாய்நாற்சாம மெரித்தேயாற்றி
யுத்தமனேயெடுத்துச் செந்தூரமாமே. 199

ஆமப்பாநவலோகம் பத்துக்கொன்று
அப்பனேதான்கொடுக்க மாற்றேபத்து
தாமப்பாதேவிக்கும் திருவாணிக்கும்
தயவாகப்பூசைசெய்து நிலையில்நின்று
வாமப்பாபெரியோரை வணங்கிவாழ்த்தி
வாழ்குவாயுலகமதிற் சீமானுக
நாமப்பாபோகருட கடாட்சத்தாலே
நலமானபுலிப்பாணி பாடினேனே. 200

இரசமணி

பாடியேரசம்பத்து சுத்திசெய்து
பண்பானநாகத்தின் வாயில்வார்த்து
ஆடியேமுப்பூவுங் கழஞ்சிபோட்டு
அடைவாகக்கட்டி நீ மேலேதூக்கு
கூடியேயதின்கீழே பானைவை நீ
கொற்றவனேபாம்பழுகி வீழும்பாரு
நாடியேரசங்கட்டி மணியாய்ப்போகும்
நாயகனேவேதைமுதல் வசியமாமே. 201

ஆமே நீகெந்தியிட்டுச் செந்திரித்தால்
அப்பனே நவகோணந் தன்னில்வேதை
வாமே நீஇருநூறு மிந்திரஜாலம்
வளமானகண்ணுடி போலேதோற்றும்

தாமேநீநவரத்நங் கோத்தாற்போல
தரணிதனில்தான்விளங்கும் புலிப்பாணிதானும்
நாமேநீபோகருட கடாட்சம்பெற்றேன்
நலமானஜாலமிரு நூறுமுற்றே. 202

புலிப்பாணி ஜாலத்திரட்டு முற்றிற்று.

புலிப்பாணிமுனிவர் அருளிச்செய்த

சிதம்பரபூஜை-25

அத்திமுகன்றனையளித்த வரனேகாப்பு
அகிலமெங்குநிறைந்துநின்ற வருளேகாப்பு
முத்திதருவேதாந்த முதலேகாப்பு
முப்புரத்தைத்தகித்தெரித்த பரனேகாப்பு
சத்தியொருபாகம்வைத்த வரசேகாப்பு
சங்கரனேயம்பரனே ஞானமூர்த்தி
வெற்றியாஞ்சிதம்பரத்தின் பூசைமார்க்கம்
விளம்புகிறேன்கணேசனுட பாதங்காப்பே.

காப்பான ஆறுவகை குறுக்கேகீறிக்
களங்கமிலா ஆறுவகை நேரேகீறி
ஆப்பானஇருபத்தஞ் சறையுமாச்சு
அடைவானமூனேதோறுஞ் சூலம்போடு
தாப்பானமுதலறையி னுலுகோணந்
தயவானநகாரமொடு அகாரங்கூட
வாப்பானஐயோடுவகாரந்தானும்
வளமானலக்கமது பத்துமாமே. 1

ஆமப்பா அடுக்கறையிற் பிறைதான்கோணம்
அடைவானமகாரமொடு இகாரங்கூடத்
தாமப்பாகிலியோடு வகாரந்தானும்
தயவானலக்கமது பதினெட்டாகும்
வாமப்பா அடுத்தறையில் முக்கோணந்தான்
வளமானசிகாரமொடு உகாரந்தானும்
தாமப்பாசவ்வுடனே நகாரந்தொட்டு
நலமானலக்கமது பதினுலாமே. 2

ஆமடா இதினருகே யறுகோணந்தான்
அடைவானவகாரமொடு எகாரந்தானும்
தாமடா ஸ்ரீமுடனே யகாரங்கூடத்
தயவாகலக்கமது ஆரும்பாரு
வாமடா இதினருகே வட்டம்போடு
வளமானயகாரமொடு ஓங்காரந்தான்
நாமடா ஹரிஓ மென்று நாட்டி
நலமான அகாரமொடு லக்கமூன்றே. 3

மூன்றான நடுவணையை யெடுத்துமாறி
மூன்னுமாய்சக்கரமோ ரிருபத்தஞ்சில்
நான்றானசூலத்தி னிடைகள்தோறும்
நாயகனே நீயும் ஸ்ரீமென் றுமாட்டுப்
பான்றானசூலமூனே ஸ்ரீமைப்போடு
பண்பான திரிவட்டம் பாங்காய்சூட்டு
ஊன்றானஉள்வட்ட மிதழ்தான்மூன்று
உத்தமனேயிருவட்ட மிதழீரெட்டே. 4

எட்டான திரிவட்ட மெண்ணுன்கப்பா
இதமாகநடுவட்ட மூதலாமாதி
கட்டான அகாரமுதல் சகாரமட்டும்
கனிவாகஐம்பத்து ஒன்றுமாச்சு
கிட்டானஉபரேகை வாசல்நாலு
கீழ்வாசல்கணபதிக்குக் கங்குநாட்டு
நட்டானமேல்வாசல் வடுகன்பீஜம்
நாயகனேவங்கென்று நாட்டிடாயே. 5

நாட்டியேதென்வாசல் பரிதிபீஜம்
நலமாக அம்மென்று நாட்டுநாட்டு
கூட்டியேவடவாசல் மதியின்பீஜம்
குணமாகச்சம்மென்று குறித்துப்போடு
ஆட்டியேயுபரேகை வீதிக்குள்ளே
அடைவாகஇந்திர னிலமாம்பாரு
வாட்டியேயக்கினியில் ரம்மென்றப்பா
வளமாகஎமன்றனிற் சம்மென்றுபோடே. 6

போடவே நிருதியிலே யம்மேயாகும்
பொலிவானவருணனிலே வம்மேபாரு

சாடவேவாய்வுதனில் யம்மேபோடு
சார்வானகுபேரனிலே ளம்மேநாட்டு
வீடவேஈசானஞ் சம்மேசேரு
விதமான அஷ்டதிக்குப் பாலராச்சு
ஆடவேபோகருட கடாட்சத்தாலே
அப்பனேபுலிப்பாணி பாடினேனே. 7

பாடினேன்தமிழெழுத்தில் அகாரந்தொட்டுப்
பண்பானபிரணவத்தின் வரைக்கும்போடு
ஆடியேதசாங்கமென்ற எழுத்தோபத்து
அப்பனேசங்கரத்திற் சுற்றிப்போடு
கூடியேதமிழெழுத்தில் அகாரந்தொட்டுக்
கொற்றவனேஒவ்வரையி லுயிராம்பாரு
நாடியேசக்கரத்திற் சுற்றிப்போட
நலமாகஈராறு மெழுத்துமாச்சே. 8

ஆச்சப்பா அசபையுட எழுத்துச்சம் அம்
அடைவாகமேல்வாசற் கீழேபோடு
பாச்சப்பாவலமங்கி சத்திபீஜம்
பண்பாகஅம்மென்று பதித்துப்போடு
வாச்சப்பாஇடம்பாக சத்திபீஜம்
வளமாகத்திரோமென்று குறித்துப்போடு
வீச்சப்பாவலப்பாக மிடப்பாகந்தான்
விதமானஐயுங்கிலியுஞ் சவ்வுமாமே. 9

ஆமடா அம்இம்உம்எம் ஒம்மென்றே
அப்பனேபஞ்சபட்சி இருபுறமும்போடு
வாமடா அம்சம் ஸ்ரீயுமென்று
வளமானமங்குடனே நசியென்றேது
தாமடாகிறீம்டனே றும்மூங்கூட்டித்
தயவான்விம்முடனே யங்கியென்று
நாமடாநவக்கிரக பீஜமாச்சு
நலமானசக்கரத்திற் சுற்றிப்போடே. 10

போடப்பாசுருபியென்ற வெழுத்துமப்பா
புகழ்தருவும்கிலியல்லோ மதனபீஜம்
நாடப்பாகீழ்வாசல் மேலேயப்பா
நலமானஈரிரண்டு பதித்துப்போடு

கூடப்பாசிதம்பரத்தின் பூசைசெய்யக்
கூத்தாடுங்கணங்கள்முத லெல்லாமாடும்
ஆடப்பாபோகருட கடாட்சத்தாலே
அடைவாகப்புலிப்பாணி பாடினேனே. 11

பாடியேஅகாரத்தி லுகாரமிட்டுப்
பண்பானஓங்காரங் கொண்டுகட்டி
நாடியேயதின்கீழே மகாரமிட்டு
நலமாகஅதின்மேலே றீங்காரந்தான்
கூடியேஅரியெழுத்து மேலேவாங்கிக்
குணமாகச்சூலமிட்டு ஸ்ரீயைநாட்டு
ஆடியேசிங்குவங் கென்றுநாட்டு
அடைவாயேகாட்சாரத்தைப் பதித்துப்போடே.

போடுசிந்தாமணிக்குச் சிகாரமிட்டுப்
பொங்கமுடன்மகாரமொடு யகாரம்போட்டு
ஆடவே அகாரமுடன் விந்தைப்போட்டு
அடைவாஞ்சக்கரத்தில் திரிவாசிசூட்டக்
கூடச்சிந்தாமணிக்குப் பீஜமாச்சு
குணமானசக்காத்திற் பதித்துப்போடு
நாடியேபோகருட கடாட்சத்தாலே
நலமானபுலிப்பாணி பாடினேனே. 13

பாடியேவலப்புருவம் அகாரம்போடு
பண்பானபுருவஇடம் ஆகாரமாகும்
நாடியேவலக்கண் ணும் இராகம்போடு
நலமானஇடக்கண் ணும் ஈகாரந்தான்
சாடியேவலக்காது உகாரம்போடு
சமர்த்தானஇடக்காது ஊகாரந்தான்
வாடியேவலதுகன்னம் இரேம்நீபோடு
வடிவானஇடக்கன்னம் ஈரேம்நாட்டே. 14

நாட்டடாவலமூக்கு இல்லாவென்று
நாயகனேஇடமூக்கு ஈலாவாகும்
ஆட்டடாமேலுதடு ஏயைப்போடு
அடைவானகீழுதடு ஐயைப்போடு
கூட்டடாமேற்றந்தம் ஒவ்வைப்போடு
குணமானகீழ்த்தந்தம் ஔவைநாட்டு

மாட்டடாநாவதிலே அம்மென்றப்பா
மணியானகண்டத்தில் ஆகாரமெண்ணே. 15

எண்ணவேசக்கரத்திற் பதித்தபின்பு
இதமாகச்சாபங்கள் நிவிர்த்திசெய்து
நண்ணவேபிராணப் பிரதிஷ்டைசெய்து
நவிலோமம்பூசை சோடசமுஞ்செய்து
அண்ணவேசுக்ந்த பரிமளங்கள்புட்பம்
அடைவாகவர்ச்சித்துக் கனிகளோடு
தண்ணவேபலகாரம் பரமான்னந்தான்
தாம்பூலமிள நீரும் பாலுந்தேனே. 16

தேஞ்னபாணக்க மன்னத்தோடு
தெளிவானவறுசுவையு மதுவுஞ்சுத்தி
தானுனசர்வமுஞ் சுத்திவைத்து
தயவாகப்பூசித்துத் தியானமோது
வானுன்கர்ப்பூர தீபமேற்று
வணங்கவே அஷ்டசித்துஞ் சித்தியாகும்
மானுன அஷ்டசத்தி நிர்த்தஞ்செய்வாள்
வானவரும்லோகமெலாம் வசியமாமே. 17

ஆமடாசிவகிரியில் தண்டாயுதபாணி
ஐயனைத்தான்பூசித்தோர் சொல்லக்கேளு
தாமடாகிரேதா யுகத்திலப்பா
தயவானபிரமாவும் பூசைசெய்தார்
வாமடாதிரேதா யுகத்திலப்பா
வண்மையாக்கவுசிகர்தா மகிழ்ந்துசெய்தார்
காமடாதுவாபரத்திற் போகநாதர்
கலியுகத்திற் புலிப்பாணிபூசித்தேனே. 18

பூசித்தஞானமது தொண்ணூற்ருறு
பொங்கமுடன்பலதிரட்டு நூறுமாகும்
ஆசித்தேன்கொக்கோகம் நூறுபாதி
அப்பனேஜாலமது ரெண்டுநூறு
வாசித்தேன்சோதிடந்தான் மூந்நூருகும்
வளமானவயித்தியமோ ஐந்நூருகும்
வீசித்தேன்சண்முகத்தின் பூசைமார்க்கம்
விதமாகமுப்பதிலே விளம்பினேனே. 19

விளம்பவேசிமிழ்வித்தை யிருபத்தஞ்சு
விதமானதேவியுட பூசைமார்க்கம்
தளம்பவேயிருபதோ டொன்றினுள்ளே
தயவாகச்சொல்லிவைத்தே னன்றுய்ப்பாரு
கிளம்பவேசிதம்பரத்தா னிருபத்தஞ்சு
கெட்டியாய்ப்பாடினே னுகந்துபாரு
வளம்பவேபோகருட கடாட்சத்தாலே
வ்ளமானபுலிப்பாணி பாடினேனே. 20

பாடினேன்யநமசிவ வசியமாகும்
பண்பானசிவயநமோ கனமேசித்தி
ஆடியேவசிமநய அழைப்புமாகும்
அப்பனேநமசிவய தம்பனமேசெய்யும்
கூடியேவயநமசி யுச்சாடந்தான்
குணமானயவசிமந பேதனந்தான்
தேடியேநயவசிம வித்துவேஷ்ணம்
சிவயநமமாரணமாய்ச் செப்பலாமே. 21

ஆமடாவசியமுடன் தம்பனம்பேதனம்
அடைவானநடுவணையைப் பிடித்துமாறி
தாமடாமோகனமு மழைப்புமப்பா
தயவாகரெண்டெழுத்தை யெடுத்துமாறி
வாமடாநாலெழுத்தைமாறில் வித்துவேஷ்ணம்
மன்னுமுச்சாடனங்கால் தலையாப்போடு
தீமடாமாரணங் கடையெழுத்தைமாறித்
தீர்ந்தசக்கரமெலா மாரணமாமே. 22

ஆமடாகாரியம் வசியமாகும்
அப்பனேவங்கமோ கனமேசித்தி
தாமடாபொன்னதுவு மழைப்புமாகும்
தயவானசெம்பது தம்பனமேசித்தி
வாமடாவெள்ளீய முச்சாடிக்கும்
வளமானகுருத்தோலே வித்துவேஷ்ணம்
போமடாஇரும்பு பேதனமேயாகும்
பொங்கமுறுவெள்ளி மாரணந்தானுமே. 23

தானென்றவசியமுடன் தம்பனமோகனம்
தயவான அழைப்புமுத லிவைநாலுக்கும்

கோனென்ற ஆள்காட்டி விரலே நீளம்
குணமான அகலமப்பா பெருவிரல் நீளம்
தேனென்றபேதனமாரணம் வித்துவேஷ்ணம்
தெளிவானஉச்சாடன மிவைநாலுக்கும்
பானென்றப்பவித்திரவிரல் நீளமப்பா
பகர்ந்தசிறுவிரனிகள மகலமாமே. 24

ஆமடா இறையாறு வீசமாகும்
அப்பனேபனிரண்டு அரைக்காலாகும்
தாமடாமூவெட்டுக் காலேயாகும்
தயவாகஇதிலிரட்டி யரையேயாகும்
வாமடாஇதிலிரட்டி முழுதென்பார்கள்
வளமானகனமப்பா நெற்கனந்தான்
நாமடாவீசமது ஒருநெல்லாகும்
நலமானசிதம்பரத்தின் பூசைமுற்றே. 25

சிதம்பரபூஜை-25 முற்றிற்று.

உ

கடவுள் துணை

விநோதஜாலத்திரட்டு

கர்ப்போற்பத்தி சொல்லும் வித்தை

சித்திரைப்பத்தாந் தேதியில்தூரம்
சென்றிடிலது முதற்பத்துவரையில்
பத்தாகுமதிலேழு சேரில்பின்னேழ்
பகர்ந்தறிதைமாதம் பதினேழ்தேதியில்.

இ-ள். சித்திரைமாதம் 10-ந் தேதியில் ரஜஸ்வலையாகில் அது முதல் 10-மாதம் எண்ணிப்பார்க்க தைமாதம் 10-ந் தேதி அதினோடு 7-நாள் சேர்க்க தைமாதம் 17-ந் தேதி குளிகுளிப்பார்கள். மாதங்கள் 15-ந் தேதிக்குள் தூரம்வந்தால் 9-மாதக் கணக்கிலும் 15-தேதிக்கு மேற்பட்டால் 11-மாதக் கணக்கிலும் மாதர்கள் எப்பொழுதும் பிரசவிப்பார்கள். 1

வீட்டைவிட்டு வெளிவரும் வித்தை

கையாற்பெருவிரற் சேடாய்கட்டிக்
கவிழாமற்றூங்கக் கடத்தைக்கீழ்போட்டாய்
செய்யீராருண்டிற்கு மீடாய்சிந்தித்
திடவொளிவந்திடற் சென்றுள்ளேயோட்டாய்.

இ-ள். இரண்டு காற்பெருவிரல்களையும் இரண்டு கைப்பெருவிரல்களையும் கட்டி மல்லாந்து படுத்தால் மனதைப் பூரணத்தில் நிறுத்தி நாட்டத்திலிருக்க மனஞ்சொக்கி மவுனத்திலூன்றிச் சுழுத்தியி லடங்கிவிடும். பின்பு தெளிந்தவுடன் இவ்விரண்டு கட்டுகளையும் அவிழ்த்துவிட்டு மறுவேலைபார்க்கவும். இப்படி சதா நடத்துவதில் 12-வருஷத்திற்குள் சித்தியாகி இவனை எந்த வீட்டில் கருங்கற் கட்டடத்திற்குள் விட்டு பந்தோபஸ்து செய்தாலும் இவன் வெளிவர சுவருகளிடங்கொடுக்கும். அவை யொருவர்க்குத்தெரியாது. இதைப் பரகிரகப்பிரவேசம் எனப்பகர்வர். இப்படிச் செய்வோரைச் சித்து புருஷரென்றே சொல்லுவார்கள். 2

ஓட்டமாயோடும் வித்தை

விழுதியிலைவாயில் மென்னுதின்று
விட்டடக்கிக்கொஞ்சந் தாடையிற்சண்ணு

பழுதரவோடவே யெண்ணுநாழிப்
பத்தானலுமிளைப் பில்லைப்பாரண்ணு.

இ-ள். விழுதியிலையை வாயிற்போட்டுக் கொஞ்சந் தின்று கொஞ்சம் வாயிற்றடையி லடக்கிவைத்துக்கொண்டு எந்தமட்டில் ஓடினலும் ஓடலாம். இளைப்புக் களைப்பில்லை; நிற்கவேண்டுமானல் ஒரு மரத்தைப்பிடித்து நிற்கவேண்டியது; காதத்திற்குமேலும் ஓடலாம். 3

பாலைத் தயிராக்கும் வித்தை

குருணிப்பாலில் வாழைக்கிழங்குபொடி
கொண்டுழக்குத்தூள் குழப்பமுழங்கு
வருணித்தேதயிராய் வழங்குநாளு
மண்டலத்தோர்க்கிதை வகுக்குமொழுங்கு.

இ-ள். குறுணிப்பாலில் வாழைக்கிழங்கு வுலர்த்தி வஸ்திரகாயஞ்செய்த தூளில் உழக்கு அதிற்போட்டுக் கலக்கத் தயிராகும். இன்னும் காணற்புல்லு போட்டாலும் தயிராகத் திரளும். 4

நெருப்பு வித்தை

மணத்தக்காளிச்சாறு கூடவுந்தா
மணிச்சாறுவாளைச்சாறும் மூன்றுஞ்சாட
தணிப்பாய்க்கால்கைபூசிப் போடதூக்கத்
தணியும்நெருப்பது தண்ணீர்போலாட.

இ-ள். மணத்தக்காளிச்சாறு தக்காளிச்சாறு வசளைச்சாறு இம்மூன்றும் ஒன்றுகக்கலந்து கைகளிற்பூசி நெருப்பை யெடுக்கவும் அல்லது கால்களிற் பூசி நெருப்பை மிதிக்கவும் கைகால்கள் சுடாது. கொப்பளிக்காது. எந்நேரம் விளையாடினலும் விளையாடலாம். 5

மீன்படு வித்தை

திருகுகள்ளியைத் தறித்துதுண்டு
செய்ததையேரிக் குளமடுவிரித்து
பெருகுமீனிருக்கக் குறித்துபோட்டு
பின்பற்றிவார மிதக்குமரிந்து.

இ-ள். திருகுகள்ளியை முழமுழத் துண்டுகளாய்த் தறித்து ஏரி குளம் மடுக்களில் நாலுபக்கத்திலும் அடர்த்தியாய்ப் போட்டு வைத்திருக்க சற்றுநேரத்திற்குள் அதிலிருக்கும் மீன்களெல்லாம் மிதந்துபோய்விடும். அதிலொன்றேனுந் தப்பிப் பிழைக்காது. 6

பேயாடும் வித்தை

ஈரத்தலேயோ டிருந்துவுச்சியினில்
மருளூமத்தை தூளேச்சனித்து
ஊரத்தேய்க்கையி லேவரித்துகுறி
யுரைத்துதலேசுற்றி யாடப்பிரித்து.

இ-ள். பேயாடுவாரையாவது அல்லது எவ்வித மனிதரையாவது தலேமுழுகி வரச்சொல்லி அவ் ஈரத்தலேயோடு உச்சியில் மருளூமத்தங் காய்த்தூளே ஆர்க்கப்பொடித்து அதிற்கொஞ்சம் போட்டு அரக்கித் தேய்த்துவிட நின்றுவிடும். பிறகு செய்வதைச் செய்யவும்.

புட்டியிற் புட்பச்செடி வித்தை

புட்டியிற்சுகர்லெட்டைப் போட்டுத்தண்ணீர்
புகட்டமுக்காற்பங்கு கார்க்கின்கீழ்மட்டு
ஓட்டித்துத்திநாகம் நாட்டுபிகிந்
தொளிர்மேடைமேல்வைத்துச் செடியாகப்பூட்டு.

இ-ள். முழுபுட்டிக்குள் முக்காற்பங்கு தண்ணீர்விட்டு அதிற்கொஞ்சம் சுகர்லெட்டுத் தூள்போட்டுக் குலுக்கி கார்க்கின்கீழ் திட்டமாய் துத்திநாகத்தைக் கம்பிக்குள் சொருகிட்டுப் பிகிந்து தொடுத்து மேஜைமேல் அசையாது வைக்க மேற்படி புட்டிக்குள் செடிகள்போல் முளேக்கும். அதை யசைத்தாலும் திறந்தாலுங் கெட்டுப்போம். 8

விஷந்தீர்க்கும் வித்தை

அரவந்தீண்டி னுச்சிக்கீறிக்கையா
லரக்கித்தேய்த்தக் காளிச்சாற்றினேவாறி
விரைவினுல்மீளுந் தலேக்கேறிவிட்ட
விடமிறங்கிக் குணப்படவதிகாரி.

இ-ள். பாம்பு கடித்தால் உடனே அவாள் உச்சியில் ஓட்டினுல் 3-கீற்றுக்கிறித் தக்காளிச்சாறுவிட்டுக் கையினுல் அரக்கித்தேய்க்க விஷங்கக்கி எழுந்திருப்பார்கள். உடனே ஜாகை காய்ச்சிக் கொடுக்கவும். இது யிருளர்க்கு உயிருக்குயிரான மூலிகை: இன்னும் செருப்படை கீழாய்நெல்லி குப்பைமேனி இதுகளிலும் விஷங்கக்கும். இன்னும் சேராங்கொட்டை மரத்தை நல்லெண்ணேயி லூரவைத்துக் கொடுக்கவு மீளும். 9

தீயில்குதிக்கும் ஜாலம்

ஏமனுடஅக்கினியை மதியாவித்தை
யியம்புகிறேனெல்லோரும் ஆச்சரிக்க
நாமனவேசங்கனிட புதாருதன்னில்
நலமாகபூர்த்திருக்கும் காளானன்றன்னை
சோமனவேகொண்டுவந்து புதுப்பாண்டத்தில்
சுருக்குடனேபோட்டுநீ கதிர்முன்வைக்க
ஆமப்பாதயிலமது வுருகும்பாரு
அதையெடுத்துப்பூசிதீயில் குதிக்கலாமே.

இ-ள். சங்கன்செடி புதரில் பூத்திருக்கும் காளானைக்கொண்டு வந்து புதுபாண்டத்தில் போட்டு வெய்யலில் வைத்தால் தைலம்போ லுருகிவிடும். அதையெடுத்து தேகமெங்கும் பூசிக்கொண்டு எவ்வளவு அனலிருந்தபோதிலும் தீயில் குதிக்கலாம். 10

எலுமிச்சம்பழம் குதிக்கும் ஜாலம்

என்னவேயின்னமொரு ஜாலங்கேளு
யெலுமிச்சம்பழத்திலே துளையுண்டாக்கி
பன்னவேசூதமது களஞ்சிதூக்கி
பக்குவமாயுள்ளிறக்கி மெழுக்கடைத்து
துன்னவேவெய்யலிலே வைத்துப்பாரும்
சூரியனார்காந்தியது காக்குமாகில்
என்னசொல்வேன்பழத்தினது கொண்டாட்டந்தா
னிப்பம்பலாந்தாசியென்றே யென்னலாமே.

இ-ள். ஒரு எலுமிச்சம்பழத்தை எழுத்தாணியில் குத்தி $1\frac{1}{4}$-விராகனிடை ரசம் விட்டு மெழுக்கினால் துவாரத்தை யடைத்து வெய் யலில் வைத்தால் சூரியனேறின மாத்திரத்தில் தரையில் நிற்காது. செண்டுபோலெகுரும்; அல்லது உருளும்; ஆச்சரியமாயிருக்கும். ஆகி லும் சீமைக்காடியில் கொஞ்சம் விட்டாலும் மிகவும் நன்று. 11

விநோத ஜாலத்திரட்டு முற்றிற்று.

உ

சிவமயம்

புலிப்பாணிமுனிவர் அருளிச்செய்த

பலதிரட்டின் அகராதி

பெயர்	பக்கம்	பெயர்	பக்கம்
அக்கினிஜாலம்	38	ஜலஸ்தம்பனம்	39
அஷ்டகர்மம்	25	சலாசத்துபற்பம்	24
அஞ்சனம்	8	சாரக்கட்டு	22
அயச்செம்பு	76	சாலக்காள்பூசை	32
இந்திரஜாலம்	44	சிவகிரிமகிமை	70
இரசமணி	77	சிலைமெழுகுபாவை	63
ஈடுமுறை	57	சிறுகண்ணுகச்செந்தூரம்	23
உடுக்குகட்ட	68	சீலைகுடைபிடிக்க	35
எக்காளஜாலம்	38	சீலைத்திரை	40
ஏட்சணிஜாலம்	41	சூடன்சுண்ணம்	26
எட்டிமுளைவித்தை	49	செப்பிடுவித்தை	49
எலுமிச்சம்பழவித்தை	35	சொக்குத்தூள்	13
ஒண்டிமூலிகை	54	சோறுவேகாதிருக்க	8
கண்கட்டுவித்தை	31	தாதுபுஷ்டி	60
கண்கெடுதல்	18	தாளகபற்பம்	24
கவசமந்திரம்	54	திலகமுறை	7
கள்ளனைப்பிடிக்க	12	தீவட்டிஜாலம்	41
கற்பம்	15	துரிசுசுன்னம்	20
கஜகர்ணஜாலம்	48	தெய்வஜாலம்	34
காப்பு	3	தேள்கடியிறங்க	63
காளிவசியம்	48	நரசிங்கமந்திரம்	72
கார்த்தவீரியார்ச்சுனமந்திரம்	72	நீலகண்டமந்திரம்	69
குறிசொல்லல்	57	நோக்குவித்தை	35
குறளிஜாலம்	48	பச்சைப்பாம்புவித்தை	32
குறிசொல்லல்	12	பச்சைத்தவளைவித்தை	40
கெண்டபேரண்டமந்திரம்	73	பட்டணஜாலம்	47
கெந்தகநீர்	27	பல்லுவிழுதல்	18
கைகால்முடக்கு	4	பாதாளவஞ்சனம்	56
கொள்ளிஜாலம்	53	பாயிரம்	29
கோகரணஜாலம்	48	பார்வைமை	55
சங்கிலிஜாலம்	47	பிரத்தியங்கிராதேவிமந்திரம்	74
சண்டைஜாலம்	51	பிறிவு	58
சமுத்திரஜாலம்	46	பிசாசஜாலம்	47

பெயர்	பக்கம்	பெயர்	பக்கம்
புருஷவசியம்	17	வாலேரசம்	28
பூதபைசாசவிநோதம்	61	வாத்தியஜாலம்	37
பேதனம்	9	வித்துவேஷணம்	10
பேயாட்டல்	68	விந்துஸ்தம்பனம்	14
மயேந்திரஜாலம்	46	வியாதிபோக்க	68
மலக்குட்டி	53	உண்டாக்குதல்	18
மேற்படிஜாலம்	53	விளைவுகெட	61
மாடன்மந்திரம்	51	விளைவுபெருக	61
மாம்பழஜாலம்	43	விநோதஜாலம்	62
மாரணம்	9	வீரச்சுன்னம்	21
முடமர்க்குதல்	26	வேடிக்கைவித்தை	4
முப்பூமுறை	5	சிதம்பரபூசை	78
மூலிகைஜாலம்	33	கர்ப்போற்பத்திசொல்லும்	85
மோடிவித்தை	65	வீட்டைவிட்டுவெளிவரும்	85
இரசக்கட்டு	6	ஓட்டமாயோடும்வித்தை	85
இரசபற்பம்	16	பாலேத்தயிராக்கும்வித்தை	86
உலோகவசியம்	25	நெருப்புவித்தை	86
வங்கவெட்டை	22	மீன்படுவித்தை	86
வசியம்	14	பேயாடும்வித்தை	87
வசியம்	59	புட்டியிற்புஷ்பச்செடி	87
மேற்படிமூலிகை	17	விஷந்தீர்க்கும்வித்தை	87
வஸ்துபாண்டமுடைய	61	தீயிற்குதிக்கும்ஜாலம்	88
வாணமடக்க	55	எலுமிச்சம்பழம்வித்தை	88

பலதிரட்டின் அகராதி

முற்றிற்று.

:: : அ. இரங்கசாமி முதலியார் ஸன்ஸ் : ::
பூமகள்விலாசம் பிரஸ், நெ-24, தாண்டவராயப்பிள்ளைவீதி, சென்னை.

ஹிந்து பால

வைத்திய போதினி

[இதன் விலை ரூ 1]

அள்விடுதற்கரிய சிறப்புவாய்ந்த இவ்வுலகத்தின்கண் சராசர வுயிர்களும் சரண்புகத்தக்க முத்தராகிய சித்தர்கள் பதினெண்பெயரும் திருவாய்மலர்ந்தருளிய வைத்திய சாஸ்திரங்கள் ஏராளமாயிருப்பினும் தற்கால நிலைமைக் கியன்றவாறு ஷை சாஸ்திரங்களை அனுசரித்த நிகண்டுகள் முதலான அகராதிகளைக் கண்ணுறுது கையாடும்பேர்க்குப் பயன்படாதென்பது திண்ணமாகக் காட்டுகிறதுபற்றி இந்நூல் இசைத்தலாயினேம். ஆயினும் முதனூல் வழிநூலென்னும் சித்தர்கணூலும் மற்றவர் நூலும் கொண்டே ஆராய்ச்சி செய்து அநுபவ திருஷ்டாந்தங்களைக் கொண்டு குழந்தைகளுக்கு இசைந்த சிகிச்சா பக்குவங்களை மாத்திரம் ஒருங்கே திரட்டி செய்யுட்களாய் உள்ளனவற்றை அகராதிகள் வேண்டாது யாவரும் எளிதில் அறியத்தக்க வசனரூபமாக ஆ. சி. பாலஞானபரதேசி அவர்களாலும் செழுமணவை. நல்லண்ணபரதேசி அவர்களாலும் கையாண்டுவந்த அனுபவமுறைகள் யாவும் ஷையார்களின் சிஷ்யர் ஞானசுந்தர சுவாமிகளின் உத்திரவின்படி மொழிபெயர்த்து அவ்வசனங்கடோறும் வினாவிடைகளாக வகுத்து ஏனைய புல்லறிவினருக்கும் எளிதில் விளங்கும்படி வெள்ளிய பாவனையாக வரையப்பட்டு சுத்தமாய் அச்சிட்டுத் தயாராயிருக்கின்றது.

எமது விலாசம்:—

அ. இரங்கசாமி முதலியார் ஸன்ஸ்

24, தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை.

ஸ்ரீமஹா பக்தவிஜயம்

[ஐதீகப் படங்களுடன்]

(முதற்பாகம்)

இப்பூவுலகின்கண் ஜனித்த ஆத்மகோடிகள் உஜ்ஜீவிக்கும்பொருட்டுத் திருவவதாரஞ்செய்து பகவத்பக்தி இத்தகைய சிறப்பினை யுடையதென்று யர்வருக்கும் தெரியக்காட்டி முத்திப்பேற்றினைப்பெற்ற ஜெயதேவர், கபீர்தாசர், துளசிதாசர், நாமதேவர், ஞானேசுவரர், குசேலர் என்பவர்களின் சரித்திரங்களை ஆங்காங்கு சமயோசித சுருதிப்பிரமாணங்களுடன் இப்புத்தகத்தில் எழுதப்பட்டு ஐதீகப் படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதன் விலை ரூபா 2-8-0

(இரண்டாம்பாகம்)

தமிழ்மக்கள் உணர்ந்துய்தற்பொருட்டு ஆழ்வார் திருநகரி சிங்கம்-ஸ்ரீனிவாஸ அய்யங்கார் அவர்களைக் கொண்டு முதல்பாகத்துக்கு முற்றுப்பெருத 5-தாசர்களின் சரித்திரங்களை விரிவாய் எழுதி பூர்த்திசெய்து அதனுடன் 15-தாசர்கள் சரித்திரங்களையும் விரிவாக விசிஷ்டாத்துவித சித்தாந்தத்தின்பாற்படுத்தி எழுதியிருக்கின்றன. இதன் விலை ரூபா 3-0-0

(3-4-5-6-பாகங்கள்)

பவுஷிய புராணத்தில் உரைத்தபடியே பக்தர் முக்தர்களின் 71-தாசர்கள் சரித்திரங்களை ஆழ்வார்திருநகரி சிங்கம் - ஸ்ரீனிவாஸ அய்யங்கார் அவர்களாலும் வேலூர்-கன்னையதாசர் அவர்களாலும் விரித்தெழுத வேண்டிய விடங்களில் விரிவாயும், சுருக்குமிடங்களில் சுருக்கியும் எழுதுவித்து சுத்தப்பிரதியாய் அச்சிட்டுள்ளோம். இதன் விலை ரூபா 2-0-0

ஷை 6-பாகங்கள் ஒரேகட்டடம் ரூபா 7-0-0

விலாசம்:

அ. இரங்கசாமி முதலியார் ஸன்ஸ்

24, தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை.

புஸ்தக விளம்பரம்

☞ இதேமாதிரி பெரிய எழுத்தில் சுத்தமாக அச்சிடப்பட்ட பூமகள் பதிப்பின் புஸ்தகங்கள்:—

ஸ்ரீமத் கம்பராமாயண வசனம் படங்களுடன்		5	0	0
மேற்படி திக்கு 2-வால்யம்	ஷை	7	0	0
மேற்படி கிளோஸ்	,,	8	0	0
ஸ்ரீமகா பாரதவசனம் 4-வால்யம்	,,	10	0	0
மேற்படி கிளோஸ்	,,	12	0	0
ஸ்ரீமத் பாகவத புராணம்	,,	6	0	0
ஸ்ரீ கந்தபுராண வசனம்	,,	5	0	0
ஆதிபர்வம் தனி (ராயல் சயிஸ்)	,,	2	0	0
விராடபர்வம் தனி (ராயல் சயிஸ்)	,,	2	0	0
ஸ்ரீராமர் அஸ்வமேதயாகம்	,,	2	0	0
பெரியபுராண வசனம்	,,	2	0	0
ஸ்ரீமகா பக்தவிஜயம் 1-ம் பாகம்	,,	2	0	0
மேற்படி 2-ம் பாகம்	,,	2	8	0
மேற்படி 3-ம் பாகம்	,,	2	8	0
ஸ்ரீ விஷ்ணுபுராணம்	,,	2	0	0
விக்கிரமாதித்தன் கதை திக்கு	,,	2	0	0
மேற்படி தின்	,,	1	4	0
தருமர் அஸ்வமேதயாகம்	,,	1	0	0
பஞ்சபாண்டவர் வனவாசம்	,,	1	0	0
மதனகாமராஜன் கதை	,,	0	12	0
நளச்சக்கரவர்த்தி கதை	,,	0	10	0
அபிமன்னன் சுந்தரிமாலை	,,	0	12	0
கருடபுராண வசனம்	,,	0	8	0
தேசிங்குராஜன் கதை	,,	0	6	0
அல்லியரசாணிமாலை	,,	0	8	0
கிருஷ்ணன் தூது	,,	0	8	0
கோவிலன் கதை	,,	0	8	0
மயிலிராவணன் கதை	,,	0	8	0
பவளக்கொடி மாலை	,,	0	8	0

விலாசம்:

அ. இரங்கசாமி முதலியார் ஸன்ஸ்

24, தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை.